# ரசனையின் ஒலி

(ரசிகமணி டி. கே. சி.யின் கடிதங்கள்)

Peacock Publications

RASANAIYIN OLI A collection of letters by T K. Chidambaranatha Mudaliar ● First Edition: December 1984 ● Published by Peacock Publications 12 First Street North Gopalapuram Madras 600 086 ● Printed at Rasana Offset Prints 275 Royapettah High Road Madras 600 014 ● Price: Rupees Twelve

## நன்றி

இக்கடிதத் தொகுப்பு வெளிவரக் காரணமாய் இருந்த நண்பர்கள் திருநாரணபுரம் லா கி. இராமானுஜம் B.A.க்கும் புதுக்கோட்டை பா கிருஷ்ணமூர்த்தி B.Sc., M.A., M.Ed.க்கும்

# பதிப்பகத்தார் குறிப்பு

டி. கே. சி. மறைந்து இரண்டு தலைமுறைகள் வந்துவிட்டன. இந்தக் காலவெளியில் தமிழ் இலக்கியத்திலும் அதன் திறனாய்வுகளிலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. டி. கே. சி. — தமிழ்க் கவிதையை — குறிப்பாக கம்பராமாயணத்தை ரசனை முறையில் போற்றி தம் வாழ்நாள் முழுவதும் பேசிவந்தார். அவரைப்பற்றி அறியப்படுவது என்னவென்றால், வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறு எனப் பிரித்து வாழ்ந்தவர் அல்ல. அதாவது, வாழ்வு வேறு, கலை வேறு எனப் பாகுபடுத்தி அழகு என்பதை தனியானதொரு கலை உணர்ச்சியாகப் போற்றிப் பேண வேண்டும் என்ற கருத்துடையவர் அல்லர் டி. கே. சி. இவரின் சமகாலத்தவரான கலாயோகி டாக்டர் ஆனந்த குமாரசாமியும் இதே கருத்தைக் கொண்டவர். அறிவுலகம் முழுவதும் ஆனந்த குமாரசாமி தெரியப்பட்டவர். ஆனால் டி. கே. சி.யை தமிழரான நாம் மட்டுமே அறிந்திருக்கிறோம். இவ்விருவரும் தமிழர்களே என நாம் பிரக்ஞை கொள்ளும்போது நமக்கு பெருமையாகத்தான் இருக்கிறது. நியாயமான பெருமை. வரும் தலைமுறைகளில் இவ்வாழ்வுக் கலைஞர்களான இவ்விருவர்களும் குறைந்தபட்சம் அறியப்படுவார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனந்த குமாரசாமி போல் அல்லாமல், டி. கே. சி. எழுதுவதில் நம்பிக்கையே அற்றவர். அவர் எழுதினது என்று வெளிவந்தவை எல்லாம் பத்திரிகை ஆசிரியர்களின் விடாப்பிடியான அன்புத் தொல்லையினால் வந்தவைதாம். தமிழ்க் கவிதைகளைப்பற்றித் தம் நண்பர்களிடம் பேசிப் பேசி அளவளாவுவதிலும், கடிதங்கள் எழுதுவதிலும் சலிப்பே அடையமாட்டாராம். டி. கே.சி. அப்படி தம் நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள் நூற்றுக் கணக்கானவை. இதுவரை, இரண்டு கடிதத் தொகுப்புகள், ஒன்று தொ.மு. பாஸ்கரனாலும் (1961) இன்னொன்று திரு எஸ். மகராஜனாலும் (1979) வெளிவந்துள்ளன.

அவரிடம் மற்றவர்கள் கொண்ட நட்பு இலக்கியத்தின் அடிப்படையில் உருவானதுதான். அப்படி ஆனவர்களில் ஒருவர்தான் திருச்சியில் வாழும் திரு பட்டாபி அவர்கள். அவர் தனக்கு டி. கே. சி. எழுதிய அத்தனை கடிதங்களையும் கருவூலமாகக் காப்பாற்றி வைத்திருக்கிறார்.

திரு. பட்டாபி அவர்களிடம் இருக்கும் டி. கே. சி. கடிதங்களின் இருப்பு புதுக்கோட்டை பா. கிருஷ்ணமூர்த்தி M. A. B. Sc., M. ed., மற்றும் திருநாராயணபுரம் லா. கி. இராமானுஜம் B. A. அவர்கள் மூலம் அறிய வந்தது.

திரு. பட்டாபி, சிற்பம், ஓவியம், கோயில்பற்றி அரிய பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவைகள் நூலாக வரவேண்டியவை. பெரிய கலாரசிகர். குறிப்பாக, கர்னுடக சங்கீதத்தில் ஆழ்ந்த கலா ரசனேயும் ஞானமும் உடையவர். டி. கே. சி.யை முதன் முதலாக ரயில் பயணத்தில் சந்தித்தாராம் பட்டாபி அவர்கள். இச்சந்திப்புபற்றி திரு.பட்டாபி அவர்கள் கூறியது: ''விடுமுறை முடிந்ததும், கல்லூரிக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். லயலோ கல்லூரியில் பி. ஏ. படிக்கிறேன். ரயிலில் பயணம். என் சீட்டிற்கு எதிரே ஒருவர் உட்கார்ந்திருந்தார். அழகாக இருந்தார். பார்க்கப் பார்க்க அழகாக இருந்தார். செக்கச் சிவந்த மேனி. பார்த்துக்கொண்டே இருந்தார். முகத்தில் என்ன காந்தம்? அவர் என்னே ஏறிட்டுப் பார்த்தார். என் பெயரைக் கேட்டார். 'பட்டாபி' என்றேன். அடே அப்பாடா என்ன குதூகலம்! என்னேப்பற்றிக் கேட்டார். அதுதான் முதல் சந்திப்பு. ஆனுல் எவ்வளவோ பேசினேம். தூங்கவே இல்லே. சிலப்பதிகாரம்பற்றிச் சொன்னேன். அதில் ஒரு காண்டம் இடைச்செருகல் என்றேன். நான் சொன்னது தப்பாக இருக்குமோ எனப் பட்டது. சமஸ்கிருதத்தைத்தான் நான் என் பி. ஏ. பாடமாக எடுத்திருக்கிறேன். நாங்கள் வீட்டில் பேசுவது தெலுங்கு. எனக்கு அவ்வளவாக தமிழ் தெரியாது என்றேன். உடனே அவர் சொன்னுர். ''என்ன சந்தோஷமாக இருக்கிறது. இப்போது என் வேலே மிகவும் லகுவாகிவிட்டது. உங்கள் மூளேயிலிருந்து இடித்துத் தள்ள வேண்டியது எதுவும் இல்லே'' தமிழையும், தமிழ்க் கவிதையையும் எடுத்த எடுப்பிலேயே என்னே அனுபவிக்க வைத்துவிட்டார்.'' அன்று ஏற்பட்ட நட்பு, டி. கே. சி.யின் இறுதிநாள் வரை நீடித்து செழித்து இருந்தது. இங்கு வெளியிடப்படும் கடிதங்களே அதற்குச் சான்ருகும்.

டி. கே. சி. தமிழ்க் கடித இலக்கியத்தின் முன்னேடி. அவரின் கடிதங்கள் அழியாமல் காப்பாற்றப்பட வேண்டும். அவர் எழுதிய கடிதங்கள் இருந்தால் அனுப்பிவையுங்கள் அல்லது வைத்திருக்கும் நண்பர்களேப்பற்றி விவரம் அறிவித்தால், அவர்களே அணுகி வெளியிட முயற்சிப்போம்.

பதிப்பகத்தார்

# அறிமுகம்

காலம் காலமாகத் தமிழ் இலக்கிய உலகில் பல அறிஞர்கள் தோன்றி வந்திருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மொழியை வளம் பெறச் செய்துள்ளார்கள்.

அவர்களுள் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் செய்து விட்டுப் போயிருக்கும் பணி தனித்தன்மை வாய்ந்தது.

தமிழ் மொழி, கவிதை, கலே, பண்பாடு என்றெல்லாம் அவர்கள் தொட்ட துறைகளில் எல்லாம் தனியானதொரு முத்திரை குத்தப்பட்டிருக்கிறது.

அன்னியர்களின் ஆட்சி நடந்த காலத்தில், ஆங்கில மோகம் தலேவிரித்தாடிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழ் மொழியின் மேன்மையையும், அதன் அழகையும், வல்ல மையையும் எடுத்துக் காட்டியவர்கள் ரசிகமணி அவர்கள்.

கவியாகட்டும், கலேயாகட்டும், கல்வியாகட்டும் நேருக்கு நேராகச் சொல்லி ஒரு சிலருக்குத்தான் விளங்க வைக்க முடியும்; ஒரு சிலரைத்தான் அப்படியே அனுபவிக்கச் செய்ய முடியும், ஒரு கூட்டம் முழுவதையும் அனுபவிக்கச் செய்ய முடியாது என்பது அவர்களது நம்பிக்கை.

அதே போன்று எழுத்தில் எடுத்துச் சொல்லி எதையும் முழுமையாக அனுபவிக்கவோ, உணரவோ செய்துவிட முடியாது என்றும் சொன்னவர்கள் ரசிகமணி டி.கே.சி. அவர்கள்.

இவ்விரு கொள்கையின் அடிப்படையில்த்தான் மேடைப் பேச்சையும் அவர்கள் அவ்வளவாக விருப்பவில்லை என்பதையும் தமது தனிக் கொள்கைகளை விளக்கி நூல்கள் கட்டுரைகள் எதுவும் அவர்கள் படைக்கவில்லை என்பதையும் நாம் காண வேண்டும்.

ரசிகமணி அவர்களின் கோட்பாடுகளும், சிந்தனைகளும் அவர்களால் நூல்களாக எழுதப்பட்டு வெளி வராமல் போனது தமிழுக்குப் பெரியதொரு இழப்பே.

தனித் தனியாக டி. கே. சி. அவர்கள் எழுதியிருக்கும் கவிதை விளக்கக் கட்டுரைகளே நமக்குக் கிடைத்திருக் கின்றன. அவைகளில் ஆங்காங்கே சில இடங்களில் அவர் களது வாழ்க்கைக் கொள்கைபற்றி சிறிதளவு அறிய முடிகிறது.

ஆனால், ரசிகமணி அவர்களின் கடிதங்களோ அவர்களின் ஆளுமையின் பல கோணங்களையும் காட்டிக்கொண்டிருக் கின்றன.

ஒவ்வொரு கடிதமும் டி. கே. சி. அவர்களின் கொள்கை களையும், வாழ்க்கை நோக்கத்தையும் எடுத்துக் காட்டும் சாட்சியங்களாக நிற்கின்றன.

கவிதை, கலை, பண்பாடு, கல்வி, சமயம், வாழ்க்கை இப்படிப் பல துறைகளையும் ரசிகமணி அவர்கள் உள்ளுணர்வோடு பார்த்து வந்தவர்கள்.

ரசிகமணி அவர்களின் கடிதங்களில் அந்த உண்மைகள் ஒளிவீசிக் கொண்டிருக்கும்.

''கவிகளையே விஷயமாகக் கொண்டு எழுதி வருகிறேன். சமயத்தைப் பற்றி எழுதுவது அனேகமாகக் கிடையாது. **எல்லாம் பேச்சுத்தான். அதுவும் சிறு கூட்டத்துக்குத்தான்''** என்று ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார்கள் டி. கே. சி, அவர்கள்.

சிறு கூட்டத்தினர்க்குப் பேசி விளக்குவதே அவர்கள் விரும்பிச் செய்த இலக்கிய ரஸனைப் பணியாக இருந்து வந்திருக்கிறது. அந்தக் கூட்டத்தாரை 'சத்சங்கம்' என்று அன்போடு பாராட்டிச் சொல்லுவார்கள் ரசிகமணி.

டி. கே. சி. அவர்கள் தாம் அனுபவித்ததை, தாம் கண்ட உண்மையை, ஒத்து உணரும் அன்பர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். அந்த அன்பர்கள் அதில் ஈடுபட்டு அனுபவிப்பதைப் பார்த்து அவர்கள் ஒரு நிறைவும், மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

அப்படி ஒத்து அனுபவிப்பவர்கள் மத்தியில் உரையாடும் போது அவர்களுக்கு உத்ஸாகம் கரைபுரண்டு ஓடும். அதனால் பல அரிய உண்மைகளும், அனுபவங்களும் அவர் களிடமிருந்து விளக்கம் பெற்று வரும்.

அதே போன்று அந்த உற்ற நண்பர்களுக்குக் கடிதம் எழுதும் போதும் டி. கே. சி அவர்களின் அனுபவங்களும் உண்மை விளக்கங்களும் உணர்ச்சியோடு கொப்பளித்த வண்ணம்வெளிப்படும்.

நண்பர்கள் டி. கே. சி. அவர்களுக்குக் கடிதம் எழுதும் போது ஒரு சந்தேகத்தையோ அல்லது தாம் அனுபவித்து ரஸித்த ஒரு விஷயத்தையோ எழுதிவிடுவார்கள் சில சமயம்.

அந்தக் கடிதத்துக்குப் பதில் டி. கே. சி. அவர்களிட மிருந்து வரும்போது அதில் பல அரிய உண்மைகளுக்கு விளக்கமும் டி. கே. சி. அவர்களின் தனித்த பார்வை தரும் ஒளியும் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

அந்தக் கடிதங்கள் எல்லாம் இன்று சாகா வரம் பெற்ற இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

அவைகள் 'டி. கே. சி. யார்' என்று தமிழ்ச் சமுதாயத் துக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

சங்கீதம், பரத நாட்டியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் சம்பந்தமான தம் சிந்தனைகளைப் பெரும்பாலும் ஸ்ரீ ஜி. ஸி. பட்டாபிராம் அவர்களுக்கே எழுதியிருக்கி றார்கள் டி.கே.சி. அவர்கள்.

முதன்முதலில் ரசிகமணியோடு ஸ்ரீ பட்டாபி அவர்கள் அறிமுகம் ஆனபோது வயதில் மிகவும் இளையவராய் இருந்தார்.

ஆனால் அந்த இளம் வயதிலேயே தம் தந்தையார் ஸ்ரீ ஜி.என். சக்கரபாணி செட்டியார் அவர்கள் நிறுவிய மோட்டார் கார் வியாபாரத்தில் மிகவும் திறமையுடன் ஈடுபட்டு வந்தார்.

வியாபாரத்தில் நிதானமும், முன்யோசனையும், நாணயமும், பக்குவமும் வேண்டும். அவைகள் அனைத்தும் ஸ்ரீ பட்டாபி அவர்களிடம் குறைவின்றி இருந்தன. அவருடைய ஆற்றல் பல்வகையாலும் வெளிப்பட்டு வந்ததன் காரணமாக வணிகத்துறையில் சிறப்பான இடம் அவருக்கு இருந்து வருவதைப் பார்க்கிறோம்.

திருச்சியிலிருந்த கிளை நிறுவனத்தின் முழுப் பொறுப்பும் ஸ்ரீ பட்டாபி அவர்களிடம் தந்தையாரால் ஒப்படைக்கப் பட்டது.

ஸ்ரீ பட்டாபி அவர்கள் வியாபாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்றாலும் இலக்கியம், கலை முதலிய துறைகளிலும் அவர் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

பொதுவாக வியாபாரத்தில் ஈடுபாடு மிகுதியாய் உள்ளவர்கள் நுண்கலைகளில் ஈடுபடுவதும், அதற்காக நேரத்தைச் செலவழிப்பதும் ரொம்ப அபூர்வம்.

ஸ்ரீ பட்டாபி அவர்கள் ஒரு விதிவிலக்காக இருக்கிறார் என்று சொல்லலாம்.

இளைஞர் பட்டாபியின் துடிப்பும், இலக்கியம், நுண் கலைகள் சம்பந்தமான தீர்க்கமான தெளிவான பார்வைகளும் ரசிகமணியைக் கவர்ந்துவிட்டதில் வியப்பில்லை.

யாரிடமாவது சிறந்த பண்பாடோ, கலை ஞானமோ, இலக்கிய ஈடுபாடோ, செயலாற்றலோ, குழந்தை உள்ளமோ இருப்பதைக் கண்டுவிட்டால் ரசிகமணி அவர்கள் அப்படிப்பட்டவர்களிடம் ஒட்டிப் பழக ஆரம்பித்துவிடுவார்கள்.

பிறகு தம் நண்பர்களிடமெல்லாம் அவரைப்பற்றி பாராட்டிச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். அப்படி ரசிகமணி உள்ளத்தைக் கவர்ந்தவர்களுள் முக்கியமானவர் ஸ்ரீ ஜி.ஸி. பட்டாபிராம் அவர்கள்.

ஸ்ரீ பட்டாபி அவர்கள் டி. கே. சி. அவர்களுடன் பழக ஆரம்பித்த பிறகு ஸ்ரீ பட்டாபி அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் டி.கே.சி. பக்தர்கள் ஆய்விட்டனர்.

ரசிகமணி திருக்குற்றாலத்திலிருந்து சென்னை போகும் போதெல்லாம் மதுரை ரயிலடியில் ஸ்ரீ பட்டாபி அவர்களின் இளைய சகோதரர் ஸ்ரீ சுப்பு கிருஷ்ணன் அவர்கள் இரவு உணவுடன் வந்து சந்திப்பார். அதில் அவருக்கு ஒரு அலாதியான சந்தோஷம். ஒரு கடமையைச் செய்த நிறைவு.

அகால நேரத்திலும் திருச்சி சந்திப்பு ரயில் நிலையத்தில் ஸ்ரீ பட்டாபி அவர்கள் டி. கே. சி.யைப் பார்ப்பதற்காக வந்து நிற்பார். அங்கு ஸ்ரீ மீ. ப. சோமு, ஸ்ரீ ரா. பார்த்த சாரதி போன்ற நண்பர்களும் வந்துவிடுவார்கள்.

திருச்சி ஸ்டேஷனில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் சுமார் அரைமணி நேரம் நிற்கும். இந்த இனிய நண்பர்களுடன் ரயில்வே கம்பார்ட்மெண்டிலேயே கவிதை ரஸானுபவத்தில் மூழ்கிவிடுவார்கள் ரசிகமணி அவர்கள்.

திருச்சி ரயிலடியில் வந்து சந்திக்கும் நண்பர்களிடையில் எப்பவாவது ஸ்ரீ பட்டாபி இல்லை என்றால் ரசிகமணிக்கு எப்படியோ இருக்கும்.

ஸ்ரீ பட்டாபி அவர்கள் இசை மரபு, சிற்பக் கலை, தொல் பொருள் ஆராய்ச்சி, தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம் எல்லாவற்றிலும் தேர்ச்சி மிக்கவர்கள். சிற்பக் கலை, தொல்பொருள் ஆய்வு சம்பந்தமாகப் பல ஆண்டுகளாகக் 'கலைமகள்' இதழில் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார்கள். தமிழ்நாட்டுக் கோயில்கள்பற்றியும் அங்குள்ள சிற்பங்களின் பெருமைபற்றியும் புகைப்படங்களோடு 'இல்லஸ்ட்ரேட் வீக்லி'யில் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதிய இவரது பணி குறிப்பிடத்தக்கது.

ரசிகமணி டி .கே. சி. தமக்கு எழுதிய கடிதத் தொகுப்பு ஒன்றை ஸ்ரீ பட்டாபி அவர்கள் இப்போது வெளிக் கொணர்வது தமிழ் மக்களுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அவர்கள் ஆற்றும் சீரிய தொண்டாகும்.

இந்தத் தொகுப்பிலே இடம் பெறும் டி. கே. சி. கடிதங்களிலே 2. 9. 44 தேதியிட்ட கடிதம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய கடிதமாகும்.

இசைபற்றிய டி. கே. சி. யின் கொள்கை என்னது என்பதையும் பாவ இசை என்பது எது என்பதையும் அந்தக் கடிதம் அற்புதமாக விளக்குகிறது. கலை உலக வரலாற்றிலே, குறிப்பாக இசை பற்றிய வரலாற்றிலே தனித்த இடம் பெற இருப்பது அக்கடிதம்.

ரசிகமணி அவர்கள் எல்லோரிடமும் அளவற்ற அன்பு கொண்டு பழகினார்கள். அந்த அன்பை எப்படி எல்லாமோ வெளிப்படுத்தி வந்தார்கள். நண்பர்கள் செய்த உபசாரத்தையும் உதவியையும் பெரிதும் பாராட்டினார்கள். தம் நன்றியறிதலை டி. கே. சி. அவர்கள் தெரிவிக்கும் முறையே தனி அழகுடன் இருந்தது.

ரசிகமணி அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்த இது போன்ற உயரிய பண்புகள் ஸ்ரீ பட்டாபி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில் விரவி இருப்பதை நாம் படித்து உணரலாம். அதுவே ஒரு நல்ல அனுபவமாகும் நமக்கு.

ரசிகமணி அவர்களைப்பற்றித் தெரிந்தகொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் பெருகி வரும் நேரம் இது.

இந்தத் தருணத்தில் டி. கே. சி. அவர்களின் கடிதங்கள் புஸ்தகமாய் வெளி வருவதைத் தமிழ் அன்பர்கள் பலரும் விரும்பி வரவேற்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

இந்த நூலை வெளிக்கொணர நினைத்த நல்லவர் ஸ்ரீ பட்டாபிராம் அவர்களுக்கும் இதை அச்சிட்டு வெளியிடும் ஸ்ரீ சச்சிதானந்தம் அவர்களுக்கும் தமிழ் இலக்கிய ரசிகர்களின் நன்றி என்றும் உண்டு.

**தீப. நடராஜன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார்

கல்கி
சென்னை
22-8-44

அருமை நண்பர் பட்டாபிராம் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

எவ்வளவு பிரயத்தனம் செய்தும் நாம் இங்கு சந்திக்க முடியாது போய்விட்டது. ஆனால் நான் திருச்சிராப் பள்ளிக்கு வருகிறேன். 25உ காலை வந்து சேருகிறேன். 26உ பிற்பகல்தான் 1 மணி ரயிலில் குற்றாலத்துக்குப் புறப் படுகிறேன். அருமை அன்னைக்கு என் நமஸ்காரம் சொல்ல வேணும். எப்படியும் தங்களைப் பார்க்கிறேன்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
27-8-44

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நேற்று இரவு (இன்று காலையுந்தான்) $1\frac{1}{2}$ மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். மதுரை வரையும் பிரயாணம் சௌக் கியமாகவே இருந்தது. மதுரைக்கும் விருதுநகருக்கும் இடையே கம்பார்ட்மெண்டில் ஒரே கூட்டம். ஆதியாழ் வார்கள் மூவர்களுக்கும் ஏற்பட்ட நெருக்கடி மாதிரிதான். விருதுநகர் கழிந்த பிறகு சௌக்கியமாய்ப் போய்விட்டது. தென்காசி ஸ்டேஷனுக்கு என்னுடைய வண்டி வந்தி ருந்தது. யாதொரு அசௌக்கியமும் இல்லாமல் குற்றாலம் வந்து சேர்ந்தேன்.

நேற்றுத் தங்களுக்கு வேண்டிய மட்டும் சிரமம் கொடுத்து விட்டேன். தங்கள் குமாஸ்தா டிக்கட்டெல்லாம் வாங்கிக் கொண்டு நண்பர் மணி அவர்கள் வீட்டுக்கு வந்தார். அவர் வருவதற்கு முன்னதாகப் புறப்பட்டு நான் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டேன். இப்படி எல்லாம் நடக்கும் என்று ஒருவாறு எதிர்பார்த்தேன். அதற்காக ஸ்டேஷனுக்கு வருகிற பாதையில் குமாஸ்தாவைக் கண்டால் காரை நிறுத்தி டிக்கட்டுகளை வாங்கிக்கொள்ளும்படியாக டிரைவரிடம் சொல்லியிருந்தேன். ஆனால் சந்தித்துக் கண்டு கொள்ள முடியவில்லை. தங்கள் கார் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்துவிட்டது. டிக்கட்டு ஆபீஸில் விசாரித்ததில் டிக்கட்டுகளை எல்லாம் வாங்கியாய் விட்டது என்று தெரிந்துகொண்டோம். எனக்குக் கவலை தீர்ந்தது. சிறிது நேரத்தில் நண்பர் மணி டிக்கட்டுகளை ஆள்வசம் எனக்கு அனுப்பிவிட்டார்கள். ரொம்ப திருப்தியாய்ப் போய் விட்டது. All is well that ends well. டிக்கட்டு வாங்கின தொகையை (ரூ 20 – 15-0) வந்த ஆள்வசம் கொடுத்து அனுப்பினேன். தங்களுக்கு வந்து சேர்ந்திருக்கும் என்று நம்புகிறேன்.

திருச்சி வந்து இறங்கியதும் வேண்டிய சௌகரியங்கள் எனக்குச் செய்து கொடுக்கச் சித்தமாயிருந்தீர்கள். ஆனால் மணி இடங் கொடுக்கவில்லை. கொடுக்காவிட்டால் என்ன, அருமை அருமைதானே. ரயிலை விட்டு இறங்கியது முதல் மறுபடி ரயிலில் ஏறும் வரை தங்கள் பாதுகாப்பில் தான் இருந்தேன். தாங்கள் என்னிடம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிந்ததும் மற்றவர்கள் இல்லாத உபசாரம் எல்லாம் செய்து தீர்த்துவிட்டார்கள். அன்புக்கு அத்தனை வியாபகச் சக்தி இருக்கிறது.

சங்கீதக் கச்சேரியைத் தாங்கள் அருமையாய் அனுபவித்துக் கொண்டிருந்தீர்கள். அந்த அனுபவத்தைப் பார்த்துப்

பார்த்து அனுபவித்துக்கொண்டிருந்தேன் நான். சிலர் ஒன்றை அனுபவிக்கவே பயப்படுவார்கள். ஏதோ பயப் படாமலே அனுபவித்துவிட்டார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த அனுபவத்தை வெளிக்காட்ட ரொம்ப பயப்பட்டுவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் நிலையை (செயல்தான் இல்லையே) எப்படி நாம் அனுபவிக்க முடியும்.

ஒத்த உணர்ச்சி வேண்டும் என்று சொல்லுவார்கள். வெளிக்காட்டினுல்தானே உணர்ச்சி உண்டென்று சொல்ல லாம். அல்லாதபட்சம் நாமும் மரத்தூணும் சேர்ந்து "நாங்கள் ஒத்த உணர்ச்சியுள்ளவர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் கணக்குத்தான்.

நண்பர் மணி எனக்கு 'சீட்' தங்களுக்குப் பக்கத்திலேயே வைத்திருக்கிறதென்று சொன்னுர். எவ்வளவு பிரயோ சனமாய்ப் போய்விட்டது.

ரயிலுக்குப் போகும் அவசரத்தினுல் தங்களோடு சாவகாச மாக இருந்து பேச இயலாது போயிற்று. பெரிய நஷ்டந் தான். ஆனுல் முதல் நாள் செய்த அபராதத்துக்கு ஏதோ பர்த்தி செய்த மாதிரி இருந்தது. அவ்வளவுக்குத் திருப்தி தான்.

கலையைப்பற்றி முக்கியமாக சங்கீதத்தைப்பற்றிக் கொஞ்ச மாவது பேச நேர்ந்தது. பாவ சம்பந்தமான கலை அம்ஸத்தைப்பற்றித் தங்களிடம் ரொம்பப் பேச வேண்டும் என்று ஆசை. காரணம் மதுரை திருச்சிராப்பள்ளி ஆகிய இரண்டு நகரங்களிலும் தங்களுடைய அரிய ஆதிக்கம் இருக்கிறது. அந்த நகரவாசிகளுக்கு உண்மை யான விளக்கம் ஏற்படும், தங்களால் ஏற்படும் என்பது உறுதி.

பாருங்கள். டாக்டர் காளமேகம் தங்களைத் தேடித்தானே வந்தார். பெட்ரோல் விஷயம் ரொம்பச் சின்ன விஷயம்.

பண்பாடுதான் அவரைத் தங்களிடம் இழுத்தது. டாக்டருக்கு என் நமஸ்காரம் சொல்ல வேணும். வீட்டில் அம்மா எல்லாரும் சௌக்கியந்தானே. இப்போது குற்றாலத்தில் கூட்டம் இல்லே. ஆனல் மழையும் இல்லே. அருவி சுமாராய் விழுகிறது.

மிக்க நன்றியுடன்
தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
**2-9-44**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். நண்பர்கள் விஷயத்தில் என் பாக்கியமே பாக்கியம். ஆம். ராஜாஜி என்னிடம் மிக்க அன்புடையவர்கள். அப்படி அன்பு பிறப்பதற்கு சந்தித்தும், உடன் உறைந்தும், அளவளாவியும் இருக்கும் அடிப்படையான காரணங்கள் உண்டு. ஆனல் தங்கள் விஷயத்தில் அது ஒன்றும் கிடையாது. ஏதோ சில விஷயங்களில் தங்கள் இதயத்தோடு என் இதயம் ஒட்டுவதாகத் தெரியவந்தது. அதிலிருந்து தங்களுக்கு அன்பு பிறந்துவிட்டது. இத்தகைய அன்பை (வைரத்தை மதிக்கிற காரியம் என் துறை அல்ல) மதிக்கத் தெரியாதா எனக்கு?

எப்படியோ இறைவன் தங்களுக்கு இதயப் பாங்கை ஏராளமாகக் கொடுத்துவிட்டார். சங்கீதத்தைத் தாங்கள்

எப்படி எப்படி எல்லாமோ அனுபவிக்கிறீர்கள். இவ்வளவு சிறு வயதில் இந்த அனுபவம் கிடைப்பது அரிது. சங்கீதம் போலவே இலக்கியத்தையும் அனுபவிக்கிறீர்கள். அதை விட என் போன்ற சிநேகிதர்களை அனுபவிக்கிறீர்கள். இதையெல்லாம் எண்ண எண்ண எனக்கு ஒரே ஆனந்த மாய் இருக்கிறது.

தங்கள் அன்பு, உற்றார் உறவினர் எல்லாருக்கும் பொது வாக அல்லவா ஆய்விட்டது! அருமை மனைவியார், அன்னையார் எல்லோருக்கும் என்னிடம் எவ்வளவு அன்பு! ரயிலேறியதும் தங்கள் அருமைத் தம்பியார் தாகத்துக்குத் தம்ளரை நீட்டிய அழகை மறக்கவே முடியாது. அதோடு நிற்கவில்லை. மதுரையிலிருந்து கடிதம் எழுதியிருக் கிறார்கள். ''தாங்கள் கம்பராமாயணத்தைப்பற்றி சம்பா ஷணை செய்தது இன்னும் என் ஞாபகத்திற்கு வருகிறது. தாங்கள் மதுரைக்கு வரும்போது, வரவை எனக்கு முன் னடியே தெரிவிப்பீர்களானால் தங்களுக்கு வேண்டிய வசதி களை ஏற்பாடு செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.''

பார்த்தீர்களா? தங்கள் அன்பின் வியாபகம் எப்படி இருக் கிறது?

என்னைத் தங்கள் குடும்பத்துக்குத் தத்து எடுக்கத்தான் பார்க்கிறீர்கள். இதைவிட பாக்கியம் ஒன்றிருக்கவா செய்கிறது? தங்கள் மைத்துனர் G. ராமாமி அவர்களும் என்னை மதுரைக்கு அழைக்கிறார்கள். ''தாங்கள் ஊட்டிய 'காலத் திகிரி' 'ஞாலத் திகிரி' என்ற இரு நேத்திரங்களுக்கு சமானமான சொற்கள் என் செவியில் ஓங்காரம்போல் சப்தித்து வருகின்றன'' என்றெல்லாம் ரொம்ப ஆர்வத் துடன் எழுதுகிறார்கள். பண்பாட்டை ஆதரிக்க எத்தனை பாண்டியர்கள்! எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி.

இனி இசைக்கு வரலாம்.

கூடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருப்பதற்காக ஒரு விஷயத்தைக் குறியாக நட்டுவைத்துக்கொண்டீர்கள். அதாவது "தமிழிசை என்பது பாவ இசை" என்று நான் சொல்லுவதாக. நான் அப்படிச் சொல்லவில்லை தான். ஆனாலும் விவாதம் ஒன்றை நடத்தி விவாதத்தைத் தெளிவுப்படுத்துவதற்கு அது ஒரு வசதிதானே?

உலகம் எங்கும் சங்கீதம் இருக்கிறது. அது மாத்திரமல்ல. அந்த சங்கீதத்தில் பாவமுள்ள சங்கீதம் என்றும் பாவ மற்ற சங்கீதம் என்றும் இருக்கின்றன.

மேல்நாட்டில் நடைபெறுகிற சங்கீதம் எல்லாம் அநேக மாய் ஜெர்மன் சங்கீதத்தை தழுவியதுதான். மேலான ஜெர்மன் சங்கீத கர்த்தாக்கள் சங்கீதத்தை ஜெர்மன் சாகித்தியத்தோடு சேர்த்து மிக்க உணர்ச்சிபாவம் விளையும்படி செய்தார்கள். அந்த சாகித்தியங்களுக்கு மேல்நாட்டு முறைப்படி சுரம் அமைத்துவைத்தார்கள். பியானேவில் அந்த சுரத்தை அழுத்தி ஏதோ பாடியும் விட்டார்கள். ஜெர்மன் பிராந்தியத்தையும் இங்கிலீஷ் 'சானலை'யும் கடந்துபோனபோது சுரமும் பியானேவும் தான் மிஞ்சின. ஜெர்மன் பாஷையின் உணர்ச்சி, ஊக்கம், பக்தி முதலிய உயிரான அம்சங்கள் எல்லாம் ஜெர்மன் பூமியிலேயே தங்கிவிட்டன.

ஆங்கில நாட்டின் சங்கீதம் அது காரணமாக உணர்ச்சி யற்றுப்போய்விட்டது. கேலிக்கூத்தாகவே போய்விட்டது. கார்லைல் ஆசிரியருக்கு வெகுகோபம் வந்துவிட்டது. பல்லைக் கடித்தார்; தலை ரோமத்தைப் பிய்த்தார்.

Music has, for a long time past, been avowedly mad diverced from sense and reality of things

(இதய ஒலி; பக்கம் 171)

— இப்படியெல்லாம் கதறுகிறர் — ஆங்கிலேயரது சங்கீதத்தைப்பற்றியும் சங்கீத கொள்கையைப்பற்றியும்.

தமிழ்நாட்டுக்கு வருவோமானுல் இங்கேயும் சங்கீதத்தை இரண்டு விதமாகப் பிரிக்க வேண்டும். பாவமான சங்கீதம் பாவமற்ற சங்கீதம் என்பதாக. தெலுங்கு சங்கீதத்திலும் அப்படித்தான். தெலுங்கு சாகித்தியத்தை உணர்ச்சியோடும் பக்தியோடும் பாடும்போது அது பாவ சங்கீதம். வெறும் விளையாட்டாக, உணர்ச்சியில்லாமல் பாடும்போது சாமான்யம் என்று சொல்லிவிட வேண்டியதுதான். ஏதோ காதின் சவ்வுக்கு சுகமாயிருக்கலாம். அவ்வளவுதான். Tympanic என்று பெயரிட்டு அழைக்கலாம்.

தெலுங்குக்குச் சொன்னது தமிழுக்கும் அப்படியே பொருந்தும். ராகம் பாடும்போது தமிழருக்கும் தெலுங்கருக்கும் பொதுதான். இருவரும் அனுபவிக்கலாம். அதில் பாஷை கலப்பில்லாததால் இருவருக்கும் பொது என்கிறேம். தெலுங்கர்களும் — சில பேராவது கேட்டு வந்திருக்கிற காரணத்தால் — அவர்கள் ராகங்களை அனுபவிக்கிறர்கள்.

ஆனல், தெலுங்கு தேசத்துக்கு வடக்கிலுள்ள பங்காளிகள் ராகங்களை — சங்கராபரணம், தோடி போன்ற கர்நாடக ராகங்களை — கேட்டு அனுபவிக்க முடியாது. ஆங்கிலேயரும் அனுபவிக்க மாட்டார்கள். ஏதோ சுரங்கள் அப்படி ஏறுகின்றன, இப்படி ஏறுகின்றன என்று அறியலாம். ஆனல் அனுபவிக்க முடியாது. அனுபவிக்கிறேம் என்று அயலார் சொல்லும்போது ஏதோ முதுகைத் தட்டிக்கொடுக்கிற காரியந்தான் என்று நாம் மனசில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ராகம் பாடுவது என்பது கெண்டியை வைத்துக்கொண்டு சுண்ணும்புக் கோலம் போடுவது போன்றது. கை லாகவத்தைக் கண்டு அனுபவிக்கிறேம். வளைவும் நெளிவும்

அந்த லாகவத்தையும் காட்டுகின்றன. அதுபோல சாரீரத்தின் லாகவத்தைக் கண்டு ராகத்தின் நயத்தையும் அனுபவிக்கிறோம். ஆனால் சாகித்தியத்துக்கு வரும்போது பாவத்தை எதிர்பார்க்கிறோம். உள்ளிருக்கும் உணர்ச்சி வேகம் சங்கீதத்துக்கு ரூபம் கொடுக்கிறது.

கவியைப்பற்றி

Metre forging argument
(argument — emotional reality)

என்று மில்டன் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சங்கீதத்தில் பாவ ரூபம் என்று ஒன்று இருக்கிறது என்றும், அதுவே சங்கீதத்துக்கு லக்ஷ்யம் என்றும் தெரியவரும்.

நான் சொல்லுவதெல்லாம்: சங்கீதம் பாவ சங்கீதமாகவே இருக்க வேண்டும். தெலுங்கர்கள் பாவத்தை உணர வேண்டும் என்றால் தெலுங்கு பாஷையில்தான் சாகித்தியமும் இருக்க வேண்டும்; தமிழில் இருந்தால் விஷயம் புரியாது. உணர்ச்சியை உணர முடியாது. பாவத்தைக் காண முடியாது.

டி டி.கே.சி.  சொன்னான். காமட்ச்சட்காவில் உள்ளவர்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கும் தமிழ் சங்கீதம்தான் பாவ சங்கீதம் என்று நான் சொல்லவில்லை — அப்படிச் சொல்ல சந்தர்ப்பமும் ஏற்பட்டு இருக்காது.

ஆனால் இந்து, ஆனந்தவிகடன் பத்திரிகைகள் என்ன வெல்லாமோ என்னைப்பற்றி எழுதுகின்றன. பேனா ஓடுகிறபடி எல்லாம் எழுதுகின்றன. அப்பாவிகள் என்ன செய்வார்கள். சங்கீதத்தைப்பற்றியோ எழுத முடியாது. மனுஷர்களைப்பற்றி எழுதித்தான் பத்திரிகையை நிரப்ப வேணும். டி. கே. சி. கவியும், சங்கீதமும் ஒன்றென்று எண்ணிக்கொண்டிருக்கிறார் — என்று எழுதுவார்கள். உடனே கவிக்கும் சங்கீதத்துக்கும் சம்பந்தமே கூடாது

என்று கூசாமல் எழுதுவார்கள். அதில் அவர்களுக்கு லஜ்ஜையே இல்லை. எனக்கோ கடலைமாவுக்கும் சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியும். கடலைமாவை மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டிருக்க முடியாது. சர்க்கரையைத் தனியாய்ச் சாப்பிடவும் முடியாது. ஆனால் லட்டு செய்து கொடுத்தால்ச் சாப்பிட முடியும். இப்படிச் சொன்னால் டி. கே. சி.க்கு அபிப்பிராயம் கடலைமாவுதான் சர்க்கரை என்பதாக — என்று எழுதத் தோன்றும். ஆனால் எழுத மாட்டார்கள். அவர்களுக்கு நன்றாய்ச் சாப்பிடத் தெரியும். சங்கீதத்தைக் கேட்கத்தான் நோட்டம் தூரமாய்ப் போய்விட்டது.

பதங்களை உயர்ந்த பாவ உருவத்துக்காக — தெய்வத் தன்மை வாய்ந்தது என்று அனுபவிக்கிறேன். பக்தி உணர்ச்சியோடு கிளிக்கண்ணி, சித்தர் பாடல், காவடிச் சிந்து முதலியவைகளைப் பாடினால் பரவசம் அடையத் தான் செய்கிறேன். ஆனால் ‘சங்கதி’ ‘சங்கதி’ என்று சுரங்களைக் கொண்டு கீச்சு கீச்சுத் தாம்பலம் விளையாடு கிறதை ரொம்ப அனுபவித்துவிட முடியாது. அதோடு அபசுரமும், சுருதியின்மையும் சேர்ந்துவிட்டால் கேட்கவா வேண்டும்? அமிர்தாஞ்சனத்துக்கு ஆர்டர் பண்ண வேண் டியதுதான்!

கல்வி கலை விஷயங்களில் தாகூர் தெளிவான உண்மை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதாவது, பள்ளிக்கூடங் களிலும் யுனிவர்சிட்டிகளிலும் மூளையை வளர்க்கிற காரிய மாகத்தான் இருக்கிறது. அதற்குப் பதிலாக இதயத்தை வளர்த்தால் அளவில்லாதபடி கல்வி கலை எல்லாம் வளரும் என்பதாக. இதில் சந்தேகமே இல்லை. ஆனால் நம்முடைய கல்வி இலாகாவிற்கு அதில் நம்பிக்கை இல்லை. நாமென்ன செய்ய?

பக்கம் அதிகம் ஆய்விட்டது. தங்களுக்கு எவ்வளவோ ஜோலி இருக்கும். என் பஞ்சு வெட்டுதல் போதும். தங்

களுக்கு இப்படியெல்லாம் எழுதுவது எளிதாய் இருக்கிறது. பத்திரிகைக்கு கட்டுரை எழுதுவது என்றால் கஷ்டமாய் இருக்கிறது. காரணம் பத்திரிகை படிக்கிறவர்கள் எல்லாரும் பட்டாபிகள் அல்ல அல்லவா?

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

**C/o கல்கி**
**5-10-44**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அருமையான கடிதம் குற்றாலத்தில் வைத்தே கிடைத்தது. ரொம்ப சந்தோஷம்.

நான் இங்கு வந்து ஒரு வாரம் ஆகிறது. இரண்டு மூன்று நாளில் குற்றாலம் திரும்புவேன். அங்கே ரொம்ப ரொம்ப ஜோலி. அதனால் திருச்சியில் இறங்கித் தங்களோடு உறவாடிவிட்டுப் போக வசதியில்லை. மன்னிக்க வேணும். கலை என்றால் நித்தியமான காரியம் என்று சொல்லுவார்கள். வாஸ்தவந்தான்.

ஒரு பெண் திலகம் வைக்கிறதிலுள்ள எக்களிப்பையும் பெருமிதத்தையும் ஒருவர் 500 வருஷங்களுக்கு முன் கண்டார். வியந்தார். அவர் போய்விட்டார். அவருடைய இதயத்தில் உண்டான வியப்பும் அவரோடு போய்விட்டது. மிச்சமே இல்லை.

* * *

ஆனால் அந்த எக்களிப்பையும் பெருமிதத்தின் அழகையும் ஒரு கருங்கல்லில் வைத்தார். அது தென்காசியில் இன்றும்

இருக்கிறது. தென்காசிவாசிகளுக்கு கலை உணர்ச்சி இருக்கலாம். கலை நித்தியந்தான். இது போலவே சித்திரம், கவி இவைகளுக்கு விளக்கம் எழுதலாம். சுவரில் எழுதிவிடலாம் சித்திரத்தை. ஓலையில் எழுதிவைத்து விட்டார்கள் கவியை.

ஆனால் சங்கீதத்தை என்ன செய்ய. காற்றோடு காற்றாய் அல்லவா போய்விடுகிறது. சங்கீதக் கலைக்காரன் சிருஷ்டிகள் எத்தனை எத்தனையோ ஒழிந்துபோய்விட்டன. அப்படிப் போய்விட்டதினாலேயே சங்கீதக் கலைக்கு மதிப்பிடும் கருவி இல்லாமல் போய்விட்டது. சென்ற முப்பது வருஷங்களாக சங்கீதம் உயிர் அற்றதாய் போய்விட்டது. உயிர் அற்றது உயிர் உள்ளது என்று பகுக்கும் திறம் சாதாரண ஜனங்களுக்கும் இல்லாது போய்விட்டது. போனது போகட்டும். கிராமபோன் காரணமாக சங்கீதமும் நித்தியத்துவம் அடைகிறது. 'காலைத் தூக்கி நின்றாடும்' என்ற பாடலை எம். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மையார் அரிய பாவத்தோடு அற்புதமாய்ப் பாடியிருக்கிறார். சில நாளில் வெளிவரும். தாங்கள் எழுதவேணும். மற்றவை பின்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
*1-11-44*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் ரஸமான கடிதம் கிடைத்தது. சென்னையில்த்தான் நாம் சந்திக்க முடியாது போயிற்று.

சென்னையிலிருந்து புறப்பட்டால், வேண்டுமென்றே ரயில் வேக்காரன் அர்த்த ராத்திரியில் திருச்சி வந்து சேரச் செய்கிறன். சிநேகிதர்களைப் பாராமல் போகணுமல்லவா!

இப்போது குற்றுலம் சுமாராகவே இருக்கிறது. அருவியும் குளிக்கப் போதும். எல்லாவற்றையும்விட சௌகரியம் என்னவென்றுல், கூட்டமே இல்லை. ஆதியில் பிரம்மா குற்றுலத்தைப் படைத்தபோது பெருங் கூட்டத்தையும் வைத்தா படைத்தார். ஆகையால்க் குற்றுலம் பழைய படைப்புக்கிணங்க ஒருவாறு இருக்கிறது தற்சமயம்.

எனக்கு சுமார் பத்து நாளாக உடம்பு சௌகரியமாக இல்லை. காலில் ஒரு புண். அது எப்படியெல்லாமோ படுத்துகிறது. அது காரணமாகக் காய்ச்சல் இருந்து கொண்டிருக்கிறது. தனிப்பட்ட காய்ச்சல் அல்ல. அதனுல் சாப்பாடு நன்றுய்ச் சாப்பிடலாம். காய்ச்சலையும் கவனிக்க வேண்டாம். தீர்ந்தது.

டாக்டர் வந்து புண்ணுக்கு வைத்தி செய்கிறுர். இன்று குண முகம் காட்டுகிறது என்று சொல்கிறுர். இரண்டு மூன்று நாளில் சௌகரியம் ஏற்படலாம்.

தாங்கள் எத்தனையோ பாஷைகளைக் கற்றுவைத்திருக்கிறீர்கள். அதனுல் ''புருஹி முகிர் தேதி'' என்ற பாட்டை அனுபவித்துவிட்டீர்கள். எனக்கு ஒன்றும் விளங்காதே! என்ன செய்கிறது! ''காலைத் தூக்கி நின்றுடும்'' பாட்டை கேட்டிருக்கலாம். அதைக் கேட்டால் என்ன தெரியவரும். எதுகுல காம்போதியும் தாளமும் பாட்டிலுள்ள பக்திப் பெருக்கைக் காட்டுவதற்காக அவதரித்தவை என்று சொல்லத் தோன்றும். (கவியில் சீர் மோனை எதுகை எப்படியோ அப்படித்தான்) இந்த டெஸ்ட்டுக்குச் சரி வந்தால்த்தான் ஆர்ட். நடனத்தில் என்ன குறிப்பெல்லாமோ வருகிறது. ஒன்றும் விளங்காது அயலாருக்கு. ''நடனமாடினுர் வெகு நாகரீகமாக'' என்ற பதத்தை ஒட்டி எத்தனை எத்தனையோ நடனங்கள் ஜதிகள் சாரிகள். எல்

லாம் ஒன்றைக் காட்டுகிறது. எதை. பாத்திரம் நடராஜர் தாண்டவத்தில் திளைக்கிறது என்பதைத்தான். இது எல்லா கலைக்கும் பொது இலக்கணம். கனுதேசாய்ப் படங்களில் இந்த உண்மையை எளிதில்க் காணலாம். (தீபாவளி மலர்: கல்கி).

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: நாளை மாலை 5 முதல் 5-40 வரை திருநெல்வேலிக் குற்றாலம் பிள்ளை தேவாரப் பண்கள் பாடுகிறார். ரொம்ப நன்றாய் இருக்கும். தாங்கள் கேட்கலாம்.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
6-12-44

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

எனக்கு இப்போது உடம்பு ரொம்ப சௌக்கியமே. காலி லிருந்த புண்கள் அநேகமாக நிரந்துவிட்டன. டிரஸிங்கூட அநேகமாக இல்லை. மற்றப்படி உடம்பில் உபாதை ஒன்றும் இல்லை. வீட்டுக்குள் நடமாடிக்கொள்ளலாம். இன்னும் ஒரு வாரத்தில் நல்ல ஆரோக்கியம் ஏறபட்டு வெளியே உலாத்தப் போகமுடியும் என்று நம்புகிறேன். அப்படி உலாத்தப் போய்வந்தால்த்தான் உடம்புக்குத் தெம்பு ஏற் படும். பிரயாணம் முதலிய காரியங்களுக்கு உதவியா யிருக்கும். அதுவரை கொஞ்சம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியதுதான்.

தங்கள் 5. 11. 44௳ கடிதத்தை இப்போது மறுபடியும் வாசிக்கிறேன். வெகு ரஸமான கேள்விகளை எழுப்பு

கிறீர்கள் அதில். சதாசிவ பிரம்மத்தின் பாட்டைப்பற்றி எழுதுகிறீர்கள். எம். எஸ். பாடியிருக்கிறதில் பக்தி ரஸ பாவம் அழகாக அமைந்திருக்கிறதாகவும் சொல்லியிருக் கிறீர்கள். பாட்டைச் சொல்லிக் கொடுத்தவர் எம். எஸ். ஸிடம் வார்த்தைகளையும், பொருளையும் அதோடு பாவத் தையும் சிரமம் எடுத்து விளக்கியிருக்க வேணும். பாடகி யும் ரொம்ப சிரத்தையோடு கேட்டு வாங்கியிருக்க வேணும். இவ்வளவும் காரணமாக சங்கீதத்தில் உயிரும் பாவமும் ஏறியிருக்கின்றன என்று எண்ணுகிறேன்.

இன்னொரு விஷயம்: தங்களுக்கும் சாகித்யத்தின் உணர்ச்சி பாவம் முதலிலிருந்து கடைசி வரை ஒவ்வொரு வார்த்தை யிலும் அக்ஷரத்திலுமே கிடைக்கிற பான்மை நன்ருய்த் தெரியும். ஆகவே சங்கீதத்தை அம்ஸம் அம்ஸமாகவே தொடர்ந்து உணர்ந்து அனுபவிக்க முடிகிறது.

இதெல்லாம் என்னிடம் எதிர்பார்க்க முடியாததுதானே. எனக்குத் தமிழ்தானே தெரியும். வேண்டுமானுல் சங் கீதத்தின் போக்கை அறியலாம். தனித் தனியாக துண்டு துண்டாய் அனுபவிக்கலாம். அவ்வளவுதான். சாகித்தி யத்திலும் சங்கீதத்திலும் அமைந்து கிடக்கும் ஒருமைப் பாட்டை (synthesis) காணமுடியாது. அனுபவித்தல் என்பது முடியவே முடியாது.

சங்கீத விமரிசனம் போதும் என்று எண்ணுகிறேன். மதுரைக்கு எழுதும்போது அருமைத் தம்பிக்கும் மைத் துனருக்கும் எனக்கு உடம்பு திருப்திகரமாய் சரிப்பட்டிருக் கிறது என்று எழுத வேண்டும். அவர்களும் என்னிடம் தங்களைப் போல மிக்க அன்பு பூண்டுள்ளவர்கள். அவர் களும் அருமையாய் கடிதம் எழுதியிருந்தார்கள்.

வீட்டில் அம்மா சௌக்கியந்தானே?

20ஆ வாக்கில் திருச்சிக்கு வந்து ஒருநாள் தங்கலாம் என்று எண்ணுகிறேன். தாங்கள் திருச்சியில்தானே இருப்பீர்கள்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம் 12-12-44

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அருமையான கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். கடிதம் இலக்கிய அனுபவத்தில் ஊறவைத்த அருமையான கடிதம். வான்மீகத்தையும் படித்து அறிய முடிவதால் கம்பருடைய சிருஷ்டித் தத்துவங்களைத் தெளிவாய்க் காணுகிறீர்கள். சூர்ப்பனகையின் காதலைப் பார்க்கும்போது யானை குட்டிக்கரணம் போட்டால் அதைப் பார்க்க எவ்வளவு ஜோராய் இருக்கும் அப்படி இருக்கிறது. கம்பரோ அந்த வேடிக்கைகளைப் பார்த்து அனுபவிக்கிறார்.

வாஸ்தவந்தான். சூர்ப்பனையின் வர்ணனை அபூர்வமான இசைத் தாளங்களோடு நடன ஜதியால் நடந்து வருகிறது. அந்தப் பாடல்களிலிருந்து கம்பர் எப்பேர்ப்பட்ட கவிஞர் என்று தெரிந்துகொள்ளலாம்.

மருத்துவக் கலையை கம்பர் எவ்வளவாக அனுபவித்திருக்கிறார்கள் என்பதும் நன்றாய்த் தெரிகிறது. நான் எழுதிய குறிப்புகளைத் தாங்கள் நன்றாய் ஆராய்ந்து பார்க்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம்.

ஏதோ கம்பரைப்பற்றி எழுதத் தாங்கள் அதிகாரி அல்ல என்பதாக எழுதியிருக்கிறீர்கள். தொல்காப்பியத்தைப் பவணந்தியைப் படித்து வறண்டுபோன பண்டிதர்கள் அல்ல கம்பர் சம்பந்தமாகப் பேச. இதயப் பிரதேசத்தை யார் பண்படுத்தியிருக்கிறார்களோ அவர்கள்தான் கம்ப ருக்கு உரியவர்கள்.

ஒன்று சொல்லலாம்: தங்களையும் என்னையும்விட கம்ப ராமாயணத்துக்கு உண்மையாய் உரியவர்கள் தங்கள் அருமை மனைவியாரும் அன்னையாருந்தான். இதில் நம்மை வேண்டும் என்று குறைப்பதும் இல்லை; அவர்களை உயர்த்து வதும் இல்லை. பிறவியிலே நம்முடைய தாய்மார்கள் இதயச் செல்வம் படைத்தவர்கள். கம்பர் இதயத்தை நோக்கித்தானே பேசினார். தங்கள் கடிதம் நீள நீள ஆர்வ மும் நீளுகிறது. அணைத்துக்கொள்வதற்கு இரு கையும் நீளுகின்றன என்பதுதான் பொருள்.

''க்ஷேமம். க்ஷேமத்துக்கு எழுத வேண்டும், தங்கள்...'' என்ற கடிதங்களைத் தங்களிடமிருந்து நான் எதிர்பார்க்க வில்லை. சாவகாசமாய்ப் பேசி அளவளாவும் கடிதங்களை தான் எதிர்பார்க்கிறேன். ரொம்ப சந்தோஷம்.

எனக்கு உடம்பு சரியாய்ப் போய்விட்டது. புண்கள் ஆறிவிட்டன. ராஜாஜி அவர்கள் நேற்று இங்கு வந் தார்கள். என் உடல்நிலை அவர்களுக்குத் திருப்தியாய்ப் போய்விட்டது. அவர்களும் நானும் **16.12.44** சனிக் கிழமை புறப்பட்டு (Tr. Express) நேரே சென்னை போகிறோம். திருச்சியில் இறங்கிப் போக சௌகரியம் இல்லை. கொஞ்ச அவசரம். மன்னிக்க வேணும்.

திருச்சியில் அகாலத்தில் ரயில் வருவதால் தங்களைத் தொந்தரவுபடுத்த மனமில்லை.

கூடுமானால் மதுரையில் மைத்துனரையும் தம்பியையும் ஸ்டேசனில் சந்திக்கலாம் என்று நம்புகிறேன்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

முகாம்
C/o கல்கி
28-12-44

டி. கே. சிதம்பரநாத முதலியார்

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

குற்றாலத்திலிருந்து ராஜாஜியும் நானும் 20-12-44 அன்று புறப்பட்டு வந்தோம். மதுரையில் தங்கள் அருமை மைத்துனர் ராமசாமி அவர்கள் வெகு அழகான முறையில் காப்பி உப்புமா கொண்டுவந்து விருந்தளித்தார்கள். எல்லோரும் அனுபவித்து அருந்தினோம். ராஜாஜி அவர்களுக்கு உடம்பு அசௌகரியமாயிருந்ததால் வேறொன்றும் சாப்பிட முடியவில்லை. வந்த உப்புமாவைத்தான் சாப்பிட முடிந்தது. திருப்தியாகவும் சாப்பிட்டார்கள்.

ராஜாஜிக்கு G. ராவை நான் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாகவே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள் அவர்கள். இருவரும் ஒரே ஊரார், ஒரு குடும்பத்தார் என்றும் தெரியவந்தது. அவ்வளவு அந்நியோன்னியம் இருவருக்கும் ஏற்பட்டுவிட்டது. நான் எல்லாவற்றையும் மௌனமாக உட்கார்ந்துகொண்டு அனுபவித்தேன். அடடா என்னத்தைச் சொல்ல. G. ராவின் அன்பும் பணிவும் நாகரிகமும்! ராஜாஜியை அப்படி வசப்படுத்திவிட்டார்கள்.

தங்கள் தம்பியும் வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். திருச்சி வந்துவிட்டதாகத் தெரியவந்தது.

இங்கு வந்த பிறகு ராஜாஜிக்கு உடம்பு சௌகரியப்பட்டுவிட்டது. எனக்கும் உடம்பு ரொம்பத் தேறியிருக்கிறது

பல இடங்களுக்கும் பாட்டுக் கச்சேரிகளுக்கும் நடனக் கச்சேரிகளுக்கும் போகமுடிகிறது.

நேற்று இரவு பாலசரஸ்வதியின் அபிநயம் தமிழிசை அரங்கில் நடந்தது. தாயார் ஜெயம்மாள் பாட்டு வெகு அற்புதம். உலகத்திலேயே இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு அழகாகப் பாவங்களைக் கொட்டிவிட்டார். ஜனங்கள் அதிசயத்தில் மூழ்கிவிட்டார்கள். பாட்டும் சங்கீதமும் அபிநயமும் சேர்ந்துவிட்டால் மனுஷனை வேறு உலகத்துக்குத்தான் கொண்டுபோய்விடுகின்றன. தாங்கள் உடனிருந்து அனுபவிப்பதற்கு இல்லையே என்று வருந்தினேன்.

இந்த வருஷம் கேட்ட சங்கீதக் கச்சேரிகளிலிருந்து சங்கீதத்தின் தரம் உயர்ந்திருப்பதாகவே சொல்லலாம். இளம் பாடகர்கள் ஒரு வருஷத்திலேயே கண்கூடாகக் காணும்படி விருத்தியடைந்திருக்கிறார்கள்.

போலி பாகவதர்கள் காரியம் வெட்ட வெளிச்சமாய்ப் போய்விட்டது. இந்த வருஷத்திய பலன் இது.

மனுஷப் பிராணி எத்தனை வருஷத்துக்குத்தான் ஏமாற்றுக்குள்ளாய் கிடப்பது? இப்போது கொஞ்சம் விழித்திருக்கிறது அது ரொம்ப சந்தோஷம்

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

---

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்

*13-1-45*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் கடிதம் இன்று இங்கே கிடைத்தது. சென்னையிலிருந்து 7. 1. 45 அன்று இரவே புறப்பட்டுவிட்டேன்.

சுமார் 20 நாள் சென்னையில்த் தங்க நேர்ந்தது. பாட்டுக் கச்சேரிகளுக்கு ஆஜராக முடிந்தது. மொத்தத்தில் இந்த வருஷத்திய கச்சேரிகள் கொஞ்சம் தெளிவுதான். பாஷையை உணர்ந்து பாட வேண்டும் என்ற எண்ணம் பாகவதர்கள் சிலருக்கு ஏற்பட்டு இருக்கிறது. அது காரணமாக அவர்களுக்கு பாடுவதில் வசதி ஏற்பட்டு பாவத்தில் கொஞ்சம் ஒட்ட முடிந்தது. செம்பை கச்சேரி ஜனங்களுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. தமிழ் வார்த்தைகளை ரொம்பத் தெளிவாய் உச்சரிக்கிறார். சுரமும் சுருதியும் அவரிடம் எப்பொழுதுமே ரொம்ப சுத்தம். இதெல்லாம் காரணமாக சபையோர்கள் முதலிலிருந்து கடைசிவரை கும்மாளி போட்டு அனுபவித்தார்கள்.

ஜி. என். பி. கச்சேரி கூட இந்த வருஷம் தெளிவுதான். அது காரணமாக முன்னேறியும் வருகிறார்.

மற்ற படே பாகவதர்கள் பழைய சொக்கனே சொக்கன் தான் என்ற கணக்கில்தான் இருக்கிறார்கள்.

சுர சுத்தம், சுருதி லயம், பாஷை, பாவம் எல்லாம் வேண்டாத காரியங்கள்தான் என்று பிடிவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்பாவி ஜனங்கள் என்ன செய்வார்கள். ஒதுங்கிவிட்டார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் இப்போது சென்னையில் வெட்ட வெளிச்சமாய் போய் விட்டது.

இந்த கோஷ்டிக்கு வக்காலத்து வாங்கியிருக்கிற டி. எல். வெங்கட்டராம ஐயர் கூட சுத்த சங்கீதத்துக்கு பாஷை வேண்டாம்தான், ஆனல் பாவ சங்கீதத்துக்கு பாஷை, உணர்ச்சி எல்லாம் வேண்டியதுதான் என்று சொல்லி விட்டார். இந்த அளவுக்கு அவர்கள் வந்தது சங்கீதமும் நாமும் சேர்ந்து செய்த புண்ணியம்தான்.

எம். எஸ்.ஸின் கச்சேரியோ, எப்போழுதும் போல ஜனங்களின் மனசைக் கவர்ந்தது. ஹால் நிறைந்த கூட்டம்—முற்றத்திலும் இடம் பண்ணியிருந்தது. வீதியில் உட்கார்ந்தும் நின்றும் கேட்டுக்கொண்டு இருந்தவர்கள் 5000 பேர். வாசல் வசூல் மாத்திரம் ரூ 3500.

சங்கீதக் கச்சேரிகளைப்பற்றி சொல்லியது போதும். இனி நடனக் கச்சேரியைப்பற்றி சில வார்த்தை.

தமிழிசை மகாநாட்டில் பெரியநாயகி அம்மை என்ற கும்பகோணத்துப் பாத்திரம் நடனம் ஆடியது. கும்பகோணத்தில் ரொம்ப ரொம்ப பேராம். பாத்திரம் அழகுதான். தேகக்கட்டு நடனத்துக்கு வாய்ப்பானதுதான். நடனம் கற்கக் கூடிய திறமைகூட இருக்கிறது. ஆனால் சரியான ஆசிரியர் வந்து கற்பிக்க வேண்டும். கற்பித்துவிட்டால் நடனம் திருத்தமாய் இருக்கும்.

இந்த நடனத்தை பார்த்துவிட்டு மவுண்ட்ரோடிலுள்ள சென்னைக் கார்ப்போரேஷன் கச்சேரிக்கு (அழைப்புக்காகத்தான்) கல்கியும் நானும் போனோம். C. K. விஜயராகவன் (இப்பொழுது நமது மாகாணத்தின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருப்பவர்) I.C.Sன் குழந்தையின் நடனத்தைப் பார்க்கத்தான். உபசாரத்துக்குப்போன ஹோதாவில்த்தான் போனோம். ஆனால் அந்தக் குழந்தை, நடனத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தே ஆடியது. அழகாய் இருந்தது. ஒன்றரை மணிநேரம் அனுபவித்துக்கொண்டேயிருந்தோம். ரொம்பத் திருப்தியாகவே இருந்தது. கடைசியில் தந்தை தாயார்களையும், பெண்ணையும் நேரில்ப்போய் பாராட்டினேன். அவர்கள் உண்மையில் பாராட்டுக்கு உரியவர்கள்தான்.

நடனத்துக்கு அந்தஸ்த்துக் கொடுத்துவிட்டார்கள். தமிழ் நாட்டிற்கு அது பெரிய வருவாய்.

இதெல்லாம் போகட்டும் — ஒரே கச்சேரியில் தங்களை நினைத்து ரொம்பவும் ஆற்றுமைப்பட்டுக்கொண்டிருந்

தேன். தமிழிசை அரங்கில் பாலசரஸ்வதி நடனமும் தாயார் ஜெயம்மாளின் பின்பாட்டும் நடந்தன. நடனம் அதாவது அபிநயம் வெகு அருமையாய் இருந்தது. உணர்ச்சி பாவங்கள் அப்படி அப்படியே உருண்டு புரண்டு வந்தன. அவைகளோடு நாங்கள் உருண்டு புரண்டு ஓடினோம். எனக்கு உற்ற நண்பரான மிஸிஸ் சாஸ்திரி பம்பாயிலிருந்து வந்திருந்தார். அவருடைய மகளும் (உதயசங்கரின் தம்பி மனைவி) வந்திருந்தாள். பரதநாட்டியத்தில் தேர்ந்தவள்., மகள் இருவரும் அபிநயத்தைப் பார்த்து உருகிப்போய் விட்டார்கள். ஜனங்கள் சரியான அளவிற்கு கலையை அனுபவிக்கவில்லையே என்று மிஸிஸ் சாஸ்திரி ரொம்ப ரொம்ப ஆற்றாமைப்பட்டார். கலையை மதித்த உள்ளம் அப்படியும் பேசும், அதற்கு மேலும் பேசும். நடனம் இப்படி.. இனி ஜெயம்மாளின் பாட்டு. அற்புதமாய் இருந்தது. சங்கீதத்தில் பாவம் ஏது — ஒன்றேது என்று சொல்கிறவர்கள் அந்தப் பாட்டைக் கேட்க வேண்டும். நவரஸங்களும் அங்கங்கே களியும்; சொட்டும்; அந்த அந்த மயமாக்கிவிடும் நம் இதயத்தை. தெய்வத்திற்கு ஏற்ற சங்கீதம்! என்ன எடுப்பு — என்ன நிச்சயம்! ஒரு சுருட்டு — ஒரு சுழிசல் — அப்படியே பாவம் வந்துவிடும். காதினால் கேட்டாலும், கண்கொண்டு பார்ப்பதுபோல் இருக்கும் பாவ உருவம். கேட்டு உணர்ந்து அனுபவிக்கக் கொடுத்து வைத்துவிட்டால் — நாமே பாக்கியசாலிகள். கர்நாடக சங்கீதத்திற்கு வாரிசுகளாய் இருக்கிறோம் அல்லவா என்று மார்பை தட்டத் தோன்றும்—இந்த சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டு இருந்தபோதுதான் தங்களையும், தங்கள் குடும்பத்தையும் நினைத்து, உடனிருந்து அனுபவிக்க இல்லையே என்று ஆற்றாமைப்பட்டது.

தாங்கள்; தங்கள் அருமை மனைவியார் — அன்னையார், மைத்துனர், தம்பி எல்லாரும் ரொம்ப ரொம்ப அனுபவித்திருப்பீர்கள்.

திருச்சியில் இறங்கலாம் என்ற எண்ணம் இருந்தது. பிரயாண நெருக்கடியால், எப்படியாவது குற்றாலத்தில் வந்து விழுந்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில் நேராகவே வந்துவிட்டேன்.

மன்னிக்க வேணும்.

எனக்கு உடம்பு ரொம்பத் தேறி இருக்கிறது. சென்னையிலிருந்த ஆட்டபாட்டங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்தது அல்லவா. தங்களின் அன்பான அழகான கடிதத்தை எப்போது எதிர்பார்க்கலாம்?

தங்களுக்கும் தங்கள் அருமை மனைவியாருக்கும் பொங்கல் விழா சகல மங்களத்தையும் உண்டாக்குவதாக.

தங்கள்

டி. கே. சி.

P S. திருவையாற்றுக்கும் போனதுபத்தி ரொம்ப சந்தோஷம். சௌகரியம் எல்லாம் சரியாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். தாங்கள் அனுபவித்திருப்பீர்கள். தாய் பாஷை அல்லவா. தாய் பாஷையை விருத்தி செய்ய வேண்டியது அவசியந்தானே.

டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
5-2-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் 24-1-45 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. ரொம்ப ரஸமான கடிதம்.

விஜயராகவனது புதல்வியைப் பற்றித் தாங்களும் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம்.

தெலுங்குப் பேராசிரியர் கனகம்மாள் சொன்ன வார்த்தையை நினைத்தால் இன்னும் சிரிப்பு வருகிறது. வட நாட்டுப் படையெடுப்பை எதிர்த்துக்கொண்டே இருந்த திலுலேயே அல்லவா, தமிழர்கள் சாவகாசமாகத் தாளம் போட்டுக்கொண்டும் பாடிக்கொண்டும், நாதசுரத்தை வாசித்துக்கொண்டும், வீணையை மீட்டிக்கொண்டும் ராமாயணத்தைக் கம்பர் பாடிக்கொண்டும் நாயன்மார் களும் ஆழ்வார்களும் — கேட்பானேன் — அற்புதமான பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டும், கோவில்களில் பரத நாட்டியத்தை வளர்த்துக்கொண்டும்... இன்னும் எத்தனை எத்தனையோ காரியங்களைச் செய்துகொண்டும் இருந்தார்கள் தமிழர்கள். ஆகவே உலகத்திள்ள உயர்ந்த கலைகளைப் பந்தோபஸ்துப் பண்ண சரஸ்வதி தேவியான வள் ஆந்திராவையே நியமித்து விட்டாள். அந்த அம்மா ளுக்கு மற்றவர்களிடத்தில் நம்பிக்கை இல்லை. ரொம்ப பேஷ்!!!

ஒரு ஆந்திர ஸ்திரி இந்தப் பாடுபடுத்திலுல் ஆண்பிள்ளை யாய் உள்ளவர்கள் லேசாக விட்டா விடுவார்கள். ஒரு பிரபல ஆந்திரர் சொன்னார்:

''கலைகளை (சங்கீதம் உள்பட) வைத்திருங்கள். பந்தோபஸ் தாய் இருக்கட்டும். பிறகு வந்து வாங்கிக்கொள்கிறோம் என்று தமிழர்களிடம் விட்டுவிட்டுப் போனோம். திரும்பி வந்து பார்த்தால் எல்லாவற்றையும் தங்களுக்கே வைத்துக் கொண்டார்கள். இப்படி மோசம் செய்தவர்கள் தமிழர் கள்'' என்று புகார் சொன்னார். பத்திரிகையில் கை கூசா மல் எழுதினார்கள். மேடையில் எழுந்துநின்றுகொண்டு பேசவும் செய்தார்கள். எல்லாம் மூன்று வருஷத்துக்கு முன்தான். இந்த அற்புத சரித்திர உண்மையை ஆசிரியை கனகம்மாளுக்கு அற்பணம் பண்ணலாம்.

எனக்காகத் திருச்சி ரேடியோவில் 13, 14 தேதிகளில் மீட்டிங்கையும் பேச்சையும் வைத்தார்கள். ஒற்றிவைத்த காரியந்தான். ஆனால் அதில் விதிவந்து விளையாடிவிட்டது. எனக்கு இரண்டு வாரமாக வைசூரியின் தொந்தரவு. இன்னும் பூராவும் குணமாகவில்லை. மெள்ள மெள்ளத்தான் இறங்கி வருகிறது, convalescence stage என்று வரவே ஒரு வாரம் ஆகும் என்று டாக்டர் சொல்லுகிறார். பலஹீனத்தைச் சமாளிக்கவோ ஒரு மாசமே ஆகும் என்கிறார்கள். ஆகவே திருச்சிக்கு வந்து இரண்டு நாள் தங்களோடு உறவாடலாம் என்பது இல்லாமல் போயிற்று. பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

தங்கள் அருமைத் தம்பி சுப்புகிருஷ்ணன் அழகான மூன்று காஸ் லாம்பை அனுப்பியிருக்கிறார்கள். தாங்கள் தம்பி மைத்துனர் மூவரும் என்னை ஸ்வீகாரம் செய்துகொண்டார்கள். தங்கள் அன்பைப்பற்றி வேறு என்ன சொல்ல.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்

17-3-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அன்பான நேற்றையக் கடிதம் இப்போது கிடைத்தது. தங்களுக்குக் கடிதம் எழுத வேண்டும் எழுத வேண்டும் என்று எத்தனையோ தடவை எண்ணினேன். அதிலும் என் உடல்நிலையைப்பற்றித் தெரியத் தாங்கள் ஆத்திரப்படுவீர்களே என்றும் எண்ணினேன். ஆனாலும் நன்றாய் மசகு போட்ட வண்டி மாதிரி நாட்கள் கடந்து போய்விட்டன. மன்னிக்க வேணும். உடம்பு எனக்கு சௌகரியந்தான். ஆனால் பலஹீனம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. பயணங்கள் ரொம்ப வைத்துக்கொள்ள

முடியவில்லை. எப்படியும் 2-4-45 அன்று புறப்பட்டுத் திருச்சி வர வேண்டியிருக்கிறது. 3-4-45 அன்று சித்தர்களைப்பற்றி ரேடியோவில்ப் பேச வேண்டியிருக்கிறது. திருச்சியிலிருந்து அப்படியே சென்னைக்குப் போகிறேன். அங்கே 14. 4. 45 வரை தங்க வேண்டும். டில்லியிலிருந்து வரும்போது சென்னையில்த் தங்களைச் சந்திக்கலாம் அல்லவா. ஜோலி முடிந்ததும சென்னை வர வேண்டியது தானே.

தங்கள் அன்பை என்ன என்று சொல்லுகிறது! அவசரம் அவசரமாய்க் கார்டு எழுதியிருக்கிறீர்கள். டில்லியிலிருந்து சௌக்கியமாய்த் திரும்பி வர வேண்டும்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
18-4-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

சென்னையிலிருந்து எட்டையபுரத்திற்குப் போய்விட்டு இரவு இங்கு வந்து சேர்ந்தேன். இந்த அலைச்சலுக்கெல்லாம் உடம்பு இடம் கொடுத்ததே என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கிறேன். தாங்கள் 12.4.45 அன்று அனுப்பிய கடிதம் சென்னைக்கே வந்து சேர்ந்தது. ஆனந்தி, ராதாவின் நடனத்தைப்பற்றி ரொம்பப் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள். அவ்வளவு பாராட்டுக்கும் உரிய குழந்தைகள்தான். அவள் 13உ அன்று அரங்கேறி அவளும் ராதவும் ஆடினது அற்புதமாகவே இருந்தது. சபையோர் அதிசயத்துப்போனார்கள். உண்மையும், உணர்ச்சியும் பாவங்களில் அப்படி அப்படியே வந்து பிரகாசித்தன. மானச

உலகத்திலுள்ள் ஒரு பொருளை ஜட உலகத்துக்குக் கொண்டுவருவதுதான் கலை. வர்ணம், வார்த்தை, கண்டத்தின் தொனி, தேக உறுப்புகளின் தொழிற்பாடு எல்லாம் ஜட உலகைச் சேர்ந்தவை. மனசை இவைக ளோடு சேர்க்க வேண்டாம். மனசில் ஆனந்தம் ஏற்படு கிறதென்றால் அந்த ஆனந்தத்தை ஜடத் தத்துவத்தின் மூலமாக வெளியிட ஆத்திரப்படுகிறது அந்த மனசு. அத்தகைய ஆத்திரம் இருந்தபோதிலும் அது சாத்தியமே ஆவது இல்லை. சாதாரணமாக, வெகு அபூர்வமாகத் தான் அதைச் சாதிக்கிறார்கள். அப்படிச் சாதிக்க முடிந்த வர்கள் உலகத்திலேயே அருமைதான். ஆனந்தி அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

அன்று அரங்கேற்றத்தில் உயர்ந்த உத்தியோக வகுப்பினர் களுக்குக்கூட ஆனந்தியின் திறம் விளங்கிவிட்டது. அது பெரிய விஷயம் அல்லவா?

தாங்கள் பார்த்திருந்தால் அதிசயத்தில் மூழ்கி இருப்பீர் கள். தங்கள் கடிதத்தை கல்கி ரொம்பவும் அனுபவித் தார்கள்.

தங்கள் அருமைத் தம்பி மிக்க சிரமம் எடுத்து என்னைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுதுதான் அவர்களது அழகிய முகத்தை இரண்டாவது முறையாகப் பார்க்க முடிந்தது. வெகு நேரம் அளவளாவிக்கொண்டிருந்தோம் — அவர்களது இளமையும், அறிவுத் திறமையும் சேர்ந்து என்னை வியக்க அடித்துவிட்டது.

முந்தின நாளே நடனத்துக்கு டிக்கெட் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். அதனால் எங்களுக்கான பாஸ் ஒன்று தான் கொடுக்க முடிந்தது. தம்பி அவர்கள் நடனத்துக்கு வந்தார்களோ என்னவோ தெரியவில்லை. கூட்டமும், உத்ஸாக அமளியும் அபரிமிதம் — அதனால் அவர்களைத் தேடிக் காண முடியவில்லை. அவர்கள், தாங்கள், மைத் துனர் மூன்றுபேரும் நடனத்தைப் பார்க்கவில்லையே என்று எனக்கு ரொம்ப ஆற்றாமை — கோபமேதான்?

ஏனென்ருல் அத்தகைய ரசிகக் கூட்டுறவை காண்பது அரிது.

குற்ருலம் மழை பெய்து சுகமாய் இருக்கிறது. இரண்டு நாளில் மேல்காற்று ஆரம்பித்துவிடும். தென்பக்கமாக முகாம் வந்தால் இங்கு வந்துபோக வேண்டும்.

தூத்துக்குடியில்க் கம்பர் விழாவை 20, 22வ தேதிகளில் வெகுவிமர்சையாக நடத்துகிருர்கள். அதற்காக 20வ இங்கு இருந்து புறப்படுகிறேன். 24வ இங்கு திரும்பலாம்.

அத்தையம்மாளின் அன்பும், விருந்தோம்பலும், ராமபக்தியும் கண்முன் நிற்கின்றன. ஒளவை பிராட்டியார், காரைக்கால் அம்மையார், முதலியோரது ஞாபகந்தான் வருகிறது. அவர்களுக்கு என் நமஸ்காரம் சொல்ல வேணும்.

தாங்கள் இல்லாதபோது, வீட்டில், எனக்கு எல்லோரும் சேர்ந்து உபசாரம் செய்துவிடுகிருர்கள். அதை தாங்கள் கொஞ்சம் கண்டிக்க வேணும். எல்லோருக்கும் என் அன்பு

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்ருலம்

**27-4-45**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் மதுரையில் இருந்து எழுதிய கடிதம் கிடைத்தது. ரொம்ப சந்தோஷம். நடனத்தைத் தாங்கள்தான் பார்க்கவில்லே. அருமைத் தம்பியாவது பார்த்தார்களே. ரொம்ப திருப்தி. நடன சபையில் ஒரே கூட்டம். அங்கத்தினர்களே (900 பேர்) வந்து இடத்தை அடைத்துவிட்டார்கள். பிறகு நம்மவர்களே வரவேற்கிறது, விசாரிக்கிறது என்பதேது? நண்பர்கள் குழாமாக எங்கெங்கோ உட்கார்ந்து

கொண்டு பார்த்தார்கள். தம்பி அவர்களும் அப்படித் தான் பார்த்துக்கொண்டார்கள் தாங்கள் நடனத்தைப் பயிற்சி நடக்கும்போது பார்த்தீர்கள் சதாசிவமும் கல்கியும் பாக்கியசாலிகளே. அபூர்வமான திறமை வாய்ந்த குழந்தைகள் கிடைத்திருக்கிறதல்லவா?

எட்டையபுரத்தில், பாரதி நிலையத்துக்கு ராஜா அவர்களால் நன்கொடையாகப் பெற்ற இடம் வாய்ப்பான இடம். விஸ்தீரணம் ஒரு ஏக்கருக்கு மேல்தான். ஊர் முகப்பில், ரோட்டடியிலேயே இருக்கிறது. கட்டிடம் அழகாகவும் உபயோகமாகவும் அமைவதற்காக ரோட்டடியிலேயே ஏற்பாடாகிறது.

நல்ல அமைப்பால் ஒரு கவி (பாடல்) கிடைத்துவிட்டால் அந்த ஒரு கவிக்காகவே ஒரு நிலையம் கட்டலாம். அந்த நிலையத்துக்கு யாத்திரை போய்க்கொண்டிருக்கலாம். இது ஏதோ பொருளற்ற படாடோபம் என்று தற்காலத்து படாடோபிகள் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு கவி—உண்மையான கவி — நம்முடைய வாழ்க்கையை எப்படி ஒளிபெறச் செய்யும் என்பதை நம்முடைய Bachelor of Artsகள் உணர்வார்களானால் நான் சொல்லுகிற சொல் பயனில் சொல் (cant) அல்ல என்று சொல்லுவார்கள்.

நாடுதும் வா நெஞ்சே!
    நாரா யணன் பதிகமே—
கூடுதும் வா மெய்யடியார்
    கூட்டங்கள் — சூடுதும் வா
வீதியெங்கும் கார் அகிலின்
    வீசு புகை வாசம் எழும்
ஆதியிந்த ஓரான் அடி

இந்த ஒரு பாடலுக்காக இந்த வூருக்கு [மாயவரத்துக்கு வடக்கே மூன்று மைலில்] யாத்திரை போகலாம் அல்லவா? திருநெல்வேலி முகாம் வரும்போது கட்டாயம் குற்றாலம் வரவேண்டும். சௌகரியமாய்த் தங்கிப் போக வேண்டும்.

அத்தையம்மாளும் அருமை மனைவியாரும் சௌக்கியந் தானே.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
**24-6-45**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அன்பான கடிதம் (21-6-45) கிடைத்தது. தாங்கள் ரேடியோவுக்குப் போய்விட்டீர்கள். அதனால் ஒரு நஷ்டமும் இல்லை. மாம்பழமும் வடகமும் சரியானபடி இங்கே வந்து சேர்ந்துவிட்டனவே.

மாம்பழத்தை இனங் கண்டுகொண்டேன். தங்கள் வீட்டுக்குச் சொந்தமான பழமாம். காசாலட்டு என்று பெயராம். தங்கள் அருமைத் தம்பியிடமிருந்துதான் இத்தனை விபரங்களையும் தெரிந்துகொண்டேன். அவர்களும் மதுரையிலிருந்து காசாலட்டுகள் அனுப்பினார்கள்.

லட்டுதான். வேறு என்ன பெயர் கொடுக்க? வெகு ருசியில் இருக்கிறது, வெகு நாளைக்கும் இருக்கிறது. மாமரமும் தங்கள் குடும்பத்துக்காகப் பக்குவம் பண்ணிப் பழத்தை பரிமாறுகிறது?

மாமரத்துக்குப் போட்டியாக அத்தை அம்மாளும் அதி அற்புதமாக வடகங்கள் பக்குவம் செய்கிறார்கள். அதன் மிருதுவையும் சுவையையும் பார்த்துவிட்டு இங்குள்ளவர்கள் எல்லாருக்கும் ஒரே வியப்புதான்.

அன்று வீட்டுக்கு வந்திருந்தபோது, அவர்களே சமையல் செய்ய வேணும். நான் சாப்பிட வேண்டும் என்று

எவ்வளவோ வற்புறுத்தினுர்கள். வடகங்களின் ருசியைப் பார்த்த பிறகு சாப்பிடாமல் வந்தது பிசகுதான் என்று படுகிறது. எவ்வளவோ சுவையுள்ளதாய் இருக்கும் சாப்பாடு. சந்தேகம் என்ன?

அவர்களது அன்பும் அருமையும் அளவிடற்கரியது. என்னை அருமை பாராட்டியதிலிருந்து தங்களை வளர்த்த போது என்ன பாடுபட்டிருப்பீர்கள் அவர்கள் தங்கக் கையில் என்பதை யூகித்துக்கொண்டேன்.

அத்தை அம்மாளுக்கு என் நமஸ்காரம் சொல்ல வேணும். இங்கே அடிக்கிற புயலானது தங்கள் அருமைத் தம்பியையும் மைத்துனரையும் மதுரையிலிருந்து கொண்டு வந்தது. அப்படியே அடித்துக்கொண்டும் போய் விட்டது. கொஞ்ச நேரந்தான் அவர்களோடு அளவளாவ முடிந்தது.

அம்மாள் சௌக்கியமாக இருக்கிறுர்கள் அல்லவா?

தாங்கள் ரேடியோவில் பேசப் போகிறீர்கள் என்பதே தெரியாது. தெரிந்திருந்தால் கேட்டிருப்பேன்.

குற்றுலம் ஸீஸன் ரொம்ப நன்றுக இருக்கிறது. அத்தை அம்மாள், அம்மாள் எல்லோரையும் அழைத்து வரலாமே. நல்ல ஆரோக்கியத்தைப் பெறலாம் அல்லவா.

இன்னும் சாரல்க்கூட்டம் அவ்வளவாக வரவில்லை. ஒரு வாரத்தில் வரலாம்.

28 அல்லது 29ஆம் தேதி மதுரை போய் அப்படியே சென்னை போக வேண்டி இருக்கலாம். திட்டமாய்ச் சொல்ல முடியவில்லை. போகும்போது எழுதுகிறேன்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றுலம்
17-7-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நாளை நின்று 19.7.45 அன்று திருவனந்தபுரம் எக்ஸ் பிரஸில்ப் புறப்பட்டுச் சென்னைக்குப் போகிறேன். பல் வைத்தியரைக் கலக்க வேண்டியிருக்கிறது. 27உ சென்னையை விட்டுப் புறப்பட்டு மதுரைக்கு வருகிறேன். அங்கே எம். எஸ். ஸின் சங்கிதக் கச்சேரிக்கு இருக்க வேண்டும். அப்படியே குற்றுலம் திரும்ப வேண்டும்.

இங்கே பலரும் பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருக்கிறார்கள். S.Y. கிருஷ்ணசாமி I.C.S. 15 நாட்களுக்குமுன் வந்திருந்தார். அவர் குற்றுலக் குறவஞ்சி ஆரம்பிக்க வேண்டும் என்றார். குறவஞ்சி வாசிப்பு மூன்று நாள் நடந்தது. பிறகு கம்பராமாயணம் ஆரம்பிக்க வேண்டும் என்றார். மூன்று நாள் கேட்டார். சென்னைக்கு திரும்பிப் போய்விட்டார். ராமாயணம் நடந்துகொண்டிருக்கிறது.

நன்றாய் ரசிக்கிறார்கள். மதுரை N.M.R. சுப்புராமன் வந்து ரொம்ப ரொம்ப அனுபவிக்கிறார். கம்பர் யோகக்காரர் தான்! குற்றுலத்திலும் கம்பராமாயணம் நடந்து கொண்டிருக்கிறது. பக்தர்கள் வந்து கேட்டு ஆனந்திக்கிறார்கள்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: அத்தை அம்மாளுக்கும் வீட்டு அம்மாளுக்கும் என் அன்பைச் சொல்ல வேணும்.

டி. கே. சி

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
5-8-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

மதுரைக் காலேஜ் சம்பந்தமாக நடந்த சங்கீதக் கச்சேரிக்குப் போயிருந்தபோது தங்கள் அருமை மைத்துனரைச் சந்தித்தேன். ஆனால் தம்பி ஊரில் இல்லை.

சுற்றுப்பயணம் போயிருந்தார்கள். திரும்பி வந்ததும் மிக்க ஆற்றாமையோடு கடிதம் எழுதினார்கள். அது போகட்டும்.

சுற்றுப்பயணம் 20 நாள் செய்தார்களாம். அப்போது என்னுடைய ராமாயண புஸ்தகத்தை வாசிக்க வசதியிருந்ததாம். என்னுடைய விளக்கம் எல்லாம் ஏதோ நேரில் வந்து பேசுகிறது போலவே இருக்கிறதாம். பெரிய பாராட்டு அது. என்னுடைய எழுத்தில் பிரயோசனம் இருக்கிறது என்று தெரிகிறதல்லவா. கஷ்டமான காரியத்தை சாதித்துவிட்டேன் என்ற எக்களிப்பே உண்டாகிறது. கவிப்பண்பையும் சுவையையும் அதன் உள்ளீடான உண்மை உணர்ச்சிகளையும் பிறரோடு கலந்து அனுபவிக்க எனக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. ரொம்ப சந்தோஷம்.

* * *

இப்போது இங்கே காலையில் கம்பராமாயணம் சொல்லி வருகிறேன். கோயம்புத்தூரிலிருந்து வந்துள்ள நாயுடுப் பிரபுக்களும், மதுரை N. P. M. சுந்தரராமன் அவர்களும் குடும்பமும் வந்து கேட்கிறார்கள்.

ரொம்ப ரொம்ப ஈடுபட்டு அனுபவிக்கிறார்கள். எல்லாம் ஒரு புது யுகத்தைத்தான் காட்டுகிறது. கோயம்புத்தூரிலிருந்து வக்கில் நாயுடு என்பவர் வந்திருக்கிறார்கள்.

அவர்கள் முக்கியமான பருத்தி வியாபாரி. அவர்கள் சொன்னது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

சனிக்கிழமை கல்கி வருமாம். வீட்டில் பெண்டுகளுக்குக் கம்பர் தரும் காட்சியை வாசிக்க நீ முந்தி நான் முந்தி என்று ஒரே போட்டியாம். தன்னையும் ஆபீசுக்குப் போக வில்லையா என்று கேட்டுவிடுவார்களாம். ஆகவே கம்பரை நம்முடைய தாய்மார்களிடம் ஒப்படைத்தாய்விட்டது. நல்ல பந்தோபஸ்த்துத்தான். கவிஞர் நித்தியமான கவிஞர் தான். கம்பராமாயணம் கஷ்டம் என்று சொல்லுவது மலையேறிப் போய்விட்டதல்லவா? தங்களுக்கு இது உவந்த செய்தி என்றுதான் எழுதுகிறேன்.

நம்முடைய A. I. R. சோமு குற்றாலத்தைப்பற்றி ஒரு அழகான பாடல் எழுதியிருக்கிறார். அதை ஒரு நாள் இங்கே அரங்கேற்றினேன். பல நண்பர்களுக்கும் வாசித்துக் காட்டினேன். கவியிலுள்ள கும்மாளி கேட்பவர்களையும் ஆட்டுகிறது. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ!

9.8.45 அன்று இங்கிருந்து புறப்பட்டு (திருவனந்தபுரம் எக்ஸ்ப்பிரஸில்த்தான்) நேரே சென்னை போகிறேன். ஒரு வாரம் சென்னையில் இருக்க நேரும்.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: அருமை அத்தை அம்மாள் இருவரும் சௌக்கியந்தானே.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
14-9-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இங்கு நான் வந்து இரண்டு வாரம் ஆகிறது.

சென்னையில் வைத்து எனக்கு இரண்டு வாரம் சிகிச்சை நடந்தது அது போதுமானதுதான் என்று எண்ணியிருந்தேன். நாளை திருச்சிக்கு வரலாம். ரேடியோக் கமிட்டி இருக்கலாம். தங்களை, அம்மாளை, அத்தை அவர்களை எல்லாம் பார்க்கலாம் என்று எண்ணினேன். ஆனால் அது கொடுத்துவைக்கவில்லை. டாக்டர் சிகிச்சை நடந்து கொண்டிருக்கிறது. அதாவது இன்ஸூலின் இன்ஜெக்ஷன்தான். இன்ஜெக்ஷன் ஒழுங்காக நடக்க வேண்டும். அது மாத்திரமல்ல. இன்ஜெக்ஷன் காரணமாக நாலு மணி நேரம் கழித்து ஒரு களைப்பு வருகிறது. இதெல்லாம் காரணமாகத்தான் அயலூர்ப் பயணங்களை நிறுத்த வேண்டி வருகிறது.

* * *

குற்றாலம் இப்போது வெகு சுகமாகவே இருக்கிறது. கூட்டம் எல்லாம் போய்விட்டது. காற்று நன்றாய் அடிக்கிறது. அருவி சுமாராய் விழுகிறது. திருநெல்வேலி ஆபிசை மேற்பார்க்க வந்தால் குற்றாலம் வந்து போக வேண்டும் வரும்போது மதுரையிலிருந்து அருமைத் தம்பியையும் மைத்துனரையும் அழைத்து வர வேண்டும்.

நீங்கள் மூவரும் சேர்ந்துவிட்டால் அது ஒரு கலைச்சங்கம் தான். இப்படி ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய்; கலை ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை நினைத்தால் ஆனந்தமாய் இருக்கிறது.

பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் மூவரும் சேர்ந்தால், உருவம் இல்லாத கடவுள் உருவம் பெற்று ஸ்தூல தத்துவத்தையே அடைந்து விடுகிறார் என்று அழகாக முன்னோர்கள் கதை கட்டியிருக்கிறார்கள். தாங்கள் தம்பி மைத்துனர் மூவரும் அந்தக் கதையை ஞாபகம் ஊட்டுகிறீர்கள்.

நண்பர் சந்திரசேகரன் அவர்களுடைய புஸ்தகம் (V. கிருஷ்ணசாமி ஐயர்) இதுவரைத் தமிழில் வராத மாதிரி வந்திருக்கிறது. எத்தனையோ விஷயங்களை ஆராய்ந்து தேடிப் பார்த்தது பெரிய விஷயம். அதோடு எத்தனையோ பத்திரிக்கை துணுக்குகளையும் கடிதங்களையும் பந்தோபஸ்தும் பண்ணிவைத்திருக்கிறார்கள். இது சாமானியமாகப் பார்க்கிற காரியமில்லை.

நாற்பது வருஷத்துக்கு முன்னுள்ள காரியங்களைப் பார்த்துள்ள என் போலியர்களுக்கு வெகு ரஸமான புஸ்தகம். சரித்திரம் எல்லாம் அப்படித்தானே. நமக்குப் பழகிய விஷயங்களை, முந்திய நடவடிக்கைகளும் காலமும் எப்படி விளக்குகின்றன என்பதில்த்தானே இருக்கிறது சரித்திர நயம்.

திருச்சி நமக்குப் பழகிய விஷயம். அதைப்பற்றிய பூர்வ சரித்திரம் நமக்கு ரஸமாய் இருக்கும். அதைவிட்டு இங்கிலாந்திலுள்ள ஒரு ஊரைப்பற்றிய சரித்திரம் ஒருவன் எழுத அதை நம் தலையில்க் கவிழ்த்துகிறது என்பது வேண்டாத காரியம். பள்ளிக்கூடங்களிலோ பாடம் — முக்கியமாக சரித்திரப் பாடம் என்பதெல்லாம் வேண்டாத விஷயத்தை வேண்டாதபடி சொல்லிக் கொடுக்கிற காரியந்தான். அப்பாவிப் பிள்ளைகள் என்ன செய்வார்கள்.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
14-11-45

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

வெகுநாளாய்க் கடிதம் எழுதவில்லை மன்னிக்க வேணும். வீட்டில் அம்மாள் அத்தையம்மாள் எல்லோரும் சௌக்கியந்தானே. நான் அடிக்கடி குறுக்கும் நெடுக்குமாகத் திருச்சிராப்பள்ளியைக் கடந்து போகிறேன் என்ற விஷயந் தெரிந்தால் அத்தை அம்மாளுக்கு (கோபமே இன்னதென்று தெரியாத அத்தை அம்மாளுக்குக்) கோபம் வந்தே விடும். ஆனால் என்ன செய்கிறது. ரயில்க்காரன் காரியம் அப்படி இருக்கிறது.

ஒரு இடத்தில் இறங்கிவிட்டால் மறுபடி ஏறமுடியாது என்ற நிலைமையில்த்தான் இருக்கிறது ரயில் வண்டி ஓட்டம்.

மீரா படத்தை அம்மாளுக்கும் அத்தை அம்மாளுக்கும் காட்டிவிடுங்கள். அது அவர்களுடைய பண்பட்ட உள்ளத்துக்குப் பெரு விருந்தாய் இருக்கும். தாங்கள் பார்த்திருப்பீர்கள்.

மீராவை யார் அனுபவிப்பார்கள் என்று கேட்டார்கள் அதற்குச் சொன்னேன்.

நாட்டுப்புறத்தார், பெண்பாலார், கலையில்த் தோய்ந்தவர்கள் இவ்வளவு பேரும் ரொம்ப ரொம்ப அனுபவிப்பார்கள். ஆங்கிலக் கல்வியை அரைகுறையாய்ப் படித்தவர்கள் பாடு கஷ்டந்தான். ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸரமாய் வறண்ட பாடங்களைப் படித்த பிறகு கலை வேரடிக்கிறது என்பதுண்டா.

ஒரு பி. ஏ. பி. எல். கேட்டார். காமிக் விஷயமில்லையே என்று. அவர் Greek unityயைப்பற்றி ரொம்ப ரொம்பப் படித்தவர்தான். ஒரு விஷயத்தைக் கூர்மையாக்கி வேகங் கொடுத்துப் பார்ப்பவர். இதயத்துக்குள்ச் செலுத்துவது தானே கலையின் லக்ஷ்யம். அதற்காகத்தான் unity வேண்டும் என்று சொன்னார்கள் கிரேக்கர்கள். ஹாலிவுட் படங்கள் எல்லாம் இந்த உத்தியைக் கைக் கொண்டே வேலை செய்கின்றன. கம்பரும் ஒரு படலத்தை எடுத்துக் கொண்டால் அத்தகைய வேகம் கொடுத்தே பாடுவார். இடைச் செருகலான (Rhythmless) பாடல்கள் அந்தக் கூர்மையைக் கொடுத்துவிடுகின்றன என்பதை நன்றாய்ப் பார்க்கலாம்.

நாளை 15. 11. 45 அன்று புறப்பட்டு சென்னைக்குப் போகிறேன். அகாலத்தில் ரயில் திருச்சிக்கு வருவதால்த் தங்களை தொந்தரவு செய்ய மனமில்லை.

தம்பி அவர்களை மதுரையில்ச் சந்திக்கிறேன். அவர்களுக்கு ஒரு வேலையும் கொடுத்திருக்கிறேன்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
**3-4-46**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கல்கியும் நானும் இங்கு நேற்று வந்து சேர்ந்தோம். ராஜாஜி இன்று வந்து சேர்ந்தார்கள். ஆரோக்கியத்திற்காக் வந்தருக்கிறார்கள். நல்ல வேளையாக மழையும் பெய்து

அருவியும் சுமாராய் ஸ்நானத்திற்குப் போதுமானபடி விழுந்துகொண்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இங்கே அமைதியும், அரசியல் விட்டாற்றியும் இருக்கின்றன. இருவரும் சீக்கிரத்தில் உடல்நலம் பெறுவார்கள் என்று நம்புகிறேன். குற்ருலநாதர் அருளும் இருக்கவே செய்கிறது.

தங்கள் மானேஜர் அனுப்பிய ரயில் பார்சல் சரியான படி சென்னை வந்து சேர்ந்தது.

பார்சலைத் திறந்ததும் வற்றல் வடகங்கள், அத்தையம்மாள் அருமையாய்ச் செய்து அனுப்பிய வற்றல் வடகங்கள் என்பதைத் தெரிந்துகொண்டோம். அப்போது மற்றவர்களுக்கு விஷயம் விளங்கவில்லை. அன்றிரவு கல்கி வீட்டில் சாப்பாடு சாப்பிட்டோம். சதாசிவம், எம். எஸ். எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிட்டோம். ராஜாஜி அவர்களும் அத்தருணம் வந்தார்கள். சாப்பிடவில்லை. அளவளாவத்தான் உட்கார்ந்தார்கள். கல்கி மனைவியார் எல்லோருக்கும் வற்றல் வடகங்களையும் பரிமாறிவிட்டு ஒரு வெள்ளித்தட்டில் அவைகளை வைத்து ராஜாஜி முன்னும் வைத்தார்கள்.

எல்லோரும் அந்த வற்றல் வடகங்களை ருசிப் பார்த்தார்கள். கண்ணிட்டும் ருசிப் பார்த்தார்கள் என்று சொல்ல வேண்டும்.

பார்வைக்கே அவ்வளவு அழகாய் இருந்தது. வடகத்துக்கு இவ்வளவு தூய வெள்ளை எப்படி வந்தது என்று வியந்தார்கள். வாயில் போட்டால் அப்படியே கரைந்து விட்டது.

உப்பு என்ருல் மஞ்சாடி கூடக்குறைய என்றில்லை. "திருச்சி நண்பருக்கு மோட்டார் வியாபாரம் இருக்கிறது. நல்ல வியாபாரம்தான். வற்றல் வடகம் வியாபாரம் செய்தால்

எல்லாவற்றையும் தூக்கி அடித்துவிடும்போல் இருக்கிறது. வெகு ருசி, வெகு மிருது, வெகு அழகு...'' என்பதாக ராஜாஜி பேசினார்கள்.

Post - prandial feast speech அதாவது மகேசுவரி பூஜை வாழ்த்து மாதிரி பேசினார்கள். சாப்பாடு முடிந்து எல்லோருமாக உட்கார்ந்து ஒண்ணரை மணி நேரம் பேசினோம். வற்றல் வடகம் தங்கள் அன்பு அத்தையம்மாளோடு விருந்தோம்பும் கலை இவைகளைப்பற்றிய பேச்சு வட்டமிட்டு வந்தன.

இதையெல்லாம்பற்றித் தங்களுக்கு எழுதவில்லை. தம்பி சுப்புகிருஷ்ணன் அவர்களுக்கு எழுதினேன். எங்கள் ரயில் அகாலத்தில் திருச்சிக்கு வருவதால்த் தங்களுக்கு எழுதக் கூடாது என்று எண்ணிவிட்டேன். தம்பியும் மைத்துனர் அவர்களும் ஸ்டேஷனுக்கு வந்தார்கள். காப்பி, உப்புமா எல்லாம் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்த அன்பையும் அழகையும் ராஜாஜி ரொம்பவும் பாராட்டி அனுபவித்தார்கள். ஆனால் சாப்பிடவில்லை. மதுரையில் இறங்கி விட்டார்கள்.

ரயில் மதுரை ஸ்டேஷனைவிட்டு புறப்பட்ட பிறகு காப்பி சாப்பிட உட்கார்ந்தோம். பொட்டலங்களை அவிழ்த்தோம் — இட்லி, உப்புமா, காப்பி எல்லாம் வந்திருந்தன. வடகமும் ஒரு பொட்டலத்தில் இருந்தது. அந்த வடகத்தையும் அத்தையம்மாள் அனுப்பிய வடகத்தோடு இங்கே கொண்டுவந்திருக்கிறோம்.

ராஜாஜிக்கு ஒரே அதிசயம். ''குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லோரும் எவ்வளவு பிரியமாக இருக்கிறார்கள். குடும்பத்தில் ஆடவர் தாய்மார் எல்லோருக்கும் எப்பேர்ப்பட்ட பண்பாடு இருக்கிறது'' என்று பாராட்டினார்கள். உலகம் நல்ல உலகம் என்றே பட்டுவிட்டது அவர்களுக்கு. அத்தை

யம்மாளுக்கும், அருமை மனைவியாருக்கும் என் அன்பைச் சொல்ல வேணும்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: ராஜாஜியும் கல்கியும் பலஹீனமாய் இருந்ததால் நேரே குற்றாலம் வருவதாக இருந்தாலும் அத்தையம்மாள் வேண்டுகோளுக்கு இணங்கி திருச்சியில் இறங்கவில்லை. மன்னிக்க வேணும்.

டி. கே. சி

டி. கே. சிதம்பரநாத முதலியார் ஓம் சாந்தி C/o கல்கி
கீழ்ப்பாக்கம்
22-11-46

இன்று இங்கு வைத்துத் தங்கள் கடிதம் கிடைத்தது.

தங்களுக்குத் திகைப்பாகத்தான் இருக்கும்.

திருச்சியிலிருந்து சென்னைக்குப் போனவன் என்ன ஆனான் என்று திகைப்படைந்திருப்பீர்கள்.

சென்னை சேர்ந்ததும் அப்படியே விமானம் ஏறி பம்பாய் போனேன். 24 நாள் அங்கே தங்கினேன். அங்கிருந்து ரயில் மார்க்கமாகத் தூத்துக்குடிக்குப்போனேன் கம்பர் விழாவுக்கு. பிறகு திருநெல்வேலி திருக்குற்றாலம். அங்கிருந்து சென்னை. சென்னையிலிருந்து திரும்பச் சிதம்பரம். சிதம்பரத்திலிருந்து நேற்று காலை கீழ்ப்பாக்கம் வந்து சேர்ந்தேன்.

தாங்கள் வெகு அழகாக வடநாட்டிலுள்ள தமிழ் நாட்டாரைப்பற்றி எழுதியிருக்கிறீர்கள். அவர்களுக்குள் ஒற்றுமையும் அன்யோன்ய மனப்பாங்கும் விளக்கமாய் இருக்கிறது. அது காரணமாக என்னை ரொம்ப ரொம்பப் பாராட்டிவிட்டார்கள். பம்பாய்க்காரர் (தமிழ்

நாட்டினர்) பல சிற்றுண்டி விருந்துகளும் நடத்தினுர்கள். கல்கி அவர்கள் புரோகிதராய் இருந்து நடத்தி வைத்தார்கள். கேட்பானேன். எல்லாம் பிரமாதந்தான்.

தமிழ் இலக்கியத்தையும் நம்மவர் பண்பாட்டையும் ரொம்ப ரொம்ப அனுபவித்தார்கள். எனக்கு ஜென்ம சாபல்யம் ஆய்விட்டது என்று சொல்லத் தோன்றியது.

சென்னைவாசிகள் உண்மையைக், கலையை, தெய்வத்தை எல்லாம் சேர்த்து அரசியல்ப் பிடாரிக்குப் பலியிடத் தயாராய் இருக்கிருர்கள். ஆனுல் பாம்பேவாசிகள் அதற்கு இணங்கவில்லை. இந்த ஒரு உண்மையைக் கண்டு அனுபவிப்பதற்கே பாம்பேக்குப் போகலாம். தாங்களும் இதை ஒப்புக்கொள்வீர்கள்.

* * *

ஒரு காரியார்த்தமான விஷயம்: எனக்கு ரொம்பவும் வேண்டிய நண்பர் P. C. சுப்பாராஜன் அவர்களுக்கு ஒரு 'Ford 18' கார் வேண்டும்: அவர்கள் இருப்பது தென்காசி. கார் அவர்களுக்கு மிக அவசியம். தாங்களும், தம்பி சுப்புகிருஷ்ணன் அவர்களுமாக வேண்டிய permit முதலியவை சம்பாதித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் — காரோடு.

குற்ருலத்திலிருந்து வரும்போது தம்பி அவர்களுக்குத் தந்தி கொடுத்திருந்தேன். ஆனுல்த் தந்தி அவர்களிடம் நேரா நேரத்தில்ப் போகவில்லை. ஸ்டேஷனில் சந்திக்கவில்லை.

மூன்று நாலு நாளையில்த் திரும்புகிறேன். அப்போது தகவல் கொடுக்கிறேன்.

* * *

திருச்சியில் எம். எஸ். கச்சேரியை அனுபவித்ததைப்பற்றி சதாசிவம், எம். எஸ். முதலியவர்களுக்குச் சொன்னேன். அவர்களுக்கு ரொம்ப திருப்தி. முந்தா நாள் சிதம்பரத்தில் எம். எஸ். கச்சேரி தெய்வீகமாக இருந்தது. நடராஜ மூர்த்தியின் அருட் பிரசாதம் என்றுதான் சொல்ல வேண்டும். நாலுமணி நேரம். அப்படியே 3000 பேர் ஸ்தம்பித்துக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உண்மை சங்கீதத்தின் சக்தி கொஞ்சம் கொஞ்சம் வெளிவந்து கொண்டிருக்கிறது.

* * *

உலகத்தில் எங்கும் இல்லாத கலைப் பண்பாடு நம்மிடையே இருக்கிறதென்பது வடநாட்டுக்குப் போனால்த் தெரிய வரும். ரொம்ப உண்மை.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: அத்தை அம்மாளுக்கும் அம்மாளுக்கும் என் அன்பு.

**டி. கே. சி.**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்

21-2-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

பம்பாயிலிருந்து அனுப்பிய கடிதம் கிடைத்தது. முந்தின கடிதமும் கிடைத்தது. விலாசம் இல்லாததால்ப் பதில் எழுதவில்லை. எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் என்ன வேலை இருந்தாலும் என்னை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் ரொம்பவும் பாக்கியசாலி.

ஏதோ தமிழ்நாட்டை அப்படியே விட்டுவிட்டு ஒரேயடி யாய் சாந்திநிகேதனில் இருந்துவிடப் போவதாகத் தாங்கள் பயப்படுவதாகத் தெரிகிறது. அப்படி ஒன்றும் இல்லை.

மார்ச்சு மாசம் 15௳ வாக்கில் சென்னையிலிருந்து புறப் பட்டு டில்லிக்குப் போக வேண்டும். அங்கே தமிழர் களோடு உறவாட வேண்டும். பிறகு சாந்திநிகேத னுக்குப் போய் ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அளிக்கும் ரூ. 2000/- பெறுமான தமிழ்ப் புஸ்தகங்களைச் சேர்ப்பிக்க வேண்டும். அப்படியே காசிக்கும் பம்பாய்க் கும் போய்விட்டுத் திரும்பிவிட வேண்டியதுதான். தாங்கள் ரொம்ப பயந்துவிட வேண்டாம்.

எப்படியும் சென்னையிலிருந்து புறப்படுவதற்குள் தங் களைப் பார்த்துக்கொள்கிறேன்.

கல்கி அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள் — தேக சௌக் கியத்துக்காக.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: அம்மாளுக்கும் அத்தை அம்மாளுக்கும் என் அன்பைச் சொல்லவேண்டும்.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்

27-2-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

25௳ கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம். வட நாட்டுப் பிரயாணத்தை வெகு அழகாய் நடத்தி இருக்

கிறீர்கள். காட்சிகளை ரொம்பவும் அனுபவித்திருக் கிறீர்கள். அனுபவிக்கும்போதெல்லாம் என் ஞாபகம் வந்திருக்கிறது. ரொம்ப சந்தோஷம்.

15.3.47 வாக்கில்ப் புறப்பட்டுப் பம்பாய்க்குப் போய் அங் கிருந்து டில்லி போய், பிறகு சாந்திநிகேதன் காசி முதலிய இடங்களுக்கு வர உத்தேசம். தாங்கள் குறிப் பிட்ட அழகிய காட்சிகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்க்க முயலுகிறேன்.

எவ்வளவு தூரம் போனலும் தாங்கள் தமிழ்நாட்டுப் பண்பாட்டைக் கண்முன்னல் பார்த்து வியக்கிறீர்கள். மற்றவர்களோ வடநாட்டுக்கே போகாமல் சென்னை யுனிவெர்சிட்டிக்குள் மாத்திரம் போய்விட்டுத் தமிழ் நாட்டில் ஒன்றுமே இல்லை, அடடாடா, வடநாட்டு காரியங்கள்தான் என்ன அற்புதம் அற்புதம் என்று சொல்லப் படித்திருக்கிறுர்கள். பள்ளிக்கூடத்து வாசனை காலேஜ் வாசனை அவர்களை விட்டுப் போனபாடாக இல்லை. விட்டுப் போவதற்கு என்ன பண்ணலாம். யோசித்துப் பாருங்கள். மற்றவை பின்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றுலம்
30-4-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் 23.4.47 அன்று அனுப்பிய கடிதம் கிடைத்தது. உடனே பதில் எழுதாததிற்குக் காரணம், கடிதத்துக்கு

நகல் எடுக்கிறதும் வந்த நண்பர்களுக்குப் படித்துக் காட்டுவதுமாக இருப்பதுதான்.

கடிதத்தை வாசித்தவுடன் Mr. சின்னையாத் தேவர் (சமீபத்தில் ஹிந்துக் காலேஜில் Economics Lecturer ஆக இருந்தவர்) நகல் எடுத்தார். Mr. Maharaja Pillai (Dist. Munsif, Srivilliputhur) கடிதத்தைப் பல தடவை படித்தார். நானும் வந்தவர்களுக்கெல்லாம் வாசித்துக் காட்டிக்கொண்டிருக்கிறேன்.

Hazlitt இருந்து நூறு வருஷம் ஆய்விட்டதே. உண்மைகளை எவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் ஒரு பாவியாவது அவைகளை நமக்கு எடுத்துச் சொல்லவில்லை. சொல்லிவிட்டால் அவர்களுடைய படாடோபங்களை வெறும் குடுக்கையில் போட்டு உருட்டுவதற்கு வழி இருக்காதல்லவா. யாரும், மாணவர்களே குடுக்கையை உடைத்துவிடுவார்களே.

இங்குள்ள பிரகஸ்பதிகளைத் தொலைங்கள். இங்கிலாந்திலுள்ளவர்களும் பேந்தப் பேந்த விழித்துத்தானே இருக்கிறார்கள். அவர்களுடைய பேந்தல்களைக் கப்பலேற்றி இங்கே விட்டார்கள். நம்முடையவர்கள் அவைகளை அப்படியே மடியில் வாங்கிக் கட்டிக்கொண்டார்கள். மடிகளை உதறித் தொலைங்கள் என்றால் மாட்டேன் என்கிறார்கள் — தங்களோடு நிற்கவில்லை.

தமிழ் ஆசிரியர்களுக்கும் மடியிலிருந்ததை எடுத்து விநியோகம் செய்தார்கள். வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி (அவரும் சென்னை யுனிவர்சிட்டி பி.ஏ.ஆக்கும்) போதும் போதும் என்று வாங்கிக்கொண்டார். இப்போதுந்தான் பண்டிதர்கள் எல்லாரும் 'பரிதிமாற் கலைஞர்'களாகத்தானே பாவிக்கிறார்கள்.

நமக்குக் காது அடைத்துவிட்டது. தலை கிறுகிறுத்துவிட்டது. இந்த அபத்த மூட்டைகளையெல்லாம் மாண

வர்கள் படித்துத் தொலேக்க வேண்டியிருக்கிறது. என்ன பரிதாபம். தமிழ் ஸ்காலர்களுக்கு மூளே இல்லே என்பது வெளிப்படை. அதோடு இரக்கமும் இல்லே. தமிழ் ஆசிரியர்கள் ஸ்காலர்கள் எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு பரிதாபம் கொண்ட ஆசிரியர்களே வெருட்டு கிருர்கள். ஹிம்சிக்கிருர்கள். ஒருவர் இருவர் நல்லவர் களாய் இருக்கிருர்கள். அவர்கள் பாடு ரொம்ப ரொம்பக் கஷ்டமாய் இருக்கிறது.

பாஷையினிடம் நம்பிக்கை இல்லாதவன் எந்த அக்கிரமும் செய்யத் துணிந்தவன் என்று சொல்லத் தோன்றுகிறது. (Shakespeare சங்கீதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களேச் சொன்னதுபோல்) பொதுவாக தற்காலத்து தமிழ்ப் பண்டிதர்களுக்கும் ஸ்காலர்களுக்கும் தமிழ் பாஷையில் நம்பிக்கை இல்லே. விளேவு என்ன? உலகத்திலேயே உயர்ந்த மேதாவிகள் என்று சொல்லக்கூடிய கவிஞர்களேச் சுட்டெரித்துவிடலாம் என்று சொல்லுகிருர்கள். அதோடு அபத்தம், கொச்சை, அயோக்கியத்தனம் எல்லாம் பொதிந் துள்ள இன்று, நேற்று வந்த நூல்களேப் போற்றுகிறது, மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறது என்றெல்லாம் சொல்கிருர்கள். சென்னே யுனிவர்சிட்டியைப்பற்றி என்ன சொல்லக் கிடக்கிறது. சுமார் 10 வருஷத்துக்கு யுனிவெர் சிட்டியை அடைத்து மூடி வைத்திருந்தால் இந்தக் காரி யங்கள் நடவாது; தமிழும் பொது அறிவுமே விருத்தி அடையும்.

தங்கள் Hazlitt உயிர்த்தெழுந்து வந்தால், அதிகாரமும் அவருக்கு இருந்தால் அப்படியே செய்வார்.

* * *

Hazlitt's essays என்று சிலவற்றை எப்போதோ வாசித் திருக்கிறேன். ஆனல் தாங்கள் குறிப்பிடும் கட்டுரை களேப்பற்றிக் கேட்டதே இல்லே. மகாராஜ பிள்ளேயும் கேட்டதில்லே. எப்படி இருக்கிறது காரியம்.

தாங்கள் சொல்லுகிறபடி எப்படியோ நூறு வருஷத்துக்கு முன்னமேயே, நான் சொல்லுகிற முறையிலேயே பேசியிருக்கிறார்.

'It is easy to affect a pompous style' என்பதை அவர் சொல்கிறார். "வடபாலுள்ள வளநகர் சென்னைக்குப் படர்ந்து — நின்னவதாம் நெல்லைநகர் நெடுந்தெருவில் யானுடை வருகை நிகழ் உற்றது" இப்படி எழுதுவது மூன்றாவது பாரத்துப் பையனுக்கே எளிது. ஆனால் அத்தகைய 'மோனை முத்தமிழ்ப் புலவர்களுக்கு' ஒரு தமிழ் வாக்கியத்தைப் பிழை இல்லாமல் உணர்ச்சி பரவசத்துக்கு ஏற்ப எழுதுவது முடியாத காரியம். எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும் முடியாது.

கல்கியின் அரிய தமிழை அவர்களுக்கு அனுபவிக்க முடியாது; எத்தனையோ பாய்ச்சல்கள், எத்தனையோ சுழல்கள்; கும்மாளிகள், இன்பங்கள், வானவட்டங்கள் எத்தனையோ. எல்லாம் தமிழர்கள், முக்கியமாக பெண்டிர் வாயிலிருந்து வருபவைதான். அவைகளின் அருமையையும் அழகையும் கல்கி அனுபவிக்கிறார்கள். எமக்கும் விளம்புகிறார்கள். தமிழ் பாஷைமேல் மோகம் உண்டாகிறது நமக்கு. என்ன காரணத்தினால் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் ஸ்காலர்களுக்கும் தமிழ்மேல் மோகம் உண்டாக மாட்டேன் என்கிறதோ தெரியவில்லை. ஏதோ அகஸ்தியர் சாபந்தான்!

தாங்கள் Hazlitt சொன்ன அனுபவங்களைத் தங்கள் வியாக்கியானங்களோடு அழகாய்க் கோத்துவைத்திருக்கிறீர்கள். மறுக்க முடியாத உண்மைகள் என்றுதான் நாம் சொல்லுவோம். ஆனால் யுனிவெர்சிட்டி ஆசாமிகள் என்ன சொல்லுவார்கள் தெரியுமா. அதெல்லாம் பழைய காலத்துக் கதை என்பார்கள். தமிழ் பாஷையை தூக்கி நிறுத்துகிற புண்ணியவான்களோ, அதெல்லாம் இங்கிலீஷுக்குப் பொருந்தலாம். ஆனால்த் தமிழ் பாஷை

வேறு, தனித்து இயங்கும் மொழி, செந்தமிழ், பண்டைத் தமிழ், என்றும் உள தென்தமிழ் இத்தகைய தனிப் பெருமை வாய்ந்த தமிழ் உயர் தனிச் செம்மொழியாகத் தான் இருக்கவேண்டும் என்று உரத்த கம்பீரமான குரலில்ச் சொல்லித் தீர்த்துவிடுவார்கள். எல்லாப் பண்டிதர்களும் ஒன்று சேர்ந்து பேசுவார்கள். பேபல் கோபுரம் கட்டிவிடுவார்கள். நாம் அதை அண்ணுந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். அந்தக் கோபுரத்தின் உச்சியில் மணி ஒன்றைக் கட்டி சாவு மணி அடிக்க வேண்டியதுதான்.

எப்படியோ தங்களுக்கு ஓய்வு ஏற்பட்டது. Hazlitt எழுதியதைப் படித்தீர்கள். என்னைப்பற்றியே சிந்தனை செய்ய ஆரம்பித்துவிட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

இப்படியும் ஒரு குழாம் நாம் சேர்த்துக்கொண்டிருக்கிறோம். அது போதும் நமக்கு. உலகம் 'தமிழ் உலகம்' நம்மோடு சேரவே வேண்டாம்.

அம்மாள் அன்று ரொம்ப ரொம்ப அவசரமாய் விருந்தூட்டி அனுப்பினார்கள். என் மேல் குற்றமில்லை ரேடியோக்காரர்கள்தான் பொறுப்பாளிகள் என்று அவர்களிடம் சொல்லி என்னை மன்னிக்கச் சொல்ல வேண்டும். அவர்களுக்கு என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
**9-5-47**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

வடகங்கள் நன்றாய்ப் பாக் செய்து பந்தோபஸ்தாய் வந்தன. இங்கே எல்லாரும் அனுபவித்தார்கள். முக்கிய

மாகக் கல்கியும் அவர்கள் மனைவியாரும். ராஜாஜி இல்லை. இருந்தால் எவ்வளவாகவோ அனுபவித்திருப்பார்கள். அவர்கள்தான் Hurtley Palmers உடன் ஏன் போட்டி போடக் கூடாது என்று சொன்னார்களே. இப்போது Industry மந்திரியாக இருக்கிறார்கள். எவ்வளவோ ஆத்திர மாகப்பேசி இருப்பார்கள். அம்மாளுக்கு எங்கள் நன்றியை சொல்ல வேண்டும்.

வடகம் என்றால் அம்மாள் கோடை வெய்யிலை உபயோகப் படுத்திக்கொண்டார்கள் என்று பொருள். அது மாத் திரமா. வெய்யிலும் அவர்களை வேண்டிய மட்டும் வாட்டி யிருக்கும். அவர்களுடைய அன்பும் சிரத்தையும் என் கண் முன் நிற்கின்றன.

தங்கள் அடுத்த கடிதத்தில் என்னுடைய கடிதத்தைப் பற் றிய விவரம் இல்லை. அது பிறகு வந்திருக்கும்.

11.5.47 திருவனந்தபுர எக்ஸ்பிரஸில் புறப்பட்டுத் திருச்சி வருகிறோம். இரவு ரிட்டையரிங் ரூமில் தங்கிவிட்டு மறுநாள் கோட்டையூர் போகிறோம்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
30-7-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. கடிதம் எழுதத் தாமதித்ததற்காக மன்னிக்க வேணும். சாரல் காலம் ஆன தால் நணபர்கள் பலர் வரவும் உல்லாசமாய்ப் பொழுது போகவும் வாய்ப்பாய் இருக்கிறது. அருமை மைத்துனர்

G.C. ரா., தங்கை, அம்மாள் மூவரும் வந்திருந்தார்கள். அவர்களுடன் உறவாடக் கிடைத்தது அவர்களை ஒட்டித் தங்களையும் எதிர்பார்த்தேன். ஆனால் வரவில்லை. தம்பியும் வரவில்லை. வந்தவர்களும் வெகு சீக்கிரமாகக் குடிலைக் கிளம்பிவிட்டார்கள். ஆனாலும் சில நாளாவது அவர்களோடு பழக முடிந்ததே என்று சந்தோஷந்தான்.

* * *

டாக்டர் திருவேங்கடம் வந்து சிலநாள் தங்கிவிட்டுப் போனார்கள். அவர்களுடைய அரிய சினேகம் கிடைத்தது. அவர்கள் மூலமாக என் உடல்நிலையைப்பற்றித் தெரிந்து கொண்டீர்கள். 66வது வயதுள்ள ஆசாமியைப்பற்றி ரொம்பத் திருப்தியாய் இருந்துவிட முடியுமா. முடியாது. டாக்டரும் தாங்களும் அலைச்சல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று எனக்கு வழிவகை எல்லாம் சொல்லுகிறீர்கள். என்னுடைய கொள்கையும் அதுதான். ஆனால் 'அவன்' ஒருவன் இருந்து நம்மை ஆட்டிவைககிறான் என்று ஒன்று கிடக்கிறது.

ஆகவே 4.8.47 அன்று கல்கி அவர்களும் நானும் சென்னையிலிருந்து சாந்திநிகேதனுக்கு விமானத்தில் புறப்படுகிறோம். இரண்டு வாரத்தில்த் திரும்புகிறோம்.

இருவரும் 1. 8. 47 அன்று சென்னைக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில்ப் புறப்பட்டு வருகிறோம்.

சௌகரியப்பட்டால்த் திருச்சி ஜங்ஷனில்ச் சந்திக்க வேண்டும்.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: அம்மாளுக்கும் அத்தை அம்மாளுக்கும் என் அன்பைத் தெரிவிக்க வேணும்.

டி. கே. சி

டி. கே. சிதம்பரநாத முதலியார் Visva Bharati
8-8-47

அருமை நண்பர் பட்டாபிராம் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கல்கி அவர்களும் நானும் விஸ்வ பாரதிக்கு முந்தாநாள் வந்து சேர்ந்தோம். இடம் வெகு அழகாய் இருக்கிறது. கட்டிடங்களுக்குத் தனி சோபை கொடுத்துக் கட்டியிருக்கிறார்கள். சில மரங்களையும் கொடிகளையும் நம்முடைய மனசுக்கு உவந்தவாறாக வளைத்தும் பண்படுத்தி இருக்கிறார்கள்.

சங்கீதம் எளிதாய் வார்த்தை, பொருள், பாவம் எல்லாம் கலந்ததாய் இருக்கிறது. பஜனைக்கு ஏற்றதாய் அமைந்திருக்கிறது.

எல்லாவற்றிலும் அதிகமாகப் பாராட்ட வேண்டியது கலைப்பள்ளியைத்தான். இந்தத் துறையில்ச் செய்து வருகிற மாதிரி பயிற்சியும் ஆர்வமும் வேறெங்கும் இராது. நந்தலால் போஸ் என்ற கலா நிபுணர் சாதிக்கிற காரியம் இது. அவர் சொல்கிறார். கலைக்கு உறைவிடம் வடநாடல்ல, தமிழ்நாடுதான் என்று பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறார். இவ்வளவு பரந்த அனுதாபம் மற்றவர்களுக்கு ஏற்படாது. கல்கிக்கும் எனக்கும் அபார மரியாதை நடக்கிறது. நாளை கல்கத்தா. 18உ வாக்கில் சென்னை.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

முகாம்
கல்கத்தா
16-8-47

டி. கே. சிதம்பரநாத முதலியார்

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

12உ தாங்கள் எழுதிய கடிதம் ராஜாஜி அவர்கள் கைக்கு வந்து சேர்ந்தது. கல்கியும் நானும் நேற்று இரவு அவர்

களைப் பார்க்கப் போயிருந்தோம். அவர்களே கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். ரொம்ப சந்தோஷம். அவர்களுக்கு தாங்கள் எழுதிய சந்தோஷத்தைக் குறித்துத்தான். சுதந்திரதினம், ராஜாஜி, கல்கியும் நானும் எல்லாம் முன் கூட்டிய காரியமாய் அல்லாமல் ஒன்று சேர்ந்தது தெய்வ அருள்தான் என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை ராஜாஜி ரொம்பவும் பாராட்டினார்கள். அன்பானது அப்படியெல்லாம் நிகழ்ச்சிகளோடு விளையாடுகிறது!

ரொம்ப சந்தோஷம்.

நாளை 17.8.47 விமானத்தில் சென்னை திரும்புகிறோம். மற்றவை பின்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம் C/o கல்கி
சென்னை
*3-10-47*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

30வ கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம்.

25.9.47 அன்று குற்றாலத்தை விட்டுப் புறப்பட்டேன். முன்னதாகவே தம்பி சுப்பு கிருஷ்ணன் அவர்களுக்கும் தங்களுக்கும் (திருச்சி விலாசம்) கடிதம் எழுதினேன்.

மதுரை ஸ்டேஷனுக்கு அத்தை அம்மாள் தள்ளாடிய பருவத்தில் என்னைப் பார்ப்பதற்காகவே வந்துவிட்டார்கள். பலகாரம் டிபன் சகிதமாக வந்தார்கள். அவர்களுடைய அன்பை என்ன என்று சொல்கிறது! அவர்களிடமிருந்துதான் தம்பியும் தாங்களும் சென்னை போயிருப்பதாகத் தெரிந்துகொண்டேன்.

என்னுடைய கடிதம் தங்களைப் பிடிப்பதற்காக ஓடிக் கொண்டிருக்கிறதென்று எண்ணுகிறேன். வரட்டும். கவலை இல்லை. வாஸ்தவந்தான். உடம்பு எனக்கு அவ்வளவு சரியாக இல்லை. பலஹீனந்தான். இன்று ஒரு Diabetis expert டாக்டரைப் பார்த்ததில் அவர் சொன்னார். நெய் பாலைத் தள்ளிவைத்ததால் இந்த பலஹீனம். நெய் தயிர் வெண்ணெய் பால் எல்லாம் இவ்வளவு இவ்வளவு சேர்க்க வேண்டும் என்று prescribe செய்திருக்கிறார். மற்றபடி சதாசிவம் எம். எஸ். இருவரும் தங்கள் அருமை அத்தை அம்மாளைப் போலவே என்னைப் பாதுகாத்து வருகிறார்கள். என்ன ஆனாலும் அத்தை அம்மாள் ஆவார்களா யாராவது?

அத்தைக்கு மிக்க நன்றி

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: அத்தை அம்மாள், அம்மாள், அப்பா எல்லோருக்கும் என் நமஸ்காரத்தை சொல்ல வேணும். மற்றபடி எல்லோருக்கும் என் அன்பு.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
9-11-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

7.11.47 அன்று குற்றாலம் திரும்பினேன். இங்கே மழையில்லை. கூட்டமும் இல்லை. ஒரே ஏகாந்தந்தான். அருவி விழுகிறது. குரங்குகள் இருக்கின்றன. குரங்குகளும் அவைகளின் சேஷ்டைகளும் இல்லை என்றால் குற்றாலம் குற்றாலம் ஆகாது.

வீட்டில் அம்மாள், அத்தை அம்மாள் இருவரும் சௌக்கியந் தானே. தாங்கள் பாக்கியசாலி. வீட்டுக்கு இரண்டு கிரக தேவதைகள் அல்லவா இருக்கிறார்கள். அவர்களுக்கு அன்பைச் சொல்ல வேண்டும்.

கிஷ்கிந்தா காண்டத்தை கம்பர் எப்படி அழகாக நடத்து கிறார் என்பதைக் கவனித்திருப்பீர்கள். இதிகாசம் என்றால் பல லக்ஷ்யங்களுக்கு உருவம் கொடுக்கிறது என்றுதான் ஆகும். சுக்ரீவன் ஒரு அரசன். உத்தம குணங்கள் வாய்ந் தவன். சினேகிதத்துக்கு உறுதியான துணை. ஏதோ காலம் போதாததால் உயர்ந்த குணங்கள் வாய்ந்த தமையனோடு ஒத்து வாழ முடியாமல் போய்விட்டது. இதற்கெல்லாம் விதியை நொந்துகொள்ள வேண்டியதைத் தவிர வேறு என்ன செய்யக் கூடும்.

அத்தகைய சுக்ரீவனைக் கோமாளித்தனத்துக்கும் குரங்குச் சேஷ்டைகளுக்கும் உள்ளாக்கினால் — அதாவது caricature செய்தால் — பின்பு வரும் அரிய கட்டங்களோடு எப்படிப் பொருந்தும்.

கம்பர் எல்லா விஷயங்களையும் முன்கூட்டி யோசித்து கட்டங்களுக்குத் தக்கவாறாகவே கட்டுக்கோப்பையும் பாத் திரங்களையும் வகுத்துக்கொண்டு போகிறார். உணர்ச்சிகள் பாத்திரங்களில் ஊறி உண்மையோடு தொனிக்கின்றன.

வான்மீகி ராமாயணத்தை என்ன பாடுபடுத்தியிருக் கிறார்களோ செருகலாளர்கள்? வான்மீகியிலும் ரொம்ப ரொம்ப செருகல் உண்டென்று வடநாட்டு நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அவைகளைக் களைந்த வான்மீக ராமா யணப் பிரதி ஒன்று பிரசுரமாய் இருப்பதாகச் சொல்லு கிறார்கள். அப்படி களைந்துள்ள ராமாயணத்தைப் பார்த் தால் ஒருவேளை பாத்திரம், கட்டம், கட்டுக்கோப்பு எல் லாம் பொருந்தி நிற்கலாம். அல்லாத பக்ஷம் இதிகாச லக்ஷணம் இல்லாததாகி விடும் ராமாயணம்.

கம்பர் எல்லாவற்றையும் ஒழுங்காகவே அமைத்து வைத்திருக்கிறார். இந்த முறையில் பார்க்கும்போது கிஷ்கிந்தா காண்டம் மனுஷ சுபாவத்தைக் காட்டும் ஸாஸனமாக விளங்குகிறது. தெய்வ உருவம் படைத்த கவிகளோ, பாத்திரங்களை நம்முடைய கண் முன் தத்ஸ்வரூபமாக நிறுத்துகின்றனர். கவியின் ஜோலி அதுதான்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

முகாம் C/o கல்கி
சென்னை
**2-12-47**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

பம்பாயிலிருந்து 30.11.47 அன்று சென்னைக்கு வந்தேன். நாளை 3.12.47 அன்று குற்றாலத்துக்குப் புறப்படுகிறேன்.

மீராப் படத்தை பம்பாயில் அபாரமாய் அனுபவிக்கிறார்கள். Central theatre என்ற பிரபலக் கொட்டகையில்த் தினம் மூன்று காட்சிகள். உயர்தர வகுப்புக்கான டிக்கட்டுகள் நாலு நாளைக்கு முன்கூட்டியே ரிசர்வ் ஆய் விடுகின்றன. வெற்றிடம் கிடையாது. பிரைம் மினிஸ்டர், பெரிய பெரிய எழுத்தாளர்கள், வியாபார நிபுணர்கள், குடியானவர்கள், கூலிவேலைப் பெண்கள் எல்லாரும் வந்து பார்க்கிறார்கள். பார்த்து உருகிவிடுகிறார்கள் திரும்பத் திரும்ப வந்துபார்க்கிறார்கள். கலை உண்மையாய் இருந்தால் எல்லாரையும் ஒருபடியாக வசப்படுத்திவிடும் என்பார்கள். கம்பர் அப்படியே வசப்படுத்துகிறார். எம். எஸ். ஸும். அப்படியே வசப்படுத்துகிறார். ஆயிரக் கணக்கான பேர்கள் சான்று பகர்கிறார்கள். நானும்

தினம் தினம் அநேகமாய்ப் பார்த்து வந்தேன். எனக்கும் நாளுக்கு நாள் அதிகமாகவே இதயம் ஈடுபடுகிறது.

சங்கீதமும் மெய்ப்பாடும் (action) உலகத்தில் இல்லாத மாதிரி அவ்வளவு உயர்வாய் இருக்கிறது. உண்மையை ஊடுருவிப் பார்க்க முடிகிறது. The soul we see—The material and the sound media give way for the truth to shine. A real miracle. இந்தமாகவே அனுபவித்து விடுகிறார்கள் ஜனங்கள். கொட்டகைக்கு வெளியே வராந்தாவில் வைத்திருக்கும் மீரா (எம்.எஸ்) படத்துக்கு புஷ்ப ஆரம் சமர்ப்பித்து கொட்டகைக்குள்ப் போகிறார்கள்.

பம்பாயில்த் திருவிழாதான். மக்கள் பக்தியில் திளைக்கிறார்கள். பத்திரிகைகள் (ஆங்கிலம், குஜராத்தி, மராத்தி) எல்லாம் ஒரே முழக்கமாய்ப் புகழ்கின்றன.

இந்த மாதிரிப் படம் இதற்குமுன் பம்பாய்க்கு வந்ததில்லை என்கிறார்கள். ஹிந்தி மீராவிலுள்ள அம்ஸம் அப்படி அப்படியே ஒவ்வொன்றும் தமிழ் மீராவிலும் இருக்கத்தான் இருக்கிறது. ஆனாலும் தமிழ் மக்களுக்கு அவைகளைக் கண்டு அனுபவிக்க முடியாமல் போயிற்று. எல்லாம் சென்னை யுனிவெர்சிட்டியிலிருந்து விளைந்த காரியந்தான். படிப்பெல்லாம் உண்மையைப் பாராமல் நிழலோடு கட்டி அழுத காரியமாய்ப் போய்விட்டது. பிறகு உண்மையைக் காணக் கண் இல்லை என்று ஆய்விட்டது.

கலையெல்லாம் தமிழ்நாட்டில். ஆனால் அதை அனுபவிக்க ஆளில்லை. ஆளைத் தேடி பம்பாய்க்கும் டில்லிக்கும் போக வேண்டியிருக்கிறது. டில்லியில் மீராப் படத்தை ஜவஹர்லால்ஜி பார்க்கப் போகிறார். தலைமை வகிக்கப் போகிறார். லார்டு & லேடி மௌண்ட்பேட்டனையும் பார்க்க அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். நானும் எம். எஸ்., சதாசிவத்துடன் போவதாக ஏற்பாடாகி

இருந்தது. ஆனுல் அங்குள்ள அசாத்தியக் குளிரிஞல் என்னை மன்னித்துவிட்டார்கள்.

* * *

மீராப் படம் என்ருல் கண்ணுக்கும் காதுக்கும் புலனுகும் கலை—மெய்ப்பாடு, சங்கீதம் இவைகளை அறிந்து அனுபவிப்பது எளிது. அனுபவிப்பதற்குக் கஷ்டமானது எதுவென்ருல்க் கவிதான். இதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனுலும் தாய்மொழியில் ஒருவகையாய் அனுபவித்துவிடலாம். இதர பாஷையில் கஷ்டந்தான். தாகூர் முடியாது என்று கூடச் சொல்லுவார். அதிலும் வழக்கொழிந்த வடமொழியில் ரொம்ப ரொம்பக் கஷ்டம். ஏமாந்து போவதற்கு மொழி ஒன்றே போதும். ஆங்கிலமும் சேர்ந்துவிட்டால் ஆபத்தை இப்படி அப்படி என்று சொல்ல முடியாது.

தமிழில் அல்லியரசாணி மாலை பவளக்கொடி மாலை என்று புஸ்தகங்கள் இருக்கின்றன. தமிழின் சுவையை அதில்க் காணலாம். அனேகமாக அதைப் படிப்பவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்தான். அது காரணமாகச் சில குறைகள் இருக்கலாம். இருந்தாலும் தமிழ்ப் பண்பும் கவிப்பண்புமே இருக்கின்றன என்று சொல்லலாம். அவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால்க் கூட கதை ருசியாய் இருக்கும்.

* * *

The Poetry of Valmiki கிடைத்தது. பார்த்துக்கொண்டு வருகிறேன். ராமாயணத்தை அதாவது வால்மீகியை ஒதுக்கிவைத்துவிட்டு ஆங்கிலத்தில்க் கற்றவைகளை அதாவது கண்டவைகளை எல்லாம் ஆங்காங்கு சிதறுகிற காரியமாகத்தான் இருக்கிறது. நீண்ட நீண்ட பாகங்களுக்கான மொழிப்பெயர்ப்பைப் பார்க்கிரும்.

அதில் லக்ஷ்யமோ கட்டுக்கோப்போ வேகமோ இருப்ப தாகத் தெரியவில்லை.

ஆங்காங்கு உணர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் உணர்ச்சியை அப்படியும் இப்படியுமாகச் சொல்லியிருக் கிறது. Art என்று சொல்லும்படியாக வேலைப்பாடு வேகமோ உருவமோ (form) இல்லை. நான் பார்த்த மட்டிலுமாவது இல்லை. கட்டங்களும் பேச்சுகளும் பாத் திரங்களின் உருவத்தைக் குலைத்துப் போடுவதாகவே தெரிகிறது.

வால்மீகியை ஆயுள்நாள் முழுதும் படிக்கிறவர்கள், கூட்டங் கூட்டமாகப் படித்தவர்கள் இருக்கிறார்கள். ஏதேனும் ஒரு விஷயம் தங்கள் அனுபவத்தோடு ஒத்து நின்றுவிட்டால் ஹா ஹோ என்றெல்லாம் கூத்தாடிவிடு கிறார்கள். கலையில் அப்படியெல்லாம் இளக்காரம் காட்டக் கூடாது.

கம்பர் முத்தொள்ளாயிரம் என்று எடுத்துக்கொண்டால் ஏதோ பூர்வமான நூல்கள்தானே என்று இளக்கார மாகவா பார்க்கிறோம். இல்லை, ரஸம் இல்லை என்றால்த் தள்ளிவிடுகிறோம்.

இலைத்த புஸ்தகத்தை வைத்துக்கொண்டு விமரிசனம் எழுதுகிற கிரியை வேண்டாத காரியம். வாசிக்கிற காரி யம் கஷ்டமான காரியம். அங்கொரு உண்மை போதனை சோக வாக்கியம் இங்கொரு வாழ்க்கைக் குறிப்பு வர்ணனை என்றிருந்தால்ப் போதாது.

அனாவசியமாக ஒன்றை மடியில் போட்டுக்கொண்டு கெஞ்சிக் கூத்தாடுவது வேண்டாம். வாசிப்பதும் கஷ்டம். ஞாபகத்துக்கு வருகிறது.

Of all the cant that are canted in this canting world although the cant of hypocrasy may be the worst the cant of criticism.

Criticism is the most tormenting.

— Lawrence Sterne

இந்த மேற்கோள் வருகிறது எல்லாம் மெட்ராஸ் யுனிவெர்சிட்டி செய்கிற காரியம். உண்மையைப்பற்றியே கவலே இல்லே. எதையோ இழுத்தும் பிச்சும் எழுத வேண்டியது, புஸ்தகம் புஸ்தகம் என்று புகழ்ந்துவிட வேண்டியது கடமை என்ருய்விட்டது.

இப்படியும் எழுதலாம் மேலும் எழுதலாம். ஆனல்க் கம்பரை அனுபவிக்க முடியாது. மீராப் படத்தை அனுபவிக்க முடியாது: கடமை கடமை என்று பொய் சொல்லிக்கொண்டே எத்தனே யுகம் இன்னும் கழிய வேண்டுமோ, கண்டது யார்? நிற்க.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: ஆசிரியர் சில நல்ல குட்டிக் கதைகள் எழுதியிருக்கிருர். அது வேறு காரியம். கவி, கவிதை இவைகளே காண்கிற காரியம் முற்றிலும் வேறு.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்ருலம்
15-12-47

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

திருநெல்வேலிக்குப் போய் ஆவுடையப்ப பிள்ளே அவர்களுடன் இரண்டு நாள் இருந்துவிட்டு நேற்று இரவுதான் குற்ருலம் வந்து சேர்ந்தேன்.

இரண்டு நாளும் பாளையங்கோட்டை திருநெல்வேலி இரண்டு நகரங்களிலும் உள்ள நண்பர்களை, சுமார் இருபது நண்பர்களைப் பார்த்தேன். குடும்பத்தோடேயே போயிருந்தேன். நண்பர்களைக் குடும்பத்தோடேயே போய்ப் பார்த்தேன். அப்படியெல்லாம் பார்க்க முடிந்தது. நண்பர் வெங்கட்டராமானுஜலு நாயுடு அவர்கள் உதவிய காரைக் கொண்டுதான். அல்லாதபக்ஷம் அப்படியெல்லாம் பார்க்க என் உடல் நிலை இடம் கொடுத்திராது.

திருநெல்வேலியில்ப் போய் இறங்கியபோதும் நாயுடு அவர்கள் ஸ்டேஷனுக்கு வந்து வரவேற்றார்கள். காரில் எங்களை ஆவுடையப்பபிள்ளை அவர் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

தங்களுடைய மனுஷன் நான் என்று தெரிய வேண்டியது தான், உடனே எல்லா சௌகரியங்களும் உபசாரங்களும் கிடைத்து விடுகின்றன!

தங்கள் 8வ கடிதம்

பாஸ்கரனுடன் தங்கி நல்ல பொழுது போக்கியிருக்கிறீர்கள். என்னை வைத்து அம்மாளையும் ஆடி இருக்கிறீர்கள். மிக்க சந்தோஷம். வெளியே தள்ளினாலும் தங்கள் இதயத்தை விட்டு என்னை அப்புறப்படுத்த முடியாது. அப்படி நட்புக் கொண்டேன்.

வாஸ்தவந்தான். பாஸ்கரனும் எழுதியிருக்கிறார்கள் பங்களா ரொம்பவும் வசதியாய் இருப்பதாக. தங்கள் அழகான வர்ணனையைப் பார்த்த பிறகு கட்டாயம் அங்கே போய்ச் சில நாளாவது பாஸ்கரனோடு தங்க வேண்டும் என்ற உறுதி பிறக்கிறது.

மந்திரி அப்பாஜியின் சம்பந்தமாக எழுதியுள்ள குறிப்புகள் வெகு ரஸமாய் இருக்கின்றன. உலகத்தில் மிகச் சிறந்த பண்பாடுகளில் ஒன்றாகிய நம்முடைய பண்

பாட்டைத் தூயதாக வைத்துக் காப்பாற்றிய பெருமை விஜயநகர சாம்ராஜ்யத்துக்கு உரியதே.

தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சியுடனும் உண்மையான அனுபவத்துடனும் எழுதியிருக்கிறீர்கள்

கலைக்குச் செய்ய வேண்டிய கடமை என்று எம். எஸ். ஸின் சங்கீதத்தையும் நடிப்பையும் பற்றி தெய்வீகக் கலை என்று பாராட்டி எழுதியிருக்கிறீர்கள்.

எத்தனை பேர் இருக்கிறார்கள் அத்தகைய கலையின் உயர்வை அனுபவிக்கவும் தாராள மனசுடன் புகழவும். அறியாமை அகம்பாவம் பொறாமை இம்மூன்றும் சேர்ந்ததுதான் சென்னை யுனிவெர்சிட்டி சரக்கு என்று சொன்னால் மிகையில்லை. ஏதோ சாபந்தான். வேறில்லை. கலை எங்கே இருந்தாலும் அதை நாம் அனுபவிக்க வேண்டும். ஆனால் அயலார் கலை சிலவற்றை அனுபவிப்பது கஷ்டம். உதாரணமாக நடராஜப் பெருமானது உருவத்தை மேல் நாட்டார் அறிவது கஷ்டந்தான். முடியாது என்பதுபற்றி அவர்களுடன் சண்டைக்குப் போகக் கூடாதுதானே.

மேல் நாட்டாருடைய கலை சம்பந்தமாக நாம் முழுவதும் அனுபவிக்க முடியாது என்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். லஜ்ஜைப்பட வேண்டியதில்லை.

அம்மாளுக்கும். அத்தை அம்மாளுக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டும்.

20.12.47 அன்று தூத்துக்குடி-எக்ஸ்பிரஸில் திருநெல்வேலியிலிருந்து ரயிலேறி திருச்சிக்கு மாலை வருகிறேன். இரவு பத்துமணி வரையும் ஸ்டேஷனில் இருந்துவிட்டு 10.50 மணிக்கு திருச்சி எக்ஸ்பிரஸில் சென்னைக்குப் போகிறேன்·

ஸ்டேஷனில் சுமார் 4 மணி நேரம் செலவழிக்கிறேன். தங்களைச் சந்திக்கலாம் அல்லவா.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: வெள்ளி மணி தீபாவளி மலரில் சோமு எழுதிய கட்டுரை மிக உயர்ந்தது. கூர்ந்து வாசித்து அனுபவிக்க வேணும். மீராப் படம் பம்பாயில் திருவிழா மாதிரிதான். ஒரே கூட்டமாய் அனுபவிக்கிறார்கள். இந்த நிலைமையில் 14.12.47 அன்று எம். எஸ். கச்சேரி, South Indian School வளர்ச்சிக்காக நடந்தது. வசூல் ரூ. 98000/-

தமிழ் நாட்டுக் கலை இவ்வளவு செய்கிறது.

**டி. கே. சி.**

முகாம்
**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருநெல்வேலி
11-2-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இன்று காலை முதல் வாழ்த்தாக திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை அவர்களுடைய குமாரத்திக்கும் மணமகனுக்கும் வாழ்த்துத் தந்தி அப்பா அவர்களிடமிருந்து வந்தது. எல்லாருக்கும் மிக்க திருப்தி. தாங்கள், தம்பி, அப்பா, அம்மா, மைத்துனர், எல்லாவற்றிற்கும் அம்மாள் எல்லாரையும்பற்றி விஸ்தாரமாகப் பிள்ளை அவர்களும் (கலியாணம் மாப்பிள்ளை வீட்டில்த்தான், 11 மணிக்குத்தான் போக வேண்டும்.) நானும் பேசிக்கொண்டிருந்தோம். Over a cup of coffee என்று சொல்லலாம். காப்பி நன்றாய் இருந்தது. அதைவிட ருசியாக இருந்தது உங்களை எல்லாம் பற்றிய பேச்சு.

சென்னையில் வைத்துத் தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. ஏற்பட்ட திட்டத்தின்படி வருகிற அகால மான ரயிலைப் பற்றித் தங்களுக்கு எழுதவில்லை.

ஆனால் தம்பி அவர்களுக்குத் தகவல் கொடுத்தேன். கடிதம் போய்ச் சரியான காலத்தில் சேரவில்லை என்று தெரிகிறது.

இன்று மாலை குற்றாலம் திரும்புகிறேன்.

அன்று நண்பர் பார்த்தசாரதியின் வீட்டில் நாம் எல்லாரு மாகத் தமிழை அனுபவித்தோமே, அது அரிய அனுபவம்.

அத்தகைய சத் ஸங்கம் கிடைப்பது அரிது. நான் யோகக் காரன். பெருந்தேவனாரும் யோகக்காரர்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
***16-2-48***

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் 13உக் கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம். மகாத்மாவின் புஷ்பப் பிரசாதமும் வந்தது. அதை எல் லோரும் சேவித்துக்கொண்டோம்.

பெண்டுகள் உணர்ச்சிமயமாய் இருக்கிறார்கள் என்பதை மகாத்மாவின் பிரிவை ஒட்டித் தெளிவாய்ப் பார்க்கிறோம். எங்கே போனாலும் அவர்கள் கூட்டந்தான் சோகத்தில் மூழ்கி இருக்கும்! மக்கள் என்றால் அத்தனை உயர்ந்த வஸ்து உயிரைப் பாதுகாக்கிறவர்கள் அவர்கள். மானிட வர்க்கத்தை அவர்கள் கையில் ஒப்படைத்திருக்கிறது. இதுகாறும் அந்த வர்க்கத்தை அவர்கள்தானே காத்து

வந்திருக்கிறுர்கள். பொறை என்றுல் அவர்களிடத்தில் தான் இருக்கிறது. நாம் அகராதியைப் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஆடவர் வர்க்கத்தில் அந்தக் குணங் களை அவர்கள் சாதாரணமாகப் பார்ப்பதில்லை. ஆனுல் மகாத்மாஜியிடம் பார்த்தார்கள். அப்படியே அவரிடம் ஒன்ருய்விட்டார்கள். பிரிவு நேரவும் துடிதுடிக்கிறுர்கள்.

இத்தனை உணர்ச்சி தத்துவமும் பெண்களிடத்தில் இருக் கிறது. அறிவு, கலை உணர்ச்சி எல்லாம் அவர்களுக்கு லகு வாய்ப் போய்விடுகிறது. பத்து வயசுப் பெண்ணின் அறிவையும் அனுபவத் திறத்தையும் பார்த்தால் நாம் நாண வேண்டியதுதான். கம்பர் பெண்டுகளுக்கு உரிய வர் என்று சொன்னுல் மிகையல்ல. வாஸ்தவம். கீதையின் உட்பொருளை பெருந்தேவனுர் அழகாய் அற்புதமாய்ப் பாடி வைத்துவிட்டார். ஆனுல், அதன் உண்மையை இதயம் ஒட்டி அனுபவிப்பது கஷ்டம். காந்திஜியின் வாழ்க்கையைப் பார்த்த பிறகு எளிதுதான். வாழ்க் கைக்கு எவ்வளவோ சாந்தத்தைக் கொடுக்க வேண்டும். அந்த உண்மை காந்திஜி பெருந்தேவனுருடைய பாடலைப். பார்த்தால் ரொம்பவும் அனுபவித்திருப்பார்.

இலங்கை நண்பர் திருவரங்கம் அவர்களது ரேடியோப் பேச்சைத் தாங்கள் ரொம்பவும் பாராட்டுகிறீர்கள். அன்பில் விளைந்த காரியம் ரஸமாய்த்தானே இருக்கும்.

வாலியை எப்படி அற்புதமாய் சிருஷ்டித்திருக்கிறுர் கம்பர். இப்படியெல்லாம் பாத்திரங்களை வேறு யார் சிருஷ்டித்திருக்கிறுர்கள் என்று நன்ருய்க் கேள்வி கேட்க லாம. தாங்கள் விஷயத்தை சிரத்தையோடு பின்பற்றி வருகிறீர்கள். ரொம்ப சந்தோஷம்.

அம்மா வந்திருக்கிறுர்கள். மதுரையில் தங்கைக்குப் பூரண ஆரோக்கியம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

மிக்க சந்தோஷம். வீட்டில் எல்லாருக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டும்.

தங்கள் அன்பான கடிதத்துக்கு மிக்க நன்றி.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன**

குறிப்பு: குற்றாலக் குறவஞ்சி இத்துடன் அனுப்புகிறேன்

டி கே. சி.

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கடிதம் கிடைத்தது. தங்களுக்கு உடம்பு தேறி வருகிறது என்று எழுதியிருக்கிறீர்கள். மிக்க திருப்தி. மைத்துன ருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்களும் தம்பி சுப்புகிருஷ்ணனும் நாளை மதுரை ஸ்டேசனுக்கு வரு வார்கள்.

நாளை — திங்கள்கிழமை திருவனந்தபுர எக்ஸ்பிரஸில் புறப்பட்டு சென்னை போகிறேன். சென்னையிலிருந்து 25உ பம்பாய்க்குப் புறப்பட வேண்டும். அங்கே எங்க ளுடைய ஆப்த நண்பருடைய மகனுக்கு உபநயனம். நான் வராவிட்டால் உபநயனம் உபநயனமாய் இராது என்று பையனுடைய தாயார் எனக்கு எழுதிவிட்டார்கள். பெண் உள்ளத்தைப்பற்றித் தாங்களும் அழகாய் எழுதி யிருக்கிறீர்கள். முன்னோரும் சொல்லியிருக்கிறார்கள்.

''தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை'' என்பதாக. ஆகையால் உபநயனத்துக்கு நானும் போகிறேன்.

முத்துசிவத்தைச் சந்தித்துப் பேசிய விஷயங்கள் எனக்கு மிக உவந்தவை. தமிழ் ஸ்காலர்களில் முத்துசிவன் ஒருவர்தான் என்னுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம். ரொம்ப சந்தோஷம்.

ஸ்டேஷனில் (திருச்சியில்) சந்திக்கலாம் அல்லவா. பெருந்தேவனார் பாடல்களை (3) எழுதிக் கொண்டுவருகிறேன்.

தாங்கள் ஸ்லோகம் வாசிக்கும்போது எல்லாருடைய மனசையும் கவர்ந்திருக்கிறது. வெகு பிரயோசனமான காரியம். மிக்க சந்தோஷம்.

மற்றவை நேரில்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

அம்மாளுக்கு என் நமஸ்காரம்.

**டி. கே. சி**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
***3-4-48***

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

ரயில்வே ரசீதில் 'மோட்டார் ஸ்பார் பார்ட்ஸ்' என்று கண்டிருந்தது. மோட்டார்க் கார் இல்லாதவனுக்கு மோட்டார் உறுப்புகள் எதற்கு, வேண்டாமே என்று திகைத்துக்கொண்டிருந்தோம். அந்த வேளை தங்கள் கடிதம் வந்தது. அதில் வடகம் அனுப்பியிருப்பதாகவும், ராஜாஜிக்கும் பார்ஸல் போயிருப்பதாகவும் அத்தை அம்மாள் உடன் இருப்பதாகவும் கண்டிருந்தது. சராசரி ஆபீஸ் ஹோதாவில் ரசீது எழுதிவிட்டார்கள்; வாஸ்தவந்தானே. G. சக்கரபாணி & ஸன்ஸ் மோட்டார்

வியாபாரிகள் அல்லவா. வடக வியாபாரிகள் (ராஜாஜி சொன்னது) அல்லவே என்று 'motor spare parts' என்று துணிந்து எழுதிவிட்டார்கள். மோட்டார் உறுப்புகள் என்ற மாத்திரத்தில் உள்ளே இருப்பது இரும்பாய்ப் போய்விடுமா? மாட்டாது.

வெகு மிருதுவான வடகங்கள் பல ரகங்களில் இருக்கின்றன. நான் தின்று அனுபவிக்கலாம். ராஜாஜியும் ரொம்பவும் அனுபவிப்பார்கள். அவர்களும் நானும் இதுவரை பாராத ரகங்களாக இருக்கின்றன வடகங்கள். வடகங்கள் நமக்குப் பொரு பொரு என்று ருசியாய்த் தான் இருக்கின்றன. ஆனால் தட்டட்டியில் அடித்து பங்குனி அத்தை அம்மாளையும் அம்மாளையும் வாட்டு வாட்டு என்று வாட்டி இருக்குமே என்று எண்ணும்போது தான் கஷ்டமாய் இருக்கிறது. அந்த வெயில் எல்லாம் அன்பின் தண்நிழலில் மறைந்துபோம்.

அந்த அம்மாளின் கைலாகவத்தை மதித்துத் தாங்களும் வெகு ஜாக்கிரதையாக பாக் செய்து அனுப்பியிருக்கிறீர்கள். அவ்வளவு ஜாக்கிரதையும் தகும். அதற்கு மேலும் தகும்.

அத்தை அம்மாளுக்கும் அம்மாளுக்கும் என் நன்றியையும் அன்பையும் சொல்ல வேண்டும்.

அவர்களுடைய விருந்தோம்பல் பண்பாட்டை எவ்வளவு பாராட்டிப் புகழ்ந்தாலும் போதாது. அன்னைமார் கையில் எத்தகைய அற்புதமான கலை தங்கிக்கிடக்கிறது. யுனிவெர்சிட்டிப் பட்டம் பெற்ற பெண்மணிகள் கையில் உயிரற்ற பார்ச்மெண்டு (Diploma)தானே இருக்கிறது!

நிற்க.

'சுதர்மத்'தில் வெளியாய் இருக்கும் தங்கள் கட்டுரையும் கிடைத்தது.

இயற்கையாய்த் தாங்கள் அனுபவிக்கிறீர்கள். குழந்தைப் பருவத்திலே இதற்கும் பயிற்சி வேண்டும். அறிவு, யுனி வெர்சிட்டிப் படிப்பால் வறண்டுபோனபின் இயற்கையின் அழகை அனுபவிப்பது முடியாத காரியம். அந்த பிரகிரு திக்கு வார்ட்ஸ் வொர்த் சொன்னதுபோல்,

"A primrose
 on a river's brim
A yellow primrose
 was to him;
And nothing
 more!"

எல்லாம் அவ்வளவுதான். தாமரை என்றால் வெறுந் தாமரையா முன்னோர்களுக்கு, அல்ல. தாமரைக்குள்ளே பிரம்மாவைப் பார்க்கிறார்கள், லக்ஷ்மியைப் பார்க் கிறார்கள், சரஸ்வதியைப் பார்க்கிறார்கள். இவர்களைத் தவிர்த்து வேறு என்னத்தைப் பார்க்க என்றே சொல்லத் தோன்றுகிறது.

தாமரையிலுள்ள எண்ணிறந்த அற்புதங்கள் குழந்தையின் மனதை இழுத்துவிடுகிறது. கவிஞர்கள், பக்தர்கள் இவர் களது மனதையும் இழுத்துவிடுகிறது.

"அலர் சொரிய கையுண்டு" என்று எப்படி புஷ்பத்தில் ஈடுபட்டுப் பாடுகிறார்கள்.

நந்தவனம் என்றால் கோயிலைச் சேர்ந்த அங்கம் அல்லவா. தாங்கள் சொல்கிறபடிக் கவிஞர்கள் இயற்கையில்ப் பொதிந்து கிடக்கும் தத்துவத்தைக் கண்டுகொண்டு கூத் தாடினார்கள்.

திருவள்ளுவர் மலையைப் பார்க்கிறார். ஆகா! அதன் பெருமைதான் என்ன! அதன் உறுதிதான் என்ன! உல கத்தையே புரட்டக்கூடிய சூறாவளி வந்து மோதினால்தான் என்ன. அசைந்தாவிடும்! என்றெல்லாம் அனுபவித்தார்.

அடுத்தாற்போல் மகாத்மாஜி, ராஜாஜி போன்ற ஒரு மனுஷனையும் அடுத்தாற்போல்க் கண்டார். அவரையும் அனுபவித்தார் — உள்ளத்தின் பெருமையை நோக்கித் தான்.

'நிலையில்த் திரியா(து) அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது!!!"

இயற்கையின் அழகும் பெருமையும் சேர்ந்து திருவள்ளுவர் உள்ளத்தில் ஒரு அரிய ஆன்மீக தத்துவத்தைப் பதித்து விட்டது. திருவள்ளுவரும் அந்த தத்துவத்தை நம்முடைய உள்ளத்தில்ப் பதிய வைக்கிறார்.

கவிஞர்கள் எல்லாரும் ஒரு கூட்டம். அந்தக் கூட்டத்துக்குள் நுழைய குழந்தைகளுக்குத்தான் உரிமை உண்டு யுனிவெர்சிட்டிப் பட்டதாரிகளுக்கு இல்லை என்று சொல்லலாம். கம்பர், காளிதாஸர், திருவள்ளுவர் எல்லாரும் தங்களுக்குக் கடமைப்பட்டவர்கள். உண்மையையும் அழகையும் வெளியிடுகிறீர்கள் அல்லவா. மிக்க திருப்தி.

Free India பத்திரிகையில் என்னைப்பற்றி கட்டுரை வந்திருக்கிறது—தங்கள் தூண்டுதலால். மகாராஜன் அவர்கள் அழகாய் எழுதியிருக்கிறார்கள். இப்போது யாருக்கு நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை.

மிக்க சந்தோஷம்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
8-4-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

'அந்த நாளும் வந்திடாதோ" என்ற கட்டுரை கிடைத்தது. அபூர்வமான வீரத்தோடு அகமத்ஷா எதிரிகளை எதிர்த்

திருக்கிறார். எங்கேயோ இருந்துகொண்டு, வெள்ளைக் காரன் நம்மை அடக்கி அடிமைப்படுத்தி விட்டானே! என்ற உணர்ச்சி உள்ளத்தில்க் கொதிப்பாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. அந்த உணர்ச்சியைச் சிதறடிக்க தற் காலத்திய உத்யோக சலுகைகளும் வியாபார சலுகை களும் அந்தக் காலத்தில் இல்லை. மனுஷ வாழ்க்கை சமுதாய வாழ்க்கை எல்லாம் எளிமையோடிருந்தது. மனுஷ னுடைய உள்ளான லக்ஷ்யங்கள் தொழிற்பட வசதி இருந்தது. வீரம் தயாளம் எல்லாம் வெளிவந்து தொழிற் பட்டன.

"The age of chivalry is gone" என்று பர்க் (Burk) சொன்னார். அந்த வாக்கில் எத்தனையோ பொருள்கள் கிடக்கின்றன. நல்ல ரஸமான பாகத்தை இந்திய சரித்தி ரத்திலிருந்து எடுத்து நம்முடைய நேர் அனுபவத் தோடு ஒட்டிக் காட்டுகிறீர்கள். ஆகவே பூர்வசரித்திரமும் தெளிவாகிறது. தற்கால சரித்திரமும் தெளிவாகிறது. ரொம்ப சந்தோஷம்.

சுதர்ம ஆசிரியரை நல்ல மையும் நல்ல டைப்பும் உபயோகப் படுத்தும்படி சொன்னால் நல்லது.

வடகங்களை வறுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். பொதுவாக நான் வடகங்களை உபயோகப்படுத்துவதில்லை. பல் இடம் கொடுக்காது. அத்தை அம்மாள் அனுப்பி யவைகளை நெய்யில் வறுத்தால் சாப்பிடுவதில் எனக்குக் கஷ்டமே இல்லை. "தாத்தாவுக்கென்றல்லவா வடகம் செய்து வந்திருக்கிறது" என்று குழந்தைகள் சொல்லு கிறார்கள். வடகத்தில் எவ்வளவோ பண்பாடு இருக் கிறது.

சமீபத்தில் மகராஜன் இருக்கிற சீவில்லிபுத்தூருக்குப் போய் அங்குள்ள கலைக்கழகத்தில்ப் பேசினேன். தமிழர் களுடைய சிற்பம், ஓவியம், சங்கீதம், நடனம் முதலான கலைகளைப்பற்றிப் பேசிவிட்டு இட்டலியிலுள்ள அருங்கலை

யைப்பற்றிப் பேசினேன். எல்லாரும் ரொம்ப அனுபவித்தார்கள். முக்கியமாகப் பெண்டுகளும் மாணவிகளும் அனுபவித்தார்கள். அதை எடுத்து இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களாம். இயல்புதான் அப்படி அனுபவிப்பது.

ஆனால்:

''இதென்ன இது. டி. கே. சி. இட்டலியைப் பற்றியா பேச வேண்டும். வேறு விஷயம் கிடையாமலா போயிற்று'' என்று ஒரு தமிழ்ப் பண்டிட் புகார் சொன்னாராம். அவரைக் கண்டால் வடகத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசக் கூடாது. தமிழ்க் கல்வி எப்படி இருக்கிறது.

12.4.48 அன்று இங்கிருந்து சென்னை போகிறேன். 15உ திண்டிவனம். 16, 17 தேதிகளில் திண்டிவனத்திலும் மயிலத்திலும் கலைவிழா அங்கே. பாஸ்கரனது கட்டளைப் படி போகிறேன்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
6-5-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் அனுப்பிய கடிதமும், இரண்டு புகைப்படங்களும் வந்தன. நம்பர் (1) படம் இரண்டிலும் தெளிவு என்று இங்குள்ளவர்கள் பார்த்துச் சொல்லுகிறார்கள். அதையே பிரதிகள் எடுக்க உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

அன்று அடித்த விளக்கொளிப் படங்களால் மாறி மாறி அடித்தார்கள் அல்லவா — கண்கள் கெட்டுப்போக

வில்லை. படத்தில்க் கண்கள் ஒரு மாதிரியாக இருக்கின்றன. அவ்வளவுதான். சிறிது நேரம் கழித்துச் சரியாய்ப்போய்விட்டது. சரியானபடி திருதார்ஷ்டர் "பார்ட்" போட வேண்டுமானுல், செங்கண் மாலேயே நாற்காலியில் வைத்து "லேட்டுகளை" அப்படியும் இப்படியுமாகப் பத்து நிமிஷம் அடிக்க வேண்டும். கண்கள் சரியாய்ப் போய்விடும் திருதார்ஷ்டர் பார்ட்டுக்குத்தான்.

* * *

ஏணி மாத்திரம் இருந்திருந்தால் மூர்ச்சையாய்ப் போக வேண்டியதிருக்கும் மேலே போனவுடன். நா. கொண்டு ஏறினதால் அது ஏற்படவில்லை. படத்துக்கு ஜோராய் உட்கார்ந்து விட்டேன். படத்தில் எல்லாரும் திருத்தமாய் முக்கியமாகத் தாங்கள் வெகுதெளிவாய்க் காட்சி அளிக்கிறீர்கள். பேஷ். பேஷ். பலே பேஷ்.

* * *

அத்தை அம்மாளது விருந்தோம்பலே விருந்தோம்பல். எனக்குச் செய்திருந்தது வெகு நேர்த்தியாய் இருந்தது. ஊறுகாயை நன்றாய் உபயோகித்து வருகிறேன். தனிப் 'பேட்டண்டாய்' இருக்கிறது அது. அத்தை அம்மாளுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்ல வேண்டும் இனி வரும் போது அந்த அவசரத்தில் ஓடிக்கொண்டிருக்க மாட்டேன் என்றும் சொல்லுங்கள்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: நம்பர் (I) (II) என்று படத்துக்குப் பின்னுல் எழுதியிருக்கிறது.

**டி. கே. சி**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
20-5-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கடிதம் கிடைத்தது. சென்னையிலிருந்து திரும்பியிருப்பீர்கள். என்னுடைய கடிதத்தை அத்தையம்மாள் பாராட்டினார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். அத்தையவர்களுடைய அன்புமயமான இதயத்துக்கு உவந்தது எதுவும் புனிதம் அடைந்துவிடும்.

மிக்க சந்தோஷம்.

தாங்கள் என்னுடைய தனிப் படத்துக்கும் தங்களோடு உட்கார்ந்து பிடித்த படத்துக்கும் இரண்டு இரண்டு காப்பிகள் அனுப்பியிருந்தீர்கள். மிக்க சந்தோஷம். படம் மிக நன்றாய் பதிந்திருந்தது.

தனிப் படம் எனக்கு மிக்க மரியாதையை வாங்கிக் கொடுத்துவிடும். படங்களை எல்லாரும் பாராட்டுகிறார்கள்.

உற்ற நண்பர்களாகத் தாங்கள், சோமு, பலராம் மூவரும் இருக்கிறீர்கள். அதோடு பம்பாய் நண்பரும் இருக்கிறார். பம்பாய்க்கு நான் போனால் லீவ் எடுத்துக்கொண்டு பேச்சைக் கேட்க வருபவர். அவர் படமும் சத் ஸங்கத்தோடு சேர வேண்டியதுதானே.

பத்திரமாய் மனசில் பதியவைக்க வேண்டிய பாத்திரங்கள்.

ஜூன் மாசம் 1உ வாக்கில் சென்னைக்குப் போகலாம் என்றிருக்கிறேன்.

உதகமண்டலத்தில் எம். எஸ். கச்சேரி ஒன்று நடந்தது. கவர்னரும் மனையாளும் கச்சேரி முழுதும் உட்கார்ந்து கேட்டார்கள்.

லேடி நை. சொன்னாராம்: "எனக்கும் சங்கீதப் பைத்தியம், பயிற்சி எல்லாம் உண்டு. மேல்நாட்டார் பாடுவதை வேண்டிய மட்டும் கேட்டிருக்கிறேன். ஆனாலும் இந்த உயிர்நாடியும் உணர்ச்சியுமுள்ளதான சாரீரம் போன்றதைக் கேட்டதே இல்லை" என்று சொன்னாராம். எனக்கு அபார திருப்தி. தாங்கள் கடிதம் எழுதுங்கள்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

C/o கல்கி
சென்னை
30-8-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

திருச்சியிலிருந்து அனுப்பிய அன்பான கடிதம் கிடைத்தது. குழந்தையும் தாயும் மதுரையில் சௌக்கியமாய் இருக்கிறார்கள். மிக்க சந்தோஷம்.

ராஜாஜி விஜயம் அபூர்வமான ஒளியை வீசியது. போன போன இடமெல்லாம் உபதேசம். யுனிவெர்சிட்டிப் பிரசங்கம் அபாரம்; பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக உயிரற்றுக் கிடந்த வஸ்துக்களை உயிரற்றன என்று தைரியமாய்ச் சுட்டிக் காட்டினார்கள். இதற்குமுன் யாரும் தொடாத விஷயங்களைத் தொட்டுப் புரட்டினார்கள். வெளியேற்ற வேண்டிய காரியங்கள்தான் என்று சொல்லிவிட்டார்கள். பெண்களுக்குச் சொல்லும்போது பள்ளிக்கூடப் படிப்பெல்லாம் ஒரு அளவுக்குப் போதும். படிப்பை நிறுத்திக்கொண்டு கலியாணம் செய்து குடும்பத்தை பாதுகாத்து வாருங்கள் என்று Ethiraj College விழாவில் சொல்லி

முடித்தார்கள். பெண் கல்வி, பெண் கல்வி என்று பழைய பல்லவியைப் பாடவில்லை.

கல்விக்கு, பெண்களுக்கு, நமக்குந்தான் நல்ல காலம் பிறக்க வேண்டும் — ராஜாஜி அவர்களால்த்தான்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

முகாம்
C/o கல்கி
சென்னை
6-9-48

டி. கே. சிதம்பரநாத முதலியார்

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்:

நாளை 7உ இரவு திருவனந்தபுர எக்ஸ்பிரஸில்ப் புறப்பட்டு நேரே திருநெல்வேலி போகிறேன். மதுரையில் இறங்க இயலவில்லை. மன்னிக்க வேணும்.

குழந்தையும் தாயும் சௌக்கியமாய் இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

திருநெல்வேலிக்குத் தாங்கள் என்னுடன் வரலாம் அல்லவா. வந்தால் வெகு ஜோராய் இருக்கும்.

அப்பா, அம்மா, அத்தை அம்மா எல்லாருக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்ல வேண்டும். மைத்துனர் தம்பி மற்றும் எல்லோருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: ராஜாஜி பேசியதெல்லாம் வேதகாலத்து ரிஷிகள் பேசியது போல் இருக்கின்றன. ஆம். உள்ளம் அனு

பவித்த உண்மைகளை அப்படியே கொட்டினார்கள் அக்காலத்தவர். ராஜாஜியும் அதேபோல்க் கொட்டுகிறார்கள்.

மற்றவர்களோ உள்ளத்தில்க் காணக் கிடைத்த சிலவற்றை பத்திரிகைகள் புஸ்தகங்கள் பாடப் புஸ்தகங்கள் — இவைகள் மூலமாக, வடிகட்டிக் கட்டி வெளிவிடுகிறார்கள். மிச்சம் எல்லாம் வெறும் தண்ணீர். வெளியில் கொட்ட வேண்டிய வஸ்த்துத்தான். சத்து ஒன்றுமே இல்லாதது. ஆகாரச் சத்தாக ஒன்றுமே இல்லாதது. பெர்னடுஷா என்ன சொல்லுவார். மனுஷ சமூகமானது, ச த்தில்லாத தண்ணீரைக் குடித்துக் குடித்து சோகையும் கவலையுமாய்த் தொலைந்து போயிற்று என்று சொல்லுவார்.

டி. கே. சி

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
2-11-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இந்தத் தடவை திருச்சிராப்பள்ளித் தங்கல் மிக்க திருப்தியாய் இருந்தது. தாங்கள் அனேகமாய்க் கூடவே இருந்தீர்கள். ஏன் தங்கள் வீட்டில் ஜாகை வைத்திருந்தால்க் கூட நாம் இருவரும் அவ்வளவு நேரம் ஒன்றாய் இருந்திருக்க மாட்டோம்.

எனக்கு தனிப்பட்ட திருப்தி எதுவென்றால், முதல் நாள் இரவு வைதேகி அம்மாள் வீட்டில்க் கூடிய சின்னஞ்சிறு மாதர் சங்கத்துக்குத் தாங்களும் வந்திருந்தீர்களே, அது தான். அந்தக் கூட்டத்துக்குக் கால வரையறை கிடையாது. "இதை அதிகமாய்ப் பேசிவிட்டார் அதைக் குறைத்து விட்டார்" என்று சொல்ல யாரும் இல்லை. தலைவரும் கிடையாது. ஏதோ திண்ணைப் பேச்சு. திண்ணையிலிருந்து

ஷேக்ஸ்பீயர் சொல்லுகிறபடி, வானத்துக்கு எளிதாக குதித்துவிடலாம். ஆனால் பிரசங்க மேடையிலிருந்து அவ்வளவு எளிதாகக் குதித்துவிட முடியாது. தலைவரும் சபையோரும் 'கிரிட்டிக்'களும் சேர்ந்து காலைப் பிடித்து இழுத்துக்கொண்டிருப்பார்களே. இதையெல்லாம் உத்தேசித்துதான் Oliver Wendel Holmes ஆசிரியர் எல்லாவற்றையும் Breakfast table பேச்சென்று சொல்லித் தீர்த்துவிட்டார்.

அந்த வைதேகி அம்மாள் கூட்டிய திண்ணைப் பேச்சுக்குத் தாங்கள் வந்திருந்தீர்களே, அது எனக்கு வாய்ப்பான காரியம்.

அப்படியே மறுநாள் சேவா சங்கக் கூட்டத்துக்கும் வந்திருந்தீர்கள். தங்களைப் பற்றியும் Cultural League சங்கத்தைப் பற்றியும் உண்மையைச் சொல்ல வாய்ப்பாய் இருந்தது. அது காரணமாகவே தாய்மாரைப்பற்றி பேசியதெல்லாம் உண்மைதான் என்று பட்டது. தாய்மாருக்கு மிக்க திருப்தியும் ஏற்பட்டது.

அன்று நான் பேசிய விஷயத்தையும் கவிகளையும் அவர்கள் நன்ருய் உணர்ந்து அனுபவித்தார்கள். தாங்கள் அதற்கு சாக்ஷி. மிக்க திருப்தி.

தாய்மார்கள் கலெக்டர் ஜெயம் ராஜன் தாங்கள் எல்லாரும் என்னை எவ்வளவோ அருமையாய்ப் பார்த்து வழியனுப்பினீர்கள். இந்த அன்பை நினைக்க நினைக்க உள்ளம் குளிருகிறது. உடம்பு தேறுகிறது. எல்லாருக்கும் மிக்க நன்றி.

* * *

சீவைகுண்டத்தில் குமரகுருபர சுவாமிகள் வாசகசாலைத் திறப்பு விழா விமரிசையாக நடந்தது. குமரகுருபர சுவாமிகளைப் பற்றிப் பேசினேன். தாங்கள் கேட்டிருந்

தால் அனுபவித்திருப்பீர்கள். ஆனால் சீவைகுண்டம் திருச்சிராப்பள்ளி அல்லவே. சாதாரண மக்கள் ஒரு வகையாய் அனுபவித்தார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இரண்டு பண்டிதர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கு நான் பேசியது விளங்கவில்லை. ஏன் அவர்கள் பேசியதே விளங்கவில்லை. அப்படியானால் நம் போலியர் பாடு என்ன.

மதுரையில்க் குழந்தை அம்மாள் எல்லாரும் சௌக்கியந்தானே. அத்தை அம்மாளுடன் எப்போது திருச்சிக்கு வருவார்கள்?

தாங்கள் அனுப்பிய் ஊறுகாயை நானே உபயோகப்படுத்தி வருகிறேன். வடகத்தை எல்லாருமே உபயோகப்படுத்திக் கொள்கிறோம். வடகத்தைப் பார்த்தால் Huntley Palmers தோற்றுப்போய்விடுவார்கள்.

* * *

என்னுடைய சிறு தேவைகள் பெரிய தேவைகள் என்றே தங்களுக்குப் படுகின்றன. வாஸ்தவந்தான். கடிதங்களைத் தைப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பிள்ளைகள் பக்கத்தில் இல்லாதிருந்தால், சரிதான் போகட்டுமே என்று 16 பக்கம் கொண்ட கடிதத்தை அப்படியே மடக்கி லக்கோட்டாக்குள்ப் போட்டு அனுப்பி விடுகிறேன். சோம்பேறித்தனந்தான். சிலவேளை கடிதங்களைப் பல பேர் வாசிக்கிறோம். அப்போது ஒழுங்கு படுத்தி வாசிப்பது கஷ்டந்தானே.

இப்போது Bostich Hoe & Coவிடமிருந்து தங்கள் கடிதத்தின்பேரில வந்துவிட்டது. நானே தைத்துவிடுவேன். கடிதம் யாதொன்றும் இல்லை. அன்பர்களுக்கு என் கடிதந்தான் எத்தனை பக்கமாக ஓடினாலும் தொந்தரவு இல்லை. தங்கள் பரிவுக்கும் அன்புக்கும் மிக்க நன்றி.

குழந்தைகள் எந்திரத்தின் விசித்திரத்தையும் லாகவத்தை யும் பார்த்து வியந்தவண்ணமாய் இருக்கிருர்கள்—எனக்கு அடுத்தபடியாகத்தான்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: (1) சோமு நாளை டில்லிக்குப் போவான்.

**டி. கே. சி.**

குறிப்பு: (2) 28.10.48 அன்று இரவு இங்கு வந்து சேர்ந் தான். அருவி நன்ருய் விழுகிறது. சாரல் காலம் போலவே காற்றும் வீசுகிறது. சௌகரியம் இருக்கும் போது வந்து சில நாளாவது தங்கிப்போக வேண்டும்.

**டி. கே. சி**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்ருலம்
24-11-48

அன்புள்ள நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

மிஸஸ் ஆர். வி. சாஸ்திரி அம்மாள் மதுரைக்குப் போய்த் தங்கள் வீட்டில்த் தங்கினது ஒரு இதிகாசம்.

தம்பி அவர்களுக்கு எழுதினேன். சாஸ்திரி அம்மாள் காந்தி கிராமத்துக்குப் போகிற வழியில் இரவு மதுரை யில்த் தாமசிக்க வேண்டியிருக்கிறது. அதனுல் அவர்களை வீட்டுக்கு அழைத்துப் போய் மறுநாள் ரயிலில் ஏற்றி விடும்படியாக.

தம்பி அவர்கள் வீட்டில் இல்லை, அயலூர் சென்றிருந்தார் கள். ஆனுலும் கவரை உடைத்துப் பார்த்து மைத்துனர் அவர்கள் ரயிலடிக்கு வந்து அம்மாளை வீட்டில்க் கொண்டு

சேர்த்தார்கள். அங்கே வீட்டு அம்மாள் (Mrs. Paklavi) தாயார் அம்மாள் அத்தை அம்மாள் எல்லாருமாக என்ன உபசாரம் எல்லாமோ செய்து விருந்து மோக்ஷமாவதாகச் செய்து பிரமாதம் படுத்தினுர்கள். வீட்டிலுள்ள நாகரிகத்தையும் பண்பாட்டையும் பற்றி ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கிறுர்கள். திருச்சி அம்மாள் ஒரு என்சைக்ளோபீடியா என்று சொல்லுகிறுர்கள். எத்தனையோ விஷயங்களை அழகாய் எடுத்துச் சொன்னுர்களாம். பொழுது போனதே தெரியவில்லையாம். மிக்க திருப்தி.

எல்லாருமாக இரண்டு நாளாவது உடன் இருந்துவிட்டுப் போக வேண்டும் என்று வற்புறுத்தினுர்களாம். சாஸ்திரி அம்மாளுக்கு இருக்க ஆசைதான், அத்தனை நல்ல சகாக்கள் கிடைத்துவிட்டார்கள் அல்லவா. ஆனுல் அவசரமாகக் காந்தி கிராமத்துக்குப் போக வேண்டியதாய் இருந்தது. இனி சமயம் வாய்க்கும்போது தன் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ளுவார்களாம். வீட்டு அன்னைமார்களும் மீனுக்ஷி அம்மாள் கோயிலும் மதுரையை திவ்ய ஸ்தலமாக ஆக்கிவிட்டன.

தம்பி இல்லாமலே இவ்வளவும் நடந்தது. அவர்களும் இருந்திருந்தால்க் கேட்பானேன். சாஸ்திரி அம்மாள் பாடு கஷ்டமாய்ப் போயிருக்கும். மறுநாள் ரயிலேறி இருக்க மாட்டார்கள்.

தம்பியும் ஊர் வந்துசேர்ந்த பிறகு அருமையாய்த்தான் ஆற்றுமையை எழுதியிருக்கிறுர்கள். வாஸ்த்தவந்தானே சாஸ்திரி அம்மாளைப் பார்க்கக் கூட இல்லை அல்லவா.

* * *

குழந்தை சௌக்கியமாக இருப்பதாக சாஸ்திரி அம்மாள் சொன்னுர்கள். மிக்க சந்தோஷம். திருச்சிராப்பள்ளிக்கு மதுரையை விட சுகமான இடமாய் இருக்கும் என்று எண்ணுகிறேன். அப்படியே தாயும் சௌகரியமாய் இருப்

பார்கள். அத்தை அம்மாளுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்ல வேண்டும்.

மகளிர் சங்கம் நன்ருய் நடந்துகொண்டிருக்கும். வைதேகி அம்மாள் சென்னையிலிருந்து திரும்பியிருப்பார்கள்.

சோமு டில்லியிலிருந்து திரும்பி ஆய்விட்டது.

எல்லாரும் இங்கே சுகம். என் காலிலிருந்த புண் ஆறி விட்டது. 5 மாசமாகத் தொந்தரவு கொடுத்துவந்தது. கடைசியாகக் குணமாயிற்று.

தங்களுக்கு நல்ல ஆரோக்கியந்தானே.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: Refills வந்து சேர்ந்தது. மிக்க சந்தோஷம்.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம் C/o கல்கி
சென்னை
9-12-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் 26வ அன்று எழுதிய கடிதம் குற்ருலத்தில் வைத்தே கிடைத்தது. தாங்களும் அம்மாளுமாக மிஸஸ் சாஸ்திரிகளை மிக்க அன்புடன் பாராட்டியிருக்கிறீர்கள். அவர்களுக்கு மிக்க சந்தோஷம். அம்மாளும் மதுரையில் இருந்ததுபற்றி மிக்க திருப்தி. வெகு ரஸமாய்ப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்களாம்.

அவர்கள் பேச்சு, அனுபவம், பண்பாடு எல்லாவற்றையும் பற்றி சாஸ்திரி அம்மாள் ரொம்ப ரொம்ப பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாட்டுப் பெண்களைப்பற்றி Mr. மெலோனி 'சென்ஸஸ் ரிப்போர்ட்'டில் அபாரமாய்ப் பாராட்டியிருக்கிறார். கல்வி என்பது எழுதப் படிக்கிற காரியம் என்று எண்ணி விடக் கூடாது. உண்மையான அனுபவம், அனுபவ அறிவு, அனுதாபம் இவைகளைக் காட்டும் பண்பாடே கல்வி. இந்தக் கல்வி கற்றவர்கள் என்றால் தமிழ்நாட்டுப் பெண்கள் போல் உலகத்திலே வேறெங்கும் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாய் எழுதியிருக்கிறார். நம்முடைய அம்மாளை (Mrs. G.C.P.) அந்தக் குறிப்புக்கு இலக்கியமாக வைக்க வேண்டும். சாஸ்திரி அம்மாள் அவர்களை வியப்பதில் ஆச்சரியம் இல்லை. அவர்களும் குழந்தையும் சௌக்கியமாய் ஆரோக்கியத்துடன் இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். ஜெனவரி மாசம் 22உ மதுரைக் கல்ச்சுரல் லீகில் என்னைப் பேசும்படி கேட்டிருக்கிறார்கள். ஒப்புக்கொண்டுவிட்டேன். ஜஸ்டிஸ் A. S P. அய்யர் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள். தாங்களும் வந்திருந்தால் எனக்கு உற்சாகம்தானே.

என் காலில் இருந்த புண் பூரணமாய்க் குணமாகி விட்டது. அதைப்பற்றி இனிக் கவலை இல்லை. அஞ்சு மாசமாய்த் தொந்தரவு கொடுத்துவந்த காரியந்தான். இப்போது கடைசியாகக் குணமாகிவிட்டது. எல்லாவற்றுக்கும் ஏதோ ஜாதகம் வகுத்திருக்கிறது. ஜாதகத்தின் படி குணமாயிற்று புண் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தச் செய்தி தங்களுக்கு எவ்வளவோ கவலையை நீக்கும்.

தாங்கள், V.N. ராஜன் தம்பதிகள், பார்த்தசாரதி, வைதேகி எல்லாரும் என்னிடம் அளவற்ற அன்பு காட்டுகிறீர்கள். மனசுக்கு இதைவிட வேறு தட்பம் என்ன வேண்டும்.

எல்லாருக்கும் என் நன்றியையும் அன்பையும் சொல்ல வேண்டும்.

4.12.48 அன்றுதான் இங்கு வந்தேன். மிஸஸ். சாஸ்திரி குற்ருலத்தில்தான் இருக்கிருர்கள்—குமாரருடன்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

C/o பாஸ்கரன்
வேலூர்
21-12-48

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நேற்று மாலே இவ்விடம் வந்தேன். ராஜேஸ்வரியும் மாப் பிள்ளேயும் வந்திருக்கிருர்கள். பொழுது நன்ருய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த ஊரில் பக்தியும் தமிழ் ஆர்வமும் உடையவர்களாய் ஒரு நல்ல குழாம் இருக்கிறது. பாஸ்கரன் இங்கு வந்த பிறகு அந்தக் குழாத்துக்குப் புது ஊக்கம் பிறந்திருக்கிறது. நான் இங்கே வருகிறேன் என்று தெரிந்ததும் கம்பராமாயணம்பற்றி ஒரு பிரசங்கத்துக்கு ஏற்பாடு பண்ணிவிட்டார்கள். இன்று மாலே அது நடந்தது. நல்ல கூட்டம். ஆயிரம் பேர் மிக்க ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

என்னே அறிமுகப்படுத்தும் முறையில் பாஸ்கரன் ஒரு புராணமே பாடிவிட்டார்கள். (முந்தி எழுதியது வசனந் தானே:) கேட்பவர்களுக்கு வெகு ஜோராய் இருந்தது. ஏன் எனக்கே ஜோராய் இருந்தது.

உள்ளன்போடு உள்ளத்தை அப்படியே கொட்டும்போது அழகாய்த்தானே இருக்கும்.

நாளை மத்தியானம் புறப்பட்டு சென்னை திரும்புகிறேன். தாங்கள் வேலூருக்கு வருவதாக பாஸ்கரனுக்கு எழுதியிருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம். அவர்கள் எவ்வளவு தூரம் எட்டிப் போனாலும் நாம் தொடர்ந்து பிடிக்க வேண்டியதுதானே.

* * *

வீட்டில் அத்தை அம்மாள், அம்மாள், குழந்தை எல்லாரும் சௌக்கியந்தானே. அப்படியே மதுரையிலும் எல்லாரும் சௌக்கியம் என்று எண்ணுகிறேன்.

சாஸ்திரி அம்மாள் மதுரை வந்து, பிறகு தங்களிடம் வந்து பாலக்காடு போவதாக எழுதியிருந்தார்கள். 19௳ மதுரைக்கு வருவதாக எழுத்து. அதன்பேரில் தம்பியவர்கள் விலாசம் போட்டு அம்மாளுக்கு எழுதியிருந்தேன். பதில் வரவில்லை. திருச்சிக்கு வந்ததும் தாங்கள் தயவுசெய்து எழுத வேண்டும் — சென்னை விலாசத்துக்குத்தான்.

சாஸ்திரி அம்மாள் தங்களுடன் சாவகாசமாகத் தங்கிப் போவார்கள் என்று எண்ணுகிறேன்.

அவர்களுடன் அளவளாவினால் ரஸமான விஷயங்களாக வந்துகொண்டே இருக்கும். எதையும் கூர்ந்து ஆராய்ந்து வைத்திருப்பார்கள். கர்னாடக சங்கீதத்தின் தெளிவையும் நிறைவையும் அவர்கள் பாடும்போது நன்றாய் அனுபவிக்கலாம். அவர்கள், வீட்டு அம்மாளின் நாகரிகம் பண்பாடு இவைகளைப்பற்றி நாள் நாளாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். வெகு சந்தோஷமாய் இருந்தது. தங்கள் குடும்பத்தை லக்ஷிய குடும்பமாக எடுத்துச் சொல்லு

கிறார்கள். குடும்பத்துக்கு இறைவன் எல்லா நலங்களையும் தருவானாக.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: Madras Mail X'mas இதழில் ராஜாஜி பாரதக் கதையில் ஒரு அற்புதமான பகுதியைக் கொடுத்திருக்கிறார்கள். படித்துப் பார்க்க வேண்டும்.

**டி. கே. சி.**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

முகாம் C/o கல்கி
சென்னை
**27-1-49**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

மதுரையில் 'கல்ச்சுரல் வீகோடு' கலந்துகொண்டது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் அப்பா, அம்மா, தம்பி தங்கை மற்றும் உறவினரோடு கலந்து ஒரு நாள் உறவாடல் கிடைத்ததே என்ற எக்களிப்பு இன்னும் மனசை விட்டுப் போகவில்லை.

நம்முடைய யோகம் தனியான யோகந்தான். மகாராஜனும் வந்து கலந்துகொண்டார்கள் பாருங்கள்!

கம்பராமாயணம் பாட்டை அருமைத் தங்கை அனுபவித்ததையும் குறவஞ்சிக் குறும்பலாப் பாட்டை அன்னை அனுபவித்ததையும் போன போன இடமெல்லாம் சொல்லித் தமிழின் எளிமையையும் பெருமையையும் கொறித்துக் கொண்டிருக்கலாம்.

மற்றப்படி விருந்தோம்பலைப்பற்றி என்ன சொல்லுவது தெரியவில்லை. அம்மாள் பக்குவம் செய்த மாதிரி செய்த அமுதத்தால் எந்த நோயும் இந்த உடலைவிட்டுப் போய் விடும். அவ்வளவு அழகாய் ருசியாய் உடலுக்கு ஒத்த தாய் இருந்தன பதார்த்தங்கள்.

தம்பி, மைத்துனர் மற்றும் எல்லோரும் காட்டிய அன்பும் பரபரப்பும் தனி.

அப்பா அவர்கள் மறைந்து நின்று சகல காரியங்களையும் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். Motor bus body, என்னுடைய body எல்லாவற்றிலும் ஒரே சிரத்தை. இத்தனை நாளும் அவர்களை வீட்டில் வந்து பாராமல் ரயிலில் ஓடிக் கொண்டிருந்தது பெரிய பிழை என்று பட்டது. அனுபவ முதிர்ச்சி அன்பு எல்லாம் அவர்களிடத்தில் அருமையான முறையில்க் குடிகொண்டிருக்கின்றன.

அவர்களுக்கு அரிய புத்ர பாக்யம். உங்களுக்கும் சகோதர சகோதரிக்கும் அரிய பிதிர் பாக்கியம். மிக்க சந்தோஷம். திருச்சிராப்பள்ளியிலிருந்து தாங்கள் வந்தீர்களே. அதைப்பற்றி என்னத்தைச் சொல்ல.

அத்தை, அம்மாள், குழந்தை எல்லாருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

குறிப்பு: ஆலப்புழையிலிருந்து இன்று காலை சதாசிவம், எம். எஸ்., கல்கி எல்லாருமாக இங்கு வந்து சேர்ந்தோம்.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார் முகாம் C/o கல்கி
சென்னை
6-2-49

அருமை நண்பர் பட்டாபிராம் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

முதலில் 31உக் கடிதம வநதது. மதுரை நிகழச்சியைப பற்றியும் என்னைப் பற்றியும் தமிழ்ப் பண்பாட்டின் நிலையைப் பற்றியும் அழகாய் எழுதியிருந்தீர்கள். நான் அனுபவித்தது போலவே சீவிலிபுத்தூர் மகராஜன் அவர்களும் சகோதரியும் அனுபவிப்பார்கள் என்று அவர்கள் பார்வைக்குக் கடிதத்தை அனுப்பியிருக்கிறேன்.

புண்பாட்டில்த் தங்களுக்குள்ள ஆர்வத்தை மகராஜனும் சகோதரியும் நன்ருய் உணர்ந்து அனுபவிப்பார்கள்.

* * *

1.2.49 அன்று எழுதிய கடிதமும் அடக்கக் குறிப்பும் கிடைத்தன.

குறிப்பு வெகு ரஸமாய் இருக்கிறது.

'ஸ்காட்ஸ் மன்' ஆசிரியரும் 'அப்ஸெர்வர்' ஆசிரியரும் நடராஜ மூர்த்தியின் அழகைக் கண்டுவிட்டார்களே. நாம் அதிசயிக்க வேண்டியிருக்கிறது.

"They are full af whirling movement yet are perfectly poised" என்று சொன்ன ஆசிரியரை நாம் ரொம்பவும் பாராட்ட வேண்டும்.

Observer ஆசிரியரை சிதம்பரம் கோயிலுக்கு தீக்ஷிதராகவே நியமித்துவிடலாம் ஏன் அவர்தான் வழிபாடு நடத்தத் தகுதிவாய்ந்தவர். மற்ற தீக்ஷிதர்கள் அல்லவே அல்ல என்று உறுதியாய்ச் சொல்லலாம். நடராஜ மூர்த்தி இடம் போகாதீர்கள் என்று கூடச் சொல்லலாம்.

நடராஜ மூர்த்தியின் பிம்பத்தை அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? தங்கத்தகட்டை வைத்து மூடி வைத்திருக்கிறார்கள். அபிஷேகம் செய்யும் ஆறு நாட்களில் மாத்திரம் அபிஷேகம் செய்யும்போது, பிம்பத்தைப் பார்க்க முடியும். தீக்ஷிதர்களது ஊனக் கண்ணுக்கு தங்கந்தான் அதாவது "ரூபாய் அணாப் பைசாதான்" தென்படுகிறது. நடராஜ மூர்த்தியின் அழகும் அண்டபிண்ட சராசரங்களை ஆட்டும் திருக்குறிப்பும் தென்படவில்லை. குறிப்புகளைத் தாங்கள் அனுபவித்ததோடு நின்றுவிடாமல் நகல் எடுத்து அனுப்பினீர்களே!

மிக்க சந்தோஷம்.

* * *

நான் இங்கேதான் தங்குகிறேன். தூத்துக்குடிக்குப் போகவில்லை. 12உ குற்றாலம் திரும்புகிறேன்.

* * *

அத்தை அம்மாள், அம்மாள், குழந்தை எல்லாருக்கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: மதுரையில்த் தங்கள் வீட்டில்க் கண்ட பண்பாடும் அன்பும் மறக்கக்கூடிய காரியம் அல்ல.

**டி. கே. சி.**

குறிப்பு: 6 2 49. பெரியாழ்வார் பட்டினத்தார் காந்திஜீ இவர்களுக்குள்ள ஒரு தெய்வீக சகோதரத்வத்தை தாங்கள் ரொம்பவும் உணர்ந்து அனுபவித்திருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம்.

கல்கி நிருபர் ஒருவருடைய கடிதத்தின் நகல் இத்துடன்.

**டி. கே. சி.**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
20-2-49

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்கள் கடிதங்கள் நல்ல நல்ல மேற்கோள்களுடன் (quotations) வருகின்றன. மிக்க சந்தோஷம்.

பம்பாயிலிருந்து Asst. A/c. General வெங்குஸ்வாமி அய்யர் அவர்களும் நடராஜ மூர்த்தி பிம்பங்களைப்பற்றி 'Scotsman' முதலிய விமர்சன கர்த்தாக்கள் எழுதியுள்ள அபிப்பிராயத்தை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். தாங்களும் எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அது ஒரு விசித்திரந்தானே.

"The Nataraja Images (Exhibited in London) are full of whirling movement; Yet are perfectly poised" இதிலுள்ள உண்மையை ஒன்றாய்க் கவனித்து அனுபவிக்க வேண்டும். ஆட்டத்தில் ஒரு சுழற்சி. அந்த சுழற்சியில் அங்கங்கள் எல்லாம் எந்த நிலையில் நிற்கும் — மிதந்து நின்ற மாதிரி அப்படி நிற்கின்றன பிம்பத்தில். இந்த அங்க அமைப்பு காரணமாகத்தான் நடராஜர் பிம்பத்தை மேல்நாட்டு பிம்பங்களுக்கு மேலாகச் சொல்லுகிறார்கள். மேல்நாட்டாராவது அனுபவித்துச் சொல்லுகிறார்களே. நம்மவர் செய்த புண்ணியந்தான் அது.

* * *

மேல்நாட்டவர்களுக்கு நேர்மாறான நிரக்ஷரகுக்ஷி நம்முடையவர். கம்பரைப்பற்றி எவ்வளவு கேவலமாக எழுதியிருக்கிறார் பாருங்கள். வெறும் pedantry. அறியாமைக்கு அளவே இல்லை.

மேல்நாட்டு விமர்சன கர்த்தாக்களுக்குத் தமிழ் பாஷை தெரிந்திருந்தால் நடராஜப் பிம்பத்தை விட அதிகமாகக்

கம்பர் பாடல்களை அனுபவித்தும் பாராட்டுவார்கள். நம்முடைய 'விமர்சனகர்த்தா'வுக்கு ஒன்றுமே விளங்க வில்லை. ஆனாலும் ஒரு பயம். எங்கே கம்பர் மேலான கவியென்று கருதப்பட்டு விடுவாரோ என்பதாக.

கம்பரைப்பற்றி எழுதியவர் நடராஜப் பிம்பத்தைப்பற்றி அபாரமாய்ப் புகழ்ந்து எழுதுவார். ஏன்? அது ஒரு fashion. கம்பரைப்பற்றிப் பாராட்டி எழுதுவது fashion அல்ல. போகட்டும் அது.

* * *

*22.2.49* அன்று தென்காசியிலிருந்து திருவனந்தபுர எக்ஸ்பிரஸில் புறப்பட்டு நேரே சென்னை போகிறேன்.

*10.3.49* பம்பாய் போக வேண்டும். அங்கிருந்து நாகப் புரி. பிறகு டில்லி. ஏப்ரல் முதல் தேதிவாக்கில் சென்னை திரும்புவதாகத் திட்டம். ஆகவே கொஞ்சம் பெரிய வட்டம் சுற்றித் திரும்ப ஏற்பாடு. தேகத்துக்கு அலுப்பு ஏதேனும் ஏற்பட்டால் எம். எஸ். ஸின் பாட்டைக் கேட்டு உடம்பு சரியாய்ப் போய்விடும்.

அத்தை அம்மாள் குழந்தை தாய் எல்லோருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம் C/o கல்கி
சென்னை
*10-3-49*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இன்று ரயிலில் பம்பாய்க்குப் புறப்படுவதாக இருந்தது. பம்பாயில் இரண்டு கச்சேரிகள் நடத்துவதாகத் திட்டம்

பண்ணி சதாசிவம் எம். எஸ். போவதாக ஏற்பாடு; நானும் கச்சேரியைக் கேட்க உடன் போக ஏற்பாடு. ரயில் சம்பந்தமான செய்திகளிலிருந்து பம்பாய்க் கச்சேரிகளை ஒற்றிப்போட்டிருக்கிறது. ஒரு வாரத்தில் நாகப்புரி போய் அங்கிருந்து டில்லி போய்த் திரும்பும் மார்க்கத்தில் பம்பாய்க் கச்சேரிகளை முடித்துக்கொண்டு சென்னை திரும்பலாம் என்று உத்தேசம்.

இந்தக் காலத்தில் எல்லாம் குழப்பமாய்த்தான் இருக்கிறது. உறுதியாக ஒன்றைச் செய்து முடிப்போம் என்று சொல்ல முடியாது.

காலம் புரளுகிற தத்துவந்தானே. சில நாட் கழித்து இயல்பான கட்டத்தில் உருளலாம் உலகம்.

*　　*　　*

உலகப் பிரசித்திபெற்ற Hamlet நாடகத்தைப் பார்த்தேன் நாலு நாளைக்கு முன். Talkieஇல்த்தான். படம் எடுக்கும் திறம் நடிப்புத்திறம் காட்சி அமைக்கும் திறம் எல்லாம் அபாரம். கதையிலோ இயல்பாகவே ரஸம் இருக்கிறது.

ஆனால் ஷேக்ஸ்பியர் ரொம்ப ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டார். அவர் கவியாக எழுதினார். கவியை வசனப் போக்கில் சொல்லித் தீர்க்கிறார்கள். அப்போது அது வசனமும் இல்லை கவியும் இல்லை. தாமரைப் பூவை எடுத்து இஸ்திரி போட்டுவிட்டால் அது பூவும் இல்லை இலையும் இல்லை. அலங்கோலந்தான். அப்படிச் செய்திருக்கிறார்கள் திரையில். இது கடவுளுக்கும் ஆங்கிலேயருக்குந்தான் வெளிச்சம்

அத்தை அம்மாள் குழந்தை தாய் எல்லோரும் சௌக்கியம் தானே.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம் C/o கல்கி
சென்னை
19-3-49

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

17உ அனுப்பிய அன்பான கடிதம் கிடைத்தது. Hamlet சம்பந்தமாக நான் எழுதியது முற்றிலும் உண்மைதான். பலர் இப்போது அந்த உண்மையை ஒப்புக்கொண்டு வருகிறார்கள். ஏதோ ஷேக்ஸ்பியருக்குத் தாங்கள்தான் வாரிசு என்று சொல்லிக்கொண்டும், கருதிக்கொண்டும் வந்தவர்கள் கொஞ்சம் மாற்றிக்கொள்ளுகிறார்கள் அபிப்பிராயத்தை. ஷேக்ஸ்பியர் 'ஜீனியஸ்'தான். ஆனால் அவரது பாஷை விளங்கவில்லைதான் என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள. ஒப்புக்கொள்ளாமல் முடியாதுதான். ஆங்கில நிபுணர்களுக்கே விளங்கவில்லை. விளங்குவானேன் என்று கேட்கும் தோரணையில்த்தான் Hamlet படத்தில்ப் பாடலான பேச்சையெல்லாம் பேசித் தீர்த்திருக்கிறார்கள்.

கவி என்னும் தத்துவம் வேண்டாத தத்துவம் என்று ஆகிவிட்டது மேல்நாட்டில்.

> "நாவுண்டு நீயுண்டு
> நாமம் தரித்தோத;
> பாவுண்டு நெஞ்சே
> பயமுண்டோ"

என்ற பாடலைத் தமிழர்கள் அவ்வளவாகப் போற்றி வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் 'பா' என்னத்திற்கு என்றுதான் கேட்கிறார்கள். ஆகவே ஆங்கிலேயரைத் தமிழ்ப் பண்டிதர்கள் என்றே சொல்லிவிடலாம்.

இன்று காலை 10.45 ரயிலில் நாகப்புரிக்கும் புறப்படு கிறேன். நல்ல சகாக்களுடன் தான்.

22உ நாகப்புரியிலிருந்து புறப்பட்டு டில்லிக்குப் போகி றேன். ஏப்ரல் முதல்த்தேதி வாக்கில்ச் சென்னை திரும்ப உத்தேசம். மே மாசம் கூட டில்லியில் இருந்துவிடுவேனோ என்று பயப்படுகிறீர்கள். அந்தப் பயம் வேண்டாம்.

உடம்பு மொத்தத்தில் சௌகரியம். பாட்டும் நடனமும் இருந்தால் லேசாகத் திருந்திக்கொள்ளும். அருமை லலிதாவும் சீனுவும் நாகைக்குப் போயிருக்கிறார்கள். எப் போது திரும்புவார்கள். அத்தை அம்மாளுக்கு என் நமஸ்காரம் சொல்ல வேண்டும்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: 'தையல்ப் பின்' வந்தது. ரொம்ப சந்தோஷம்.
**டி. கே. சி.**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

Government House
New Delhi
*31-3-49*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இங்கே நேரமே இல்லை. எத்தனையோ பேரைப் பார்க்க வேண்டும், விருந்துண்ண வேண்டும். இதோடு கட்டிடங் களைப் பார்க்க வேண்டும். கடிதம் எழுத ஏது நேரம்.

தங்கள் அன்பான கடிதம் கிடைத்தது. ரொம்ப சந் தோஷம். கண்காட்சிச்சாலையில் பல உறுப்புகள் வெகு நன்றாய் இருந்தன. தாங்கள் உடனிருந்து பார்க்க

வில்லேயே என்று எண்ணினேன். எல்லாவற்றையும் colour photo பிடித்திருக்கிறார்கள். ஒரு ஆல்பம் போடப் போகிறார்கள். அதன் விலே ரூ. 5/- தான். காட்சி சென்னைக்கும் வரும்.

தங்கள்
**டி. கே சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
**27-5-49**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்

கன்னியாகுமரி அம்மாளைச் சேவித்தவண்ணமாகக் கடிதம் எழுதினீர்கள். மிக்க சந்தோஷம். பரத கண்டத்தின் தென்முனையைக் கண்டு அதிசயித்தார்கள், அழகை அனுப வித்தார்கள் நம்மவர்கள். சும்மா இருக்க முடியுமா. தாங்கள் குறிப்பிட்டிருக்கிறபடி கோயிலேயும் அழகாய் கட்டினார்கள். அந்தப் பண்பாட்டைத் தாங்கள் (புஸ்த கத்தின் மூலமாக அல்ல) நேர் நேராகப் பார்த்து அனுப விக்கிறீர்கள். அருமை மைத்துனரும் உடன் நிற்கிறார்கள். ரொம்ப சந்தோஷம்.

குழந்தைக்கும் அம்மாளுக்கும் என் அன்பு. அத்தை அம்மா ளுக்கு நமஸ்காரம்.

ஆனந்தி — அம்பியின் கலியாணம் வெகு சிறப்பாய் நடந்தது. தம்பதிகளுக்கு, பெற்றோருக்கு, நமக்கு, எல்லோ ருக்குமே ஆனந்தத்தைக் கொடுத்தது கலியாண வைபவம். ராஜாஜியின் ஆசியும் எல்லாருக்கும் கிடைத்தது.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்

**4-6-49**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தங்களுடன் ஒரு நாள் உறவாடக் கிடைத்தது. அத்தை அம்மாள் அம்மாள் இருவருடைய அற்புதமான விருந்தோம்பல் கிடைத்தது. விருந்தோம்பல் உடன் வந்து கொண்டுதான் இருக்கிறது. வடகம் எல்லாம் இருக்கத்தானே செய்கிறது. மிக்க நன்றி.

குழந்தை சீனுவாசன் ஆரோக்கியத்தோடு சிரித்துக் குறு குறு என்று எல்லாரையும் பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும்.

தண்ணீரில் உட்காருதல் குழந்தைக்கு எத்தனையோ விதத்தில் சுகம் கொடுக்கும். இதை எல்லாம் தெரிந்துதானே நிலத்தைவிட்டு ஜலத்தில் போய்ப் பள்ளிகொண்டார் பெருமாள்.

* * *

ஒரு சிறு காரியம். திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை அவர்களின் கடைசி மகன் அரசப்பன் கோயம்புத்தூரில் மோட்டார் எஞ்சினிரிங் படித்து டிப்ளோமா வாங்கிக் கொண்டு ஊர் திரும்பி இருக்கிறான்.

தங்கள் திருநெல்வேலி 'ஒர்க்ஷாப்'பில் வேலை செய்ய இடம் கிடைத்தால் நலமாயிருக்கும் என்று ஆவுடையப்ப பிள்ளை அவர்கள் எண்ணுகிறார்கள். சௌகரியம் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

மற்றவை பின்பு.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
*18-6-49*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

**9.6.49** அன்று அனுப்பிய கடிதமும் ராஜன் அவர்களுக்கு எழுதிய கடிதமும் கிடைத்தன.

ஜெயராஜன் அவர்களும் அருமையாய்க் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மிக்க சந்தோஷம்.

**22.6.49** அன்று புறப்பட்டுத் திருவனந்தபுர எக்ஸ்பிரஸில் இரவு **10** மணிக்கு திருச்சி வந்து சேருகிறேன். கம்பர் ரொம்பக் கொடுத்துவைத்தவர்தான். என்ன ஆசையோடு கம்பராமாயணத்தைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ராஜன்களோடு கலந்துகொண்டு எப்படி ராமாயணத்தை நடத்த வேண்டுமோ அப்படியே நடத்துவோம்.

அத்தை அம்மாள் அம்மாள் குழந்தை எல்லாருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
*3-8-49*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நேற்றைய கடிதம் கிடைத்தது.

தம்பியின் குழந்தைக்குக் காய்ச்சல் வந்து குடும்பத்தையே ரொம்ப ரொம்பக் கஷ்டப்படுத்திவிட்டது. கடவுள்

கிருபையால் சௌகரியமாய் இருக்கிறது. மிக்க சந்தோஷம்.

தாங்களும் ராஜன் அவர்களும் குற்றாலம் வருவதாக எழுதியிருக்கிறீர்கள். மிக்க திருப்தி.

ராஜன் என்றால் அருமை ஜெயராஜன் ஹிமா இருவருடனும் வர வேணும். நான் ஆகஸ்டு 20வ வரை வேறு எங்கும் போவதாக இல்லே. பிறகுதான் போவதுபற்றி யோசிக்க வேண்டும்.

இங்கே சாரல் வெகு அழகாய் இருக்கிறது. தாங்களும் ராஜன்களும் வந்துவிட்டால் இன்னும் ஜோராய்ப் போய் விடும்.

அத்தையம்மாள் அம்மாள் குழந்தை எல்லோரும் சௌக்கியந்தானே. எல்லோருக்கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
**9-8-49**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

சேலத்திலிருந்து எழுதிய கடிதமும் திருச்சியிலிருந்து எழுதிய கடிதமும் வந்தன.

சேலத்தில் நண்பர் சதாசிவம் செட்டியார் அவர்களுக்கு சிகிச்சை காரணமாக சௌக்கியம் அடைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. தாங்கள் திருச்சிக்கு வந்துவிட்டீர்கள் அல்லவா. மிக்க சந்தோஷம்.

மதுரையிலிருந்து திருநெல்வேலி போய் குற்றாலம் வரு கிறீர்கள். மிக்க சந்தோஷம். கன்னியாகுமரிக்கோ தென் ஞப்பிரிக்காவுக்கோ எங்கே போனாலும் குற்றம் இல்லை, எப்படியாவது குற்றாலம் வந்துவிடுவீர்கள். அது போதும்.

தம்பியின் குழந்தைகளுக்கு காய்ச்சல் இல்லை. நார்ம லுக்கு வந்துவிட்டது. ரொம்ப சந்தோஷம். இது காரண மாக வீட்டில் எல்லோருக்குமே மன அமைதி நார்மலுக்கு வந்திருக்கும். அதுதானே வேண்டும். அப்பா அம்மா மற்றும் எல்லோருக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டும்.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
*10-9-49*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

8.9.49 அன்றே சென்னையிலிருந்து சீவில்லிபுத்தூருக்கு வந்துவிட்டேன். அழகான முறையில் மகராஜன் கலி யாணம் நடந்தது. நண்பர்களும் குறிப்பிட்ட உறவினர் களாகவும் இருந்து கலியாணத்தைச் சிறப்பித்தார்கள். முகூர்த்தம் ஆனதும் வாழ்த்துரையாக நான் பேசினேன். பேசுவது எளிதாக இருந்தது. மகராஜன் தமக்கையார் இருவரும் அவர்களோடு சேர்ந்த மணப்பெண்ணும், நானும்தான் ஒரு குடும்பமாக கூட்டுறவு செய்துகொண் டோம் என்ற உண்மையை எளிதில் சொல்ல முடிந்தது.

மகராஜன் பேச்சு வெகு ரஸமாக இருந்தது. ரஸமாக இருந்தது என்று சொன்னல் போதாது. புது உண்மை ஒன்றை அனுபவித்து முரசறைந்தமாதிரி இருந்தது.

உலகத்தாருக்கே எடுத்துச் சொன்ன மாதிரி இருந்தது. கலியாணம் செய்ய உடன்பட்டது எதற்காக என்று மிக்க உணர்ச்சியோடும் உண்மையான பரிவோடும் பேசினார்கள். தனியான பேச்சுத்தான் அது. நேற்று இரவே குற்றாலம் வந்துவிட்டேன். காலையில்த்தானே கலியாணம்.

* * *

குற்றாலம் வெகு சுகமாகவே இருக்கிறது. மத்தியில்ப் பண்ணிய அக்கிரமங்களுக்கு பர்த்தியாக சாரல் இப்போது சுகமாய்த் தாராளமாய்ப் பெய்துகொண்டிருக்கிறது.

வீட்டில் அம்மாள் குழந்தை இருவரும் சௌக்கியந்தானே.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: தம்பியின் குழந்தைக்கு உடம்பு அசௌக்கியமாக இருந்ததே. இப்போது சௌகரியந்தானே. டிரங்கு போனில் சொல்லியிருப்பார்களே.

**டி. கே. சி**

* * *

ராஜன்கள் சௌக்கியந்தானே. அவர்களுடைய அன்பையும் ஆனந்த வாழ்க்கையையும் சதா நினைத்து நானும் ஆனந்தம் அடைந்து வருகிறேன். உடம்பும் சரிப்பட்டும் வருகிறது.

**டி. கே. சி.**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்

***13-9-49***

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நேற்றையக் கடிதம் கிடைத்தது.

புதுக் கட்டிடத்துக்கு ஆபீஸ் போய்விட்டது. குடித்தன மும் ஒரு மாசத்தில்ப் போய்விடும். மிக்க திருப்தி.

நல்ல விளம்பரத்துக்கான இடம். ஆரோக்கியமான இடமும் கூட.

எல்லாம் வல்ல இறைவன் இரண்டு துறையிலும் திரு அருள் பாலிப்பாளுக.

* * *

கல்கியும் சதாசிவமும் ராஜாஜியின் ஆசியும் சேர்ந்து விட்டால் பாரதிவிழா சிறப்பாய் நடந்தது என்று சொல்லவா வேண்டும். 5000, 6000 பேர் கூடிவிட்டார்கள். பாரதி என்ற பெயரைச் சொன்னுலே போதும் அவர் களுக்கு. பெயரையே உத்ஸாகமாக வரவேற்ருர்கள். பொதுவாக எல்லாரும், வந்திருந்த கூட்டத்துக்குப் பெய ரையே வழங்கினுர்கள். பாடல் என்னத்துக்கு. நெடு கிலும் பாரதியார் பாடல் அரசியல் கோஷத்துக்குத் தானே உதவிற்று. சுதந்திரமும் அந்த கோஷத்தால்க் கிடைத்துவிட்டது. அனேகமாய்ப் பாட இனி வேண்டிய தில்லேதான் என்று எண்ண ஆரம்பித்துவிட்டார்கள்.

ராஜாஜி, பாடல்தான் முக்கியம். மற்றதெல்லாம் இரண் டாம் பக்ஷம் என்று எண்ணுகிருர்கள். வாழ்த்துச் செய்தி யிலும் கண்டிருக்கிருர்கள். ஆனுல் செய்தியின் பொருள் விளங்கவில்லே பலருக்கும்.

கவிஞன் காரியமே அப்படித்தான். மேல்நாட்டிலும் ஷேக்ஸ்பீயர், கீட்ஸ் இவர்கள் காரியம் ஆபத்தாய்த்தான் இருந்தது. ஏதோ அதிர்ஷ்ட தசை வந்தது ஆங்கில பாஷைக்கு. இருவரையும் போற்ற ஆரம்பித்தார்கள் ஆங்கிலேயர்.

எனக்கு உடம்பு கொஞ்சம் பலஹீனம். பழைய இன்புளூ வென்ஸாவின் அதிகாரம் இன்னும் கொஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. எட்டயபுரத்தில் என்னைப் பார்த்து விட்டு கல்கியும் சதாசிவமும் 144 செக்ஷன்படி ஆர்டர் போட்டுவிட்டார்கள். திருவனந்தபுரத்துக்குப் போகக் கூடாது. திருச்சிராப்பள்ளிக்கு வரக்கூடாது என்பதாக.

ஆகையால் மணி வீட்டு கிரகப்பிரவேசத்துக்கு என்னால் வர இயலவில்லை. மணிக்கு ஏமாற்றந்தான். மணியின் ஜாதகம் தனி. சினேகிதர்களைக் கண்டவுடன் கூத்தாடி விடுவார் — மேகத்தைக் கண்ட மயில்தான். அப்படியே தான் அவருடைய அருமை மனைவியாரும். ஆனால் நான் என்ன செய்ய. கொடுத்துவைக்கவில்லை எனக்கு. அவ் வளவுதான்.

இது ஒருபுறம்.

ராஜன்களுக்கு எவ்வளவு ஏமாற்றமாய் இருக்கும். அவர் களுடன் உட்கார்ந்திருந்து எம். எஸ். ஸின் தெய்வ கானத் தைக் கேட்க முடியவில்லையே. பரவசமாய்க்கொண்டே இருப்பார்கள். அதைப் பார்த்தால் கண்ணுக்கு விருந் தல்லவா. அவர்களைக் கொண்டு என்னை மன்னிக்கச் சொல்லுங்கள். அப்படியே தாங்கள் பார்த்தசாரதி — வைதேகி எல்லோரும் மன்னித்துவிட வேண்டியதுதான்.

தம்பி குழந்தைக்கு உடம்பு சௌகரியம்பட்டிருக்கிறது! மிக்க திருப்தி. அத்தை அம்மாள் மதுரையில்த்தான்.

அம்மாள் குழந்தை தாங்கள் மூவரும் சௌக்கியந்தானே•

மற்றவை பின்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
16-1-50

அன்புள்ள நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

திருவையாற்றுக்குப் போய்த் திரும்பியிருப்பீர்கள். ராஜன்களது உறவாடுதல் அங்கே இருந்தது. அதனால் ஏமாற்றம் அவ்வளவாக இருந்திராது. சங்கீதம் என்றும் ராகங்கள் என்றும் இந்த 1950 வருஷம் இருக்கின்றனவே. பெரிய விஷயம்.

350 வருஷத்துக்கு முன் வந்தான் வெள்ளைக்காரன். அவன் நம்முடைய சங்கீதத்தையும் ராகங்களையும் கற்க ஆரம்பித்திருந்தானானால் பெரும் ஆபத்தாய் முடிந்திருக்கும். முதலில் ராகங்களுக்கு இங்கிலீஸ் ஜியாகிரபியிலிருந்தும் ஹிஸ்டரியிலிருந்தும் பேர்கள் கொடுத்திருப்பான். பிறகு அவைகள் எல்லாம் இங்கிலாந்திலிருந்தே வந்தவைகள் என்று சொல்லியிருப்பான். அதன் பிறகு இங்கிலீஷ் மயமாய் ஆக்கியிருப்பான். எல்லாம் குட்டிச் சுவராய்ப் போயிருக்கும்.

காப்பாற்றினான். நம்முடைய சங்கீதத்தைக் கேவலம் என்று சொல்லிக் கற்காமல் விட்டுவிட்டான்.

இப்படியெல்லாம் ஆபத்து இருக்க, அவைகளுக்கு உள்ளாகாமல்த் தப்பிப் பிழைத்து 1950 வருஷத்திய நம்முடைய கைக்கு ராகங்களும் கலைகளும் வந்திருக்கின்றனவே. எத்தனை பெரிய விஷயம் அது.

ஆனாலும் அபூர்வ ராகங்கள் என்றும் ஹிந்துஸ்தானி ராகங்கள் என்றும் ஊடே வந்து நம்முடைய சங்கீதத்தின் தெளிவைக் கெடுக்கத்தான் செய்கின்றன. ஹிந்துஸ்தானி சங்கீதம் என்று சுத்தமாகப் பாடட்டும், குற்றம் இல்லை. ஆனால் அவைகளை நம்முடைய ராகங்களோடும் பக்திரஸ

மான பாடல்களோடும் கலக்கிறதென்ருல் சங்கடமான காரியந்தான். கர்ஞடக சங்கீதத்தின் உயிரை (soul) அறிந்துகொள்ளவில்லே பாகவதர்வாள் என்றுதானே சொல்ல வேண்டும்.

ரஸம், சாம்பார், வற்றல்க்குழம்பு, பாயஸம் இவைகளில் இங்கிலீஷ் செண்டுகளேச் சேர்த்தால் எப்படி இருக்கும்!

திருவையாற்றில் சங்கீதமும் சாம்பாரும் சரியாகவே இருந்திருக்கும் என்று நம்புகிறேன்.

அனுப்பிய 'ஸ்டேப்பிள் பின்ஸ்' வந்தன. ரொம்ப சந்தோஷம். சென்னேயில் விசாரித்ததில்க் கிடைக்கவில்லே. குண்டூசிகளே உபயோகப்படுத்தலாம். கஷ்டமில்லே. ஆனல் நண்பர்களுக்கு முக்கியமாகத் தாய்மார்களுக்கு சிரமம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. அதனல்தான் கோதானம் கொடுத்தவர்களிடமே வைக்கோல்த் தானமும் கேட்க நேர்ந்திருக்கிறது.

ராஜன்கள் திரும்பித் தலேநகருக்கு வந்திருப்பார்கள்.

பதினறு வருஷம் நாமும் கிழக்கு பங்காளக் கால்வாய்களிலும் காயல்களிலுமே முக்குளித்துக்கொண்டிருந்தால் நமக்கும் தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாட்டு சங்கீதங்களும் தேவர்களாகவும் தேவ கானங்களாகவும் தோன்றும். அப்படி இராததனல் அவர்களேப்போல் அனுபவிக்க முடியவில்லேதான். பாக்கியசாலிகள் அவர்கள். வீட்டில் அத்தை அம்மாள் அம்மாள் குழந்தை எல்லோரும் சௌக்கியம் தானே. புதுவீட்டில்ப் பொங்கல் விழா ஜோராய் நடந்திருக்கும். என்னே ஆஜர் மார்க்கு என்று வைத்துக் கொள்ளுங்கள். மானஸமாக ஆஜராய் இருந்தேன்.

மதுரையில் அம்மா அப்பா தம்பி மைத்துனர் எல்லாரும் சௌக்கியந்தானே.

பாஸ்கரன் தஞ்சைக்குப் போகிறதாக எழுதியிருக்கிறார்கள். பிரமோஷன் தான். மிக்க சந்தோஷம். ஆனால் திருச்சிக்கு நஷ்டம்.

1950 வருஷத்தில், முக்கியமான காரியம் என்னவென்றால் தமிழ்ப் 'பொங்கல் வாழ்த்துகள்' வந்து குவிகின்றன.

நல்ல சகுணந்தான். Latin, Greek, இங்கிலீஷ் முதலான பாஷைகளில் வாழ்த்து வரவில்லை.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
23-1-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கரூரிலிருந்து 19உ எழுதிய ரஸமான கடிதம் கிடைத்தது. மிக்க சந்தோஷம்.

நாளை 24உ திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்ஸில் புறப்பட்டு நேரே சென்னை போகிறேன். திருச்சியில் இறங்கி உங்கள் எல்லோருடனும் உறவாடிப் போக வசதி இல்லை. அன்பர் ராஜன்களுக்கு மிக்க ஏமாற்றந்தான். சென்னையிலிருந்து திரும்பும்போது விருப்பம்போல் இறங்கி உறவாடித் திரும்புகிறேன்.

எனக்கு ஒரு திருப்தி: திருவையாற்றில் அம்மாவின் சித்தப்பா வீட்டில் சௌக்கியமாக இருந்தீர்கள். எல்லா வசதியும் இருந்தது. எத்தனை நாள் வேண்டுமானாலும் தங்கலாம்.

சினேகிதர்களைச் சந்திக்கவும் வசதி இருந்தது. வேறென்ன வேண்டும்.

என்னுடைய கடிதத்தில் எழுதியிருந்த சங்கீதக் குறிப்புகளைப்பற்றித் தாங்கள் அபாரமாய்ப் புகழ்ந்திருக்கிறீர்கள். அப்படி என்னதான் எழுதியிருந்தேனோ ஞாபகம் இல்லை. ஞாபகம் இல்லாவிட்டால் என்ன. உண்மையைத் தான் எழுதியிருப்பேன்.

நயமுடைய சங்கீதமோ ஒரு சமுத்திரம். ஒவ்வொரு உணர்ச்சிக்கும் ஒரு தனி உருவத்தைக் கொடுக்கக்கூடிய சங்கீதம் நம்முடைய சங்கீதம். சகல பாவங்களையும் ஒரு ராகம் காட்டிவிடும். எளிதாகவே காட்டிவிடும்.

நம்முடைய சங்கீதத்தின் சக்தி இப்படியெல்லாம் இருந்தும் பாடகர்கள் அதைக் கவனித்த பாடாகவே இல்லை.

மணிக்கணக்காகவும் நாட்கணக்காகவுமே பாடுவார்கள். எல்லாம் வறண்ட கணக்காகவே முடியும். கொஞ்சம் கூட மனசைக் கவரும்படியான பாவ சங்கீதம் இராது. மிகவும் வருந்தத்தக்க காரியம் இது.

இந்த லக்ஷ்யம் காரணமாகவே (லக்ஷ்யம் இன்மை காரணமாகவே) ஒரு சங்கீதப் பள்ளிக்கூடத்திலும் சங்கீதம் வந்ததாக இல்லை! மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆசிரியர்களும் சிரமப்படுகிறார்கள். சிரமப்பட்டு என்ன செய்ய. லக்ஷ்யம் இல்லாமல்க் கலை ஏது. ஆனந்தமே லக்ஷ்யமாக இருக்க வேண்டும். அந்த லக்ஷ்யத்தை ஒதுக்கிவிட்டால் 'வித்வத்' 'வித்வத்' என்று சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் சங்கீதம் இல்லை. கேட்பதற்கு மனுஷாள் கிடையாது.

வருஷக்கணக்காக பாகவதர்களிடம் கற்று வருகிறவர்கள் கையை உயர்த்தி உயர்த்தித் தாளம் போட்டுக்கொண்டிருப்பார்கள். தாளந்தான் மிச்சம். சங்கீத அனுபவம் பூஜ்யம்.

சங்கீதம் இருக்கட்டும் அங்கே.

கவியரங்குக்கு வந்தார்களே ராஜன்கள். கவியில் எவ்வளவு ஆர்வம் பாருங்கள். ஆர்வம் என்ருல் நேர் ஆனந்த அனுபவத்திலிருந்து உண்டானது. கவியை ஆதரிக்க வந்தார்கள் — பொழுது போகாமல் அல்ல.

பாஸ்கரன் திருச்சியைத் தமிழ்மயமாய் ஆக்கிவிட்டார்கள். பண்டிதர்களைக்கூடத் தமிழை மதிக்கச் செய்துவிட்டார்கள். பெரிய காரியம்.

தஞ்சைக்குத்தானே போகிருர்கள். கிட்டத்தான். அடிக்கடி வந்து உங்களுடன் கலந்துகொள்ளுவார்கள். திருச்சியைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் தயவுசெய்து.

புதிய வீடு ரொம்பவும் சௌகரியமாக இருக்கும். அம்மாள் அத்தை அம்மாள் குழந்தைகள் எல்லோருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்ருலம்
17-3-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் பலராமுச்கு அனுப்பிய அழகான கடிதத்தைப் பார்த்துக்கொண்டேன். மிக்க சந்தோஷம். எதற்காக? படம் எடுக்க ஏற்பாடு செய்தீர்களே அதற்காகத்தான்.

இப்போது எல்லோரும் பிரிந்துவிட்டோம் என்கிற ஞாபகம் அழுத்தமாய் வருகிறது. படம் எடுத்ததின் அவசியம் நன்ருய்ப் புலனுகிறது.

'நானும் சோமுவுந்தான் பாக்கி' என்று எவ்வளவு உருக்க மாய்ப் பேசுகிறீர்கள். தங்களோடும் சோமுவோடும் மனமார அனுதாபப்படுகிறேன். திருவள்ளுவர் இத் தகைய சங்கடங்களில் (பிரிவில்) அகப்பட்டிருக்கிறுர். அல்லாத பக்ஷம்

"பெரிதினிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்
பீழை தருவ(து) ஒன்(று) இல்"

என்று ஆங்காரத்தோடும் சோகத்தோடும் சொல்ல வரவா செய்யும்.

* * *

நன்றுய்ச் சொல்லிவிட்டீர்கள். திருச்சியில் இனிக் கலகலப் பில்லை, தமிழ் இல்லை என்பதாக. கிழக்கு வங்காளத்தி லிருந்து திருச்சிக்குத் தனிப்பட்ட முறையில்க் கிடைத்த மாதிரி அல்லவா இருந்தது ராஜன்கள் இருந்தது. ராஜன்கள் நால்வருக்கும் நல்வாழ்வு நிரந்தரமாக இருக்க இறைவன் அருள்புரிவாஞக.

* * *

தங்கள் வீட்டில் அழகான விருந்து நடந்திருக்கும். ராஜன் களுக்கு மிக்க திருப்தியாய் இருக்கும். நான் இல்லா தல்லவா போனேன்.

அன்று தங்கள் வீட்டில் மூன்று தாய்மாருக்குக் கம்பர் வாசித்தேன். அவர்கள் அனுபவித்தது தனி. எனக்குப் பேரானந்தமாய் இருந்தது. நான்தான் சொல்லுகிற துண்டே, கம்பர் தாய்மாரைக் கருதியேதான் எழுதினுர் என்பதாக. அது உபசார வார்த்தை அல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். குழந்தைகளுக்கும் அம்மாளுக் கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றுலம்
26-4-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

4வ தாங்கள் கடிதம் எழுதினீர்கள். 26வ பதில் எழுது கிறேன். இந்த சௌகரியத்தை எண்ண எண்ண அவமான மாக இருக்கிறது. பதிலே எழுதாமல் இருந்துவிடுவோமோ என்று கூடத் தோன்றியது. ஆனாலும் லஜ்ஜையை உதிர்த்துவிட்டு எழுதுவோமே என்று துணிந்து எழுது கிறேன்.

அந்தக் கம்பர் விழாவுக்கு வந்தீர்களே, அதே பெரிய விஷயம். ஏதோ சில நேரம் அளவளாவ முடிந்தது.

கம்பர் விழாவுக்கும் பதினாயிரம் பேர் வந்திருந்தார்கள். ஒரே ஈடுபாட்டில் வந்திருந்தார்கள். ராஜாஜி வந்திருந் தார்கள்; பேசினார்கள். பெரிய போதனையாய் இருந்தது அது. கல்கி 10,000 பேரும் குலுங்கும்படி அழகாய்ப் பேசினார்கள். அத்தனை விமரிசையையும் தாங்கள் அனு பவித்துவிட்டீர்கள். (வந்திருந்த பண்டிதர்கள் அனு பவிக்கவில்லை. என்னடா, கம்பருக்கு இத்தனை கௌர வமா என்று கோபப்பட்டார்கள்.) தாங்கள் விழாவுகக்கு வரவில்லை என்றால் விழாவுக்குக் குறைதானே.

ரயிலில்ப் போகும்போதும் ராஜாஜி பேசுவதை எல்லாம் கேட்டு அனுபவித்தீர்கள். புதுக்கோட்டைககும் திருச் சிராப்பள்ளிக்கும் தூரம் ஆயிரம் மைலாக இருக்கக் கூடாதா என்று அழகாய்ச் சொல்லுகிறீர்கள். ஜெயா அன்னையின் கடிதம் எவ்வளவு அழகாய் இருக்கிறது. கடிதத்தைப்பற்றி அன்னைக்கும் எழுதினேன். திரும்பத் திரும்ப படிப்பதற்காக என்னிடமே வைத்திருக்கிறேன்

சாவகாசமாக பட்டாபிக்கு அனுப்புகிறேன் என்று எழுதினேன்.

இப்போது தங்களுக்குத் திருப்பி அனுப்புகிறேன். கடிதத்தை எனக்கு அனுப்பினீர்களே! மிக்க சந்தோஷம்.

கண்டதும் காதல் என்னும் விஷயமாக எழுதிய கட்டுரையைப் பார்த்தும் பாராட்டுகிறார்கள். மிக்க சந்தோஷம். விஷயத்திலுள்ள உண்மையை யார் கவனிக்கிறார்கள். ஏதோ அப்படி இப்படி என்று படாடோபமாய்ப் பேச வேண்டியது. விமர்சனப் புலி என்று பேர் வாங்கிவிடுகிறார்கள் உண்மை உணர்ச்சியோ, ஆனந்தமோ அவர்களுக்கு இல்லைதான். நம்மவர்கள் ஜாதகம் அப்படி. அவர்களைக் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது.

* * *

கும்பகர்ணனது பண்பு தனி. அதை அற்புதமாய் விளக்குகிறார் கம்பர். அதை அனுபவிக்கும் பொறுப்பும் தங்களுக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது.

செருகு கவிகளோடு கும்பகர்ணனைப் பார்த்தால் சோம்பேறியாகவும், குடிகாரனாகவும், வெறுக்கக்கூடிய பெரும் பூதாகாரமாகவும்தான் படும். உயர்ந்த லக்ஷ்யம் வீரம் அன்பு எல்லாம் அபரிதமாக உடையவன் என்பது தோன்றாது அப்படித் தோன்றலாமா; அதனாலேயே செருகல்கள் எல்லாம் வேண்டும், அவ்வளவுமே வேண்டும் என்று புலவர் சிகாமணிகள் எல்லாரும் ஒன்று சேர்ந்து சொல்லுகிறார்கள் அதிகாரத்தோடு. கம்பர் பதிப்பும் அந்த விதமாக வெளிவரப் போகிறதாம். நல்லதுதான்.

இன்னொரு கட்டுரையும் தங்கள் உய்த்துணரும் பார்வைக்கு இத்துடன்.

அன்னை லலிதாவுக்கும் குழந்தைக்கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்றாலம்
**7-5-50**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்கள் 20.5.50 அன்று எழுதிய அன்பான கடிதம் கிடைத்தது. பாஸ்கரன் கலெக்டர் ஆபீஸ் சிப்பந்திகளுடன் கங்கை கொண்ட சோழேஸ்வரம் சென்று நீங்கள் நன்றாய் பொழுது போக்கியிருக்கிறீர்கள். அந்தவிதமாக 'week end' போவதைக் கட்டாயமாக வைத்தால்க்கூட நல்லதுதான்.

அப்படி முகாம் போவது பைத்தியத்துக்கே மருந்து என்று வைத்திய நிபுணர்கள் சொல்லுவார்கள். அப்படியானால் சாதாரண ஆபீஸ் சிப்பந்திகளுக்கு ஏற்படக்கூடிய சோர்வை, அதிருப்தியை, முணுமுணுப்பைப் போக்கும் அந்த முகாம் என்றால் அது மிகையல்லதானே.

தாங்கள் எந்தக் கூட்டத்தில்ச் சேர்ந்தாலும் உடனே அதன் அதி தேவதையாக ஆகிவிடுகிறீர்கள். கங்கை கொண்ட சோழேஸ்வர முகாம் வெற்றிகரமாய் முடிந்தது. பேஷ்.

தாங்கள் குறிப்பிட்ட திருநெல்வேலி ஜில்லா ஜட்ஜ் நாலு நாளைக்கு முன் இங்கே வந்திருந்தார்கள். தமிழைக் கற்றுவிட வேண்டும் என்று அபார ஆசை வெங்கட்டராமன் அவர்களுக்கு. இரண்டு நாள் எங்கள் கூட்டத்

தோடு கலந்துகொண்டார்கள். தமிழில் உள்ள அற்புதங்களைக் கண்டு ஒரே வியப்புத்தான் அவர்களுக்கு. சௌகரியப்பட்ட வேளை இனி அடிக்கடி சந்திக்க வேண்டியதுதான். தமிழுக்கு ஒரு உண்மையான அன்பர் கிடைத்திருக்கிறார்கள் அல்லவா.

* * *

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களும் இரண்டு நாள் உடன் தங்கினார்கள். தமிழ்ப் பாடல்களை அப்படியே பருகினார்கள். கேட்ட பாடல்கள் சிலவற்றை எழுதிக்கொண்டும் போயிருக்கிறார்கள்.

நான் சொல்லுவதை எல்லாம் எழுத ஒரு ஷார்ட்ஹாண்டு எழுத்தாளர் வேண்டும் என்று அபாரமாய்ப் பாராட்டிச் சொன்னார்கள்.

தாங்களும் உடனிருந்தால் எல்லோருக்கும் மிக்க உத்ஸாகத்தைக் கொடுத்திருக்கும்.

சாரல் நன்றாய் இருக்கிறது.

தாங்கள் எப்போது வரப்போகிறீர்கள்?

குழந்தைகளுக்கும் அம்மாளுக்கும் என் அன்பு.

தங்கள்

**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்

***16-8-50***

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

தாங்களும் மைத்துனரும் புறப்பட்டுப் போனபிறகு குற்றாலம் குற்றாலமாக இல்லை. நல்ல குழாமாக உறவாட

நண்பர் இருந்துவிட்டால் 'சாகாராவும்' சுகமாய் இருக்கும்: 'எவெரெஸ்டு சிகரமும்' சுகமாய் இருக்கும். அப்படியானல்க் குற்ருலத்தைப்பற்றி கேட்கவா வேண்டும். குற்ருலம் திருக்குற்ருலம்தான். நேற்று மத்தியானம் சோமு வந்தார் — ஏதோ தாங்கள் காலி பண்ணி விட்டீர்களா என்பதை அறிந்துகொண்டு வந்த மாதிரி வந்தார்.

சாயங்காலமே புறப்பட்டுப் போய்விட்டார் — போஸ்டாபிஸுக்குப் போய்க் கடிதத்தைப் போஸ்டு பண்ணிவிட்டுத் திரும்பிய மாதிரிதான். இந்த நெருக்கடிக்குள் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாட்டு நாலு, திருமூலர் பாட்டு நாலு என்று பாடிப் பார்த்துக்கொண்டோம். சோமுவும் நண்பர் சிங்கும் ரொம்ப ரொம்ப அனுபவித்து விட்டார்கள்.

நம்முடைய தமிழ்ப் பிரசாரம் இப்படித்தான். தாங்கள் ராமசாமி, சோமு எல்லோரும் ரயில் வண்டியில் ஒரு காலை வைத்துக்கொண்டு தமிழ்ப் பாடல்களைக் கேட்கிறீர்கள்.

அவ்வளவாவது கொடுத்து வைத்திருக்கிறதே தமிழுக்கு. மிக்க சந்தோஷம்.

வீட்டில் அம்மாளும் சீனிவாசனும் சௌக்கியம் தானே. அவர்களுக்கு என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

குறிப்பு: செங்கோட்டை முனிஸிபு வரதராஜ ஐயங்கார் அவர்களையோ தாங்கள் நேரில் பார்த்துக்கொண்டீர்கள். அவர்களுடைய உறவினர்களையும் தாங்கள் நன்ருய் அறிவீர்கள். அவர்களுடைய குமாரத்தியைப்பற்றிப் பத்திரிகையில் வந்த பாராட்டு நகல் இத்துடன். கலியாணப் பேச்சு சம்பந்தமாகத் தாங்கள் அந்தப் பாராட்டுப் பத்திரத்தை எப்படி உபயோகிக்க வேண்டுமோ அப்படி உபயோகிக்கலாம். உபயோகித்து மாப்

பிள்ளை வீட்டுக்காரரோடு பேசி இணங்கச் செய்யலாம். வரதராஜ ஐயங்கார் அவர்களும் குடும்பமும் நமக்கு ரொம்பவும் வேண்டியவர்கள். கல்யாணம் நம்மால் ஆனால் நல்லதுதானே. தங்களுக்கு நல்ல புகழ்.

டி. கே. சி.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
21-8-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

19௳ அனுப்பிய அன்பான கடிதம் கிடைத்தது.

செங்கோட்டை முனிஸிபு வரதராஜ ஐயங்கார் அவர் களுக்குத் தாங்கள் கொடுத்த விவரங்களைத் தெரியப் படுத்திவிட்டேன். நல்ல சகுனமாகத் தங்கள் கடிதம் வந்தது. எல்லாம் மங்களகரமாக முடியும் என்று எதிர் பார்க்கலாம். மிக்க திருப்தி.

* * *

மதுரை இம்பீரியல் பாங்க் ஏஜெண்டு ரா.மசுப்பன் வீட்டில் விருந்துண்டதும் அவர்களிடம் Mrs லக்ஷ்மி நாராயணன் கம்பர் பாடல் சம்பந்தமாகப் பேசியதும் எல்லாம் மிக்க சந்தோஷமான செய்தி. ஆம். கம்பருக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. தாய்மார் கையில் ஒப் படைத்துவிட்டால் எல்லாம் பந்தோபஸ்தாய் இருந்து விடும். சங்கீதத்தைப் பாகவதர்கள் கைக்குப் போக விடாமல்த் தாய்மார்கள் கையில் ஒப்படைத்திருந்தால் இந்தக் கேடு வந்திருக்காது சங்கீதத்துக்கு. சங்கீதத்தின் ஜாதகம் அப்படி! இருக்கட்டும்.

தாங்களும் மைத்துனரும் இங்கிருக்கும்போது குற்ருலம் கலகலப்பாய் இருந்தது. இப்போது வெறிச்சோடி இருக்கிறது.

ஏதோ கொஞ்ச நாளாவது இருந்து போனீர்களே. மிக்க நன்றி.

24வ. திருவனந்தபுர எக்ஸ்பிரஸில்ப் புறப்பட்டு நேரே சென்னை போகிறேன். திருச்சி ஜங்ஷனில் தங்களையும் சோமுவையும் சந்திக்கலாம் அல்லவா.

25வ. சென்னையில் ஜோலி இருக்கிறது. நாலைந்து நாள் சென்னையிலிருந்துவிட்டுக் குற்ருலம் திரும்ப வேணும்.

அம்மாளுக்கும் குழந்தைகளுக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம்
C/o V.N. ராஜன் அவர்கள்
கோவை
5-9-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

இரண்டு நாளும்—நேற்றும் முந்தாநாளுமாக எம். எஸ். தேவகானம் காதை நிறைத்துப் பிறகு உள்ளத்தையும் நிறைத்து ஒலித்துக்கொண்டிருக்கிறது. ராஜன்கள் நால்வரும் நிறைய நிறையக் கேட்டு இசையில் மிதந்துகொண்டிருக்கிருர்கள்.

மிஸ்டர் ராஜன் நேற்று இரவு சென்னைக்குப் புறப்பட்டுப் போயிருக்கிருர்கள். நாளைக் காலை திரும்புகிருர்கள்.

நான் இன்று மாலே சென்னேக்குப் புறப்படுகிறேன். 8உ சென்னேயிலிருந்து குற்ருலத்துக்குப் புறப்படுகிறேன்.

குழந்தை அம்மாள் இருவருக்கும் என் அன்பு.

ராஜன்களோடு பேசுகையில் பட்டாபிச் சருக்கும் அடிக்கடி வரும்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்**

திருக்குற்ருலம்
4-10-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

6உ திருவனந்தபுர எக்ஸ்பிரஸில்த் திருச்சி வந்து சேருகிறேன். ரிட்டையரிங் ரூமில் இடம் ரிஸர்வு செய்ய வேண்டும். 7உ மாலே ரேடியோ நிலேயத்து மீட்டிங்கை முடித்துக்கொண்டு இரவே கோயம்புத்தூருக்குப் புறப்பட வேண்டும். அந்தக் கோயம்புத்தூர் ரயிலில் ஒரு பெர்த் ரிஸர்வு செய்ய வேண்டும். தாங்களும் உடன் வருவதாய் இருந்தால் இரண்டு பெர்த் (இரண்டாவது கிளாஸ்) ரிஸர்வு செய்ய வேண்டும். இந்தக் காரியத்தை உடனே போனில்ப் பேசி உறுதி பண்ணிவிட வேண்டும்.

கோவையில் ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுடனும் அவர்களுடைய சகாக்களுடனும் தமிழ்ப் பாடல்களே வைத்துக்கொண்டு பொழுதுபோக்க வேண்டுமாம்.

நல்ல ஜோலிதானே.

15உ வரை கோவை. பிறகு சென்னே.

ராஜன்களோ கோவையில்த்தான் இருப்பார்கள்.

டாக்டர் ராகவன் அவர்களுக்கு நான் திருச்சி வருகிற விபரத்தைச் சொல்ல வேணும்.

பெர்த் ரிஸர்வேஷன் சம்பந்தமாக சோமுவைக் கலந்து கொள்ளுங்கள். மற்றவை நேரில்.

குழந்தைகளுக்கும் அம்மாளுக்கும் என் அன்பு.

தங்கள்

டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

முகாம்

C/o R.K. சண்முகம் செட்டியார்

கோயம்புத்தூர்

12-10-50

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

மதுரையிலிருந்து 10௳ எழுதிய கடிதம் கிடைத்தது. திருச்சியில் தாங்கள் இல்லாததால் திருச்சி திருச்சியாக இல்லை.

சோமுவும் பிரமநாயகம் பிள்ளை அவர்களும் உடன் இருந்து சகல சௌகரியங்களையும் பார்த்துக்கொண்டார்கள். பொழுது போய்விட்டதுதான். பாடல்களையும் பண்டிதர்களையும் கொண்டு நேரம் போயிற்று. மீட்டிங் முடிந்ததும் புறப்பட்டுவிட்டேன். இன்று காலை இங்கு வந்து சேர்ந்தேன். பொழுது நன்றாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டையும் பாடல்களையும் சண்முகம் செட்டியார் அவர்களும் பழனிசாமி நாயுடு அவர்களும் முழுக்க முழுக்க அனுபவிக்கிறார்கள்.

சண்முகம் செட்டியார் அவர்களது மாளிகை கலைக் கோயில்தான். இந்த மாதிரி தமிழ்நாட்டில் வேறு எந்த வீடும் இல்லை. வெகு அபூர்வமான கலைச் செல்வங்களை

இந்தியாவிலிருந்து மாத்திரம் அல்ல, ஐரோப்பாவி லிருந்தும் கொண்டுவந்து அழகாய் வைத்திருக்கிறார்கள். லைப்ரரி ஒன்று. சகல கலைகளும் அடங்கியுள்ள லைப்ரரி.

இவைகளோடு பொழுது எனக்கு லகுவாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

மாலையில் கம்பராமாயணம். நேற்று நடந்தது வில் முறித்த கட்டம். எல்லோரும் அனுபவித்தார்கள். ஜெயா ராஜன் ஒன்று சொன்னார்கள்: "பட்டாபியும் சோமுவும் இல்லையே! இருந்திருந்தால் என்ன என்ன மெய்ப்பாடுகள் எல்லாமோ உண்டாகியிருக்கும். அவைகளே ஒரு விளக் கம் அல்லவா கம்பருக்கு" என்று ஆற்றாமைப்பட்டார்கள். நானும் ஆமோதித்தேன்.

* * *

தங்கள் உள்ளன்பு ராஜன்கள்பால்ப் பொழிந்து ஓடு கிறது — கடிதத்தில்த்தான். அதை இன்னும் அவர்களிடம் தெரிவிக்கவில்லை. சமயம் வாய்க்கவில்லை.

* * *

15உ புறப்பட்டுச் சென்னை போகிறேன். அங்கிருந்து 23உ புறப்பட்டுத் திருநெல்வேலி வருகிறேன் — 24உ மத்தியானம்.

24உ அன்று பிற்பகலே நாகர்கோயிலுக்குப் புறப்பட வேண்டும். ஏனென்றால் 25உ காலையிலேயே கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை அவர்களது பாராட்டு ஆரம் பிக்கிறது.

தங்கள் கம்பெனிக் கார் கிடைத்தால் சௌக்கியமாய் இருக்கும். தாங்களும் உடன் வருகிறது என்று ஏற்பட்டு விட்டால்ச் சொல்லவா வேண்டும்.

சுப்பு கிருஷ்ணனது அன்பான கடிதம் கிடைத்தது அவர் களுக்கு என்னுடைய அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
**24-9-51**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

அன்பான கடிதம் கிடைத்தது. ஆம். ஐந்து மாசமாக எனக்கு உடம்பு சௌகரியம் இல்லைதான். வீட்டுக்குள்த் தான் நடமாட்டம். உடம்பு மெள்ளத் தேறி வருகிறது.

தம்பி சுப்பு கிருஷ்ணனை அடிக்கடி பார்த்துக்கொள்ளு கிறேன். அன்புடன் என்னைப் பார்க்க வருகிறார்கள். அன்புக்கு 35 மைல் ஒரு தூரமா.

* * *

குழந்தைக்கு உடம்பு இப்போது முற்றிலும் சௌகரியம் தானே. Whopping cough வந்து குழந்தைகளை ரொம் பவும் கஷ்டப்படுத்துகிறது. ஆனால் குறிப்பிட்ட மாசம் ஆகவும் குணமாய் விடுகிறதும் பெரிய காரியம் அது.

* * *

அம்மாளுக்கு என் அன்பை சொல்ல வேணும்.

* * *

சோமு வீட்டில் எல்லோரும் சௌக்கியந்தானே. அவனு டைய மனசும் ரொம்பவும் கஷ்டப்பட்டுவிட்டது.

'கலைமகளில்' அவன் பாடல் ஒன்று வந்திருக்கிறது பெரிய விஷயத்தை அனுபவித்துப் பெரிய முறையிலேயே பாடி இருக்கிறான். மிக்க சந்தோஷம்.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
**21-2-52**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கலியாணத்துக்குக் குற்றாலம் வாய்த்தது; நண்பர்களுடைய பராமரிப்பு வாய்த்தது; எல்லாவற்றையும் விடத் தங்கள் வான் வண்டி வாய்த்தது. பகீரதனோடு போட்டி போட்டு சகல வேலைகளையும் செய்து முடித்தது; சாமான்களை எல்லாம் கொண்டு வந்து சேர்த்தது; விருந்தினர்களை வரவேற்றது; வழியனுப்பியும் வைத்தது. அடிக்கடி வண்டியின் வேலைகள் எல்லாம் என் கண்முன் வந்து நிற்கின்றன. ரொம்ப சந்தோஷம்.

தாங்களும் மற்ற அன்பர்களுமாகச் சேர்ந்து, பெரும் பாரமான வரிசைகளை அப்பாவி தீபதங்கம்மாளது தலையில்த் தூக்கி வைத்துவிட்டீர்கள். அவைகளை எல்லாம் மத்தளம்பாறையில் சேர்க்க வேணும். Godrej அலமாரி அல்லது அதைப் போன்ற ஒரு அலமாரி ஒன்று வேண்டும். ஆனால் ரொம்பப் பெரியதாய் வேண்டாம். நடுத்தரமான அளவுள்ள அலமாரி போதும். கண்ணாடி ஒன்றும் வேண்டாம். சாதாரணக் கதவாக இருந்தால் போதும். விலைப் பட்டியல் ஒன்று அனுப்ப வேண்டும். அளவு முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு வேண்டிய அலமாரியை எழுதுகிறேன். திருச்சியில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அம்மாள் குழந்தைக்கு என் அன்பு.

சோமுவிடமிருந்து அற்புதமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. படிக்கப் படிக்க மனசு சாந்தம் அடைகிறது. தேகம் சௌகரியம் அடைகிறது.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
13-4-52

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

அன்பான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அழகான டையரியும் கிடைத்தது மிக்க சந்தோஷம். வாஸ்தவந்தான். ஒற்றிப் போட்டு ஒற்றிப் போட்டுக் கடிதம் எழுதுவது காரணமாகத் தாமசப்பட்டுவிட்டது. மன்னிக்க வேணும். ராஜாஜியின் விஷயங்களை அனுபவித்து அழகாய் எழுதியிருக்கிறீர்கள். திருவள்ளுவர் பேசுகிறது போலவும் சில வேளை தோன்றுகிறது. அடிப்படையான உண்மைகளையும் லக்ஷியங்களையும் அப்படி உட்கொண்டிருக்கிறார்கள் ராஜாஜி.

ராஜாஜி வந்தார்கள். நாம் பிழைத்தோம். அவ்வளவுதான்!

V. N. ராஜனும் ஜெயா ராஜனும் செங்கோட்டையில் முகாம் போட்டிருக்கிறார்கள். தினம் மாலை குற்றாலம் வர வேண்டியது, சாப்பிட வேண்டியது, இரவு பத்து மணிக்குச் செங்கோட்டை திரும்பிவிட வேண்டியது என்று நடந்து வருகிறது. நாளை ஞாயிற்றுக்கிழமை. பகல் முழுவதும் குற்றாலத்திலேதான். 15உ திருவனந்தபுரம் திரும்புகிறார்கள். குழந்தைகள் கோவையில்த்தான்

இருக்கிறார்கள். 20ல திருவனந்தபுரம் வந்து பெற்றோர் களோடு கலந்துகொள்கிறார்கள். பள்ளியும் பரீக்ஷையும் இவ்வளவு கொடுமை செய்கின்றன. அண்ணாமலை வெண் பாவைத் தாங்கள் சரியானபடி அனுபவிக்கிறீர்கள். கவி என்றால் திங்கிறதற்கான காய் பழம் ஏதாவது இருக்க வேண்டும் என்று பள்ளிக் கூடத்தில்ச் சொல்லித் தீர்த்து விட்டார்கள். Give the substance, summarise; பொழிப் புரை எழுதுக, கருத்துரை எழுதுக, கற்பிக்கப்படும் நீதி என்ன என்று கேட்டுக் கேட்டுச் சாப்பாட்டு ராமன் களாக் ஆக்கிவிட்டார்கள் மாணவர்களை. மாணவர்கள் ஆசிரியர்களாக முற்றி விடுகிறார்கள். தீர்ந்தது காரியம்.

தாமரைப் பூவைப் பார்த்தால் துவையல் அரைக்கத்தான் பார்ப்பான். சாப்பாட்டு ராமன் தானே ஆசாமி. பிரம்மா வீற்றிருக்கிறார், சரஸ்வதி லக்ஷ்மி தேவதைகள் வீற்றிருக்கிறார்கள், கடவுளே பிரசன்னமாகிறார் என்ற கருத்தெல்லாம் போய்விடுகின்றன.

அண்ணாமலை வெண்பாக்கள் புஷ்பங்கள். கடவுள் பிரசன்னமாகிற புஷ்பங்கள். இப்படிப் பார்த்ததினாலேயே புலவர்கள் கண்ணுக்குத் தென்படாமலே போய்விட்டன பாடல்கள். பாடல்களின் அருமையையும் பக்தியையும் நான்தான் முதல் முதலாகக் கண்டேன் என்று பெருமை யடித்துக்...

தமிழில் எத்தனையோ பாடல்கள் தெய்வப் பாடல்களாய் இருந்து மறைந்து போயிருக்கின்றன. உபயோகம் இல் லாத பாடல்கள் வேண்டாதபடி எழுதி எழுதி நம் கைக்கு வந்திருக்கின்றன. கம்பரது பாடல்கள் ஆயிரக் கணக்காகவே தொலைந்து போயிருக்கின்றன. போனவை போனவை என்றுதான் எண்ணி முழுக வேண்டி இருக் கிறது.

கடிதங்களைக் காலா காலத்தில் எழுதாததால்த் தங் களுக்குக் கவலை உண்டாய்விட்டது. அன்பு அப்படி

யெல்லாம் தங்களைக் கஷ்டப்படுத்துகிறது. மொத்தத்தில் உடம்பு சௌகரியப்பட்டு வருகிறது. நேற்று மாலை செங்கோட்டைக்குப் போய் ராஜன்கள் கொடுத்த சிற்றுண்டி விருந்தைச் சாப்பிட்டுக் கூட வந்தேன். மாடிப்படி ஏறி இறங்கினேன் கஷ்டம் இல்லாமலே.

அம்மாளுக்கும் குழந்தைகளுக்கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
***3-6-52***

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

சுமார் இருபது நாளாக்கவே இங்கே சாரல். ஆனாலும் நேற்று முதல்தான் கூட்டம் வர ஆரம்பித்திருக்கிறது. ஆனாலும் சாரலுக்கு என்று மனுஷாள் இன்னும் வரவில்லை.

செம்மங்குடி சீனிவாச பாகவதருடைய மகள் கல்யாணம் மே மாதம் 19உ குற்றாலத்திலேயே நடந்தது. பெரிய மோக்ஷா கலியாணம். பாட்டுக் கச்சேரிகளுக்குக் கேட்பானேன். பட்டம்மாள் ஒரு நாள்க் கச்சேரி. அரியக்குடி கச்சேரி இரண்டு. முடிவாக எம். எஸ். கச்சேரி. முதல் இரண்டு கச்சேரிகளையும் கங்கணம் கட்டிக்கொண்டு சிரக்கம்பனம் செய்து அனுபவித்துவிட்டார்கள். எம்.எஸ். கச்சேரியை அனுபவிப்பதற்கு அப்படிக் கங்கணம் கட்ட வேண்டியதில்லைதானே. இயல்பாய் இசையில் ஈடுபட்டு அனுபவித்தார்கள். தென்காசி தாலுக்காவையே கொட்டகையில்க் கொண்டுவந்து கொட்டிவிட்டார்கள். நல்ல

சுருதியோடும், சுத்த சுரங்களோடும் ஊருக்குத் திரும்பி ஞர்கள் வந்தவர்கள்.

மறுநாள் காலி நாள்தான்.

பிருந்தா அம்மாள் கலியாணத்துக்கு வந்தவர்தான், எனக்காக இங்கே தங்க நேர்ந்தது. காலி நாளாக இருந்த தால் என்னுடைய வீட்டில்ப் பாடுவதாகப் பிரஸ்தாபித் தார். கலியாண வீட்டுக்காரருக்கு இது தெரிய வந்தது. அது என்னத்துக்கு; கலியாண வீட்டுக்காரர் ஜாகை வீட்டிலேயே பாடிவிட்டால்ப் போகிறது என்று பிற் பகல் இரண்டு மணிக்கு (2 p.m.) பிருந்தா கச்சேரியை வைத்தார்கள். டி. கே. சி.க்காகத்தான் பாடுகிறேன் என்று வேறு சொல்லிவிட்டார் பிருந்தா. இரண்டரை மணி நேரம் பாட்டுக் கச்சேரி நடந்தது. பாகவதர்கள் முன் னணியில் சப்பணம் போட்டு உட்கார்ந்து இந்தப் பாட்டு அந்தப் பாட்டு என்று அடி எடுத்துக்கொண்டே இருந் தார்கள். யோசனை பண்ணப் பாடகிக்கு இடம் கொடுக் கவே இல்லை. முத்தினா வருவதற்கு முன்னமேயே அடுத்த பாட்டைத் தூண்டிவிடுவார்கள். இப்படியாக இரண்டேகால் மணி நேரம் ஆய்விட்டது. டி. கே. சி.யும் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார். ஒரு தமிழ்ப் பாட்டு வரவில்லை. எல்லாம் தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம், 'சைபீரியன்', 'ஹாட்டெண்டாட்' பாஷை கள். கடைசியில் போகட்டுமே என்று தெர்ப்பா வஸ்திரம் ஸமர்ப்பயாமி என்றாற்போல இரண்டு துரிதத் தமிழ்ப் பாடலைச் சொல்லி மங்களம் பாடச் சொல்லிவிட்டார்கள்.

புரியாத பாஷையாக இருந்ததால், சிலருக்கு அதாவது நெடுகிலும் தனம்மாள் வீட்டு சங்கீதத்தில்த் தோய்ந்த வர்களுக்கு சங்கீதத்தின் அற்புதமான உருவத்தை உற்று நோக்கி அனுபவிக்க முடிந்தது; திளைக்கவே முடிந்தது.

யார் யாருக்கு முடிந்தது. அடியெடுத்துக் கொடுத்த செம்மங்குடி, எம். எஸ்., மாயவரம் கிருஷ்ணய்யர், சதாசிவம், கடைசியாக நான். இத்தனை பேருக்குத்தான்.

மற்றவர்கள் சுமார் ஐம்பதுபேர் (பாகவதர்களும் ரசிகர்களும் சேர்ந்துதான்) அனுபவிக்கவே இல்லை. அனுபவித்து விடக் கூடாது என்பதுதானே கோரிக்கை. கோரிக்கை நிறைவேறியது.

பத்துப் பேர் அனுபவிக்கிறார்கள் என்று ஏற்பட்டுவிட்டால் மோசந்தானே. அபசுரக் கச்சேரிகள் பாடு என்னாகும்!

சமுதாயத்தோடு கலக்காமல் இருந்தால் எந்த விஷயமும் பிரயோசனம் இல்லாத விஷயந்தான். யுனிவெர்சிட்டிக் காரியம் அப்படித் தொலைந்தது. சங்கீதக் காரியமும் மேற்படி மேற்படிதான்.

பாகவதர்களுக்கு சங்கீதம் செத்தாலும் குற்றம் இல்லை; ஜனங்கள் அனுபவிக்காமல் அதை ஒதுக்கியோ மறைத்தோ வைத்துவிட வேண்டும் என்று ஒத்துப் பேசிச் செய்கிற காரியம் அவர்களுடைய லக்ஷியம். அவ்வளவுதான். பாகவதர்களுடைய காரியம் அப்படி இருக்கட்டும்.

* * *

பிருந்தா இன்று வரை இங்கேதான் இருந்தார். தினம் ஒரு மணி நேரம் தமிழ்ப்பாட்டு. அற்புதமான சங்கீதம். உள்ளத்தை உருக்கிப் பரவச நிலைக்குக் கொண்டு போய் விடுகிறது. இதை அங்கீகரிக்க ஆளில்லை நம்மிடையே. தமிழ்நாட்டில்த்தானே இருக்கிறது. அர்த்தமாகாத பாஷைக்கு ஏன் போகிறான் அவன். பொல்லாத சாபம் ஒன்று அவனைச் சூழ்ந்துகொள்கிறது. எப்போது உருப்படப் போகிறதோ நாடும் கலையும். தெரியவில்லை.

தங்கள் அன்பான கடிதத்தில் பிருந்தாவின் பாடல் சிறந்த ஔஷதம் என்று எழுதியிருக்கிறீர்கள். மிக்க உண்மை.

இன்று சென்னைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். பாடல் இல்லை.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார்

திருக்குற்றாலம்
*13-1-53*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

மங்களமான பொங்கல் வருகிறது. வீடு அழகாய் இருக்கிறது. ஊர் அழகாய் இருக்கிறது. நாடே அழகாய் இருக்கிறது. மக்கள் உள்ளத்தில் திருப்தியும் ஆனந்தமும் குடிகொண்டிருக்கிறது.

ராமனது உள்ளத்தில் நடுக்காட்டில் ஒரு சமயம் திருப்தியும் ஆனந்தமும் நிறைந்து நின்றது. எப்போது?

நடுக்காட்டில் ராமன் சீதை இருவரும் தங்குவதற்கு அழகான குடிசை கட்டிவிட்டான் லக்ஷ்மணன். குடிசையின் வேலைப்பாட்டை பார்த்த ராமனுக்கு உள்ளம் பூரித்து விட்டது.

செல்வம் என்று ஒன்று இல்லாதவன் காரியம் அபாரமாய் அல்லவா இருக்கிறது.

"மேவு கானம்
    மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய
    பாதமும் போந்தன;
தாவில் எம்பிகை
    சாலை சமைத்தன;

யாவை யாதும்
இலார்க்கியை யாதவே!''

ராமனது உள்ளத்தில் நிறைந்து நின்ற திருப்தியும் ஆனந்தமும் நமக்கும் உண்டாவதாக.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

(குறிப்பு: அச்சடித்த பொங்கல் வாழ்த்து)

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
**21-2-53**

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

பட்டாபிக்கு 16ௗ அனுப்பிய கடிதம் கிடைத்தது. அபூர்வ மான சரக்குத்தானே. ரொம்ப ரொம்ப சந்தோஷம்.

பொங்கல் வாழ்த்தை நன்றாய் அனுபவித்திருக்கிறீர்கள். டாக்டர் C. P. ராமசாமி ஐயர் அவர்களும் வாசித்துவிட்டு மிக்க ஆர்வத்தோடு பாராட்டி எழுதியிருக்கிறார்கள். கம்பரைப் பலருக்கும் இப்போது இனம் காண முடிகிறது.

தமிழ்க் களஞ்சியம் கல்கியில் வராவிட்டால் ஏமாற்றம் ஏற்படுகிறது தங்களுக்கு. தமிழ்ப் பாடல்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டால் அப்படியெல்லாம் ஏமாற்றம் ஏற் படுவது இயல்பு. சிலருக்குக் கோபமே வருகிறது. ஆனால்க் கல்கிக்காரர் அப்பாவிகள். என்ன செய்வார்கள். இடம் இல்லாமல்ப் போய்விடுகிறது. புது எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் அவதரித்துவிட்டார்கள். அப்படி யானால் அவர்களுக்கும் போகத்தானே பழைய ''எழுத் தாளர்களுக்கு'' (கவிகளுக்கு) இடம் கிடைக்கும். தாங்கள்

அனுபவித்தும் பாராட்டுகிறீர்கள் பாடல்களை. எவ்வளவோ ஊக்கத்தைத் தருகிறது அது எனக்கு.

தமிழ்க் களஞ்சியத்தில் எல்லா தானியங்களும் வந்து சேரும். முத்திலிருந்து வரகு வரையில் வந்து சேரும். கம்பர் பாடல், திருவாசகப் பாடல், தேவாரம், குறள், பட்டிக் காட்டுப் பாடல் எல்லாமே வரும். எல்லாவற்றையும் அனுபவிக்கும் Cosmopolitan தாங்கள். தமிழின் யோகந் தான். என்னுடைய யோகமுந்தான்.

அம்மாள் குழந்தை எல்லோருக்கும் என் அன்பு.

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

**டி. கே. சிதம்பரநாத முதலியார்** திருக்குற்றாலம்
*11-3-53*

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

10உக் கடிதம் கிடைத்தது. இன்னும் 15 நாளில் இங்கே வருகிறீர்கள். மிக்க சந்தோஷம். தமிழ்ப்பாடல்களை அழகாய் அனுபவிக்கிறீர்கள். உழக்கின் மேல்ப் பெண்ணை நிறுத்தி வைத்த கலையை அழகாய்ப் பாராட்டுகிறீர்கள்.

தமிழ்க் களஞ்சியம் இனிமேல் ஒழுங்காய் வரும் என்று எண்ணுகிறேன். தமிழ்க் களஞ்சியம் பாடல்களையும் தாங்கள் அனுபவிக்கிறீர்கள். தமிழ் ஆசிரியர்கள் யாரும் அனுபவித்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு என்னத்துக்கு அந்தப் பாடல்கள்.

பாஸ்கரன் கலையையும் தமிழையும் கொண்டு தஞ்சை வட்டத்தை அபாரமாய்க் கவருகிறார்கள். மிக்க சந்தோஷம்.

சோமு இன்று காலே வந்தார். மிக்க திருப்தி. குழந்தை அம்மாள் இருவருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
13-4-53

ஓம் விஜய வருஷம்

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

வருஷப் பிறப்பு என்றாலே ஒரு குதூகலம். இன்று முதல் எல்லாம் ஒழுங்காய் ஜோராய் இருக்க வேண்டும் என்று எண்ண ஆரம்பிக்கிறோம். நல்லதுதானே அது.

நமக்குக் கிடைத்ததெல்லாம் மூன்று வருஷப் பிறப்புகள் தான். தை மாசம் ஒன்று; சித்திரை மாசம் ஒன்று; ஜனவரி மாசத்தையும் கணக்கில் வைத்துக்கொள்ளுவோம். நல்ல காரியம் எந்தத் திசையிலிருந்து வந்தால் என்ன? நல்லது தான்.

இன்னும் நாலைந்து வருஷப் பிறப்பு இருக்கலாகாதா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

வருஷப் பிறப்போடு வாழ்க்கை புதிதாகிறது. புது நிர்வாகமே உண்டாகிறது. புது ராஜாவே பிறக்கிறார்.

ராமன் பிறந்தான். கம்பர் அதை அனுபவிக்கிறார்.

ராமராஜ்யம் வரப்போவதால் அக்கிரமம் எல்லாம் அடியோடு தொலையப் போகிறது — ஆம். அவ்வளவு கொடிய பாதகங்களைச் செய்திருக்கின்றன அந்த அக்கிரமங்கள்.

அப்படியே எட்டாத நிலையிலிருக்கிற தர்மங்களும். முன் ஜென்மத்தில் மேலான தர்மங்களைச் செய்திருக்கின்றன. அதனால் நல்ல காலம் அந்த தர்மங்களுக்கு.

விரிந்திடுதீ வினைசெய்த
வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையில் மறையறைந்த
அறஞ்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்து இவ்
எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க்
கௌசலைஎன் பாள்பயந்தாள்.

(தீவினை: பாதகம்; இருங்கடகக் கரதலம்: சோபிதமான காப்பணிந்த கை; கருங்கடலே: அபார சக்தி வாய்ந்த ராமன்தான்; பயந்தாள்: பெற்றாள்)

ராம ராஜ்யம் வருகிறது! வரட்டும்!

தங்கள்
**டி. கே. சிதம்பரநாதன்**

(குறிப்பு: அச்சடித்த—பல நண்பர்களுக்கு அனுப்பிய — புத்தாண்டு வாழ்த்து)

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
7-6-53

அருமை நண்பர் பட்டாபி அவர்களுக்கு,

நமஸ்காரம்.

கடிதம் கிடைத்தது. மதுரையில் அப்பா அம்மா மற்றும் எல்லோரும் சுகந்தானே.

தமிழ்க் களஞ்சியத்தை அனுபவிக்கிறீர்கள். R K S பற்றி எழுதிய கட்டுரையையும் படித்திருக்கிறீர்கள். மிக்க சந்தோஷம். தங்களைப் போலக் கருத்தூன்றிப் படிக்கிற வர்கள் மிக சொற்பம்.

இங்கே இன்னும் சாரல் ஆரம்பிக்கவில்லை. ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. தண்ணீர்க் கஷ்டம் இதுவரை இல் லாத மாதிரி இருக்கிறது. வண்டி வைத்துத் தண்ணீர் வருகிறது. அதற்கும் மோசம் வந்துவிடக் கூடாதே என்று ஒரு பயமும் கூடத்தான்.

குழந்தை அம்மா இருவருக்கும் என் அன்பு.

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

# பிழைத்திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 22 | சௌக்கியமாகவே | சௌகரியமாகவே |
| ,, | 25 | சௌக்கியமாய்ப் போய் விட்டது | சௌகரியமாய்ப் போய் விட்டது |
| ,, | 27 | அசௌக்கியமும் | அசௌகரியமும் |
| 10 | 24 | பாதுகாப்பில்தான் | பாதுகாப்பில்த்தான் |
| ,, | 28 | வியாபகச் சக்தி | வியாபக சக்தி |
| 11 | 9 | வெளிக்காட்டினால்தானே | வெளிக்காட்டினால்த்தானே |
| ,, | 15 | பிரயோசனமாய்ப் போய் விட்டது | பிரயோசனமாய்ப் போய் விட்டது! |
| 12 | 19 | விஷயங்களில் தங்கள் | விஷயங்களில்த் தங்கள் |
| 13 | 2 | சிறு வயதில் | சிறு வயசில் |
| ,, | 3 | இலக்கியத்தை யும் | இலக்கியத்தை |
| ,, | 14 | இன்னும் என் ஞாபகத்திற்கு | இப்பொழுதும் என் ஞாபகத்திற்கு |
| 13 | 24 | தாங்கள் ஊட்டிய | ''தாங்கள் ஊட்டிய |
| 14 | 19 | ஜெர்மன் பாஷையின் | ஜெர்மன் பாஷை, |
| 15 | 15 | தெலுங்கருக்கும் பொதுதான் | தெலுங்கருக்கும் பொதுத்தான் |
| 17 | 10 | ரோட்டம் | தோட்டம் |
| 17 | 23 | அதாவது | அதாவது: |
| ,, | 26 | எல்லாம் வளரும் | எல்லாம் வரும் |
| 19 | 18 | தாங்கள் எழுத வேணும் | தாங்கள் கேட்டுக் கடிதம் எழுத வேணும் |
| 19 | 2 | தென்காசிவாசிகளுக்கு கலை உணர்ச்சி இருக்கலாம். | தென்காசிவாசிகளுக்கு கலை உணர்ச்சி இருந்து கொண்டிருந்தால் இன்னும் லக்ஷம் வருஷத்துக்கு 'இருக்கலாம். |
| 20 | 17 | வைத்தி செய்கிறார் | வைத்தியம் செய்கிறார் |
| 21 | 17 | சௌக்கியமே | சௌகரியமே |
| ,, | 24 | உதவியாயிருக்கும் | வசதியாயிருக்கும் |
| 23 | 16 | கம்பரோ | கம்பரே |
| ,, | 19 | நடன ஜதியால் | நடன ஜதியில் |
| 24 | 18 | கடிதங்களைதான் | கடிதங்களைத்தான் |
| 27 | 16 | கணக்கில்தான் | கணக்கில்த்தான் |
| 28 | 7 | நடனக் கச்சேரியைப் பற்றி சில | நடனக் கச்சேரியைப் பற்றிச் சில |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 29 | 17 | களியும் | கனியும் |
| ,, | 20 | சுழிசல் | குழிசல் |
| ,, | 25 | மார்பை தட்ட | மார்பைத் தட்ட |
| 30 | 14 | திருவையாற்றுக்கும் போனது பத்தி | திருவையாற்றுக்கும் போனது பற்றி |
| 33 | 22 | ஆனந்தி ராதாவின் | ஆனந்தியின் |
| ,, | 24 | உரிய குழந்தைகள்தான். அவள் | உரிய குழந்தைதான் அவள். |
| ,, | 25 | அவளும் ராதவும் | அவளும் ராதாவும் |
| 34 | 9 | ஆவது இல்லை. சாதாரணமாக, | ஆவது இல்லை— சாதாரணமாக. |
| ,, | 12 | வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். | வர்க்கத்தைச் சேர்ந்தவள். |
| ,, | 32 | கோபமேதான்? | கோபமேதான். |
| 35 | 2 | அரிது | கஷ்டம் |
| ,, | 15 | சேர்ந்து உபசாரம் | சேர்ந்து அபரிமிதமாக உபசாரம் |
| 36 | 10 | அமைவதற்காக ரோட்டடியிலேயே ஏற்பாடாகிறது | அமைவதற்காக ஏற்பாடாகிறது |
| ,, | 27 | நாடுதும் வா நெஞ்சே நாரா யணன் பதிகமே— கூடுதும் வா மெய்யடியார் கூட்டங்கள் கூடுதும் வா வீதியெங்கும் கார் அகலின் வீசு புகைவாசம் எழும் ஆதியிந்த ஒரான் அடி | நாடுதும்வா நெஞ்சமே நாரா யணன் பதிகள்;— கூடுதும்வா மெய்யடியார் கூட்டங்கள் கூடுதும்—வா வீதியெங்கும் கார் அகிலின் வீசுபுகை வாசம் எழும் ஆதியிந்த ஞூரான் அடி |
| ,, | 28 | இந்த ஊருக்கு | இந்த ஞூருக்கு |
| 37 | 19 | வெகு ருசியில் | வெகு ருசியாய் |
| ,, | 21 | பழத்தை பரிமாறுகிறது | பழத்தைப் பரிமாறுகிறது! |
| 41 | 2 | சந்தோஷமாக | சந்தோஷமாய் |
| ,, | 16 | ஆடாதாரோ! | ஆடாதாரே! |
| 42 | 9 | ரேடியோக் கமிட்டி இருக்கலாம் | ரேடியோக் கமிட்டி மீட்டிங் குக்கு இருக்கலாம் |
| 43 | 13 | காரியமில்லை | காரியமல்ல |
| ,, | 16 | எல்லாம் அப்படித் தானே | எல்லாமே அப்படித்தானே |
| 45 | 4 | பார்ப்பவர். இதயத்துக்குள் | பார்ப்பவர் இதயத்துக்குள் |
| ,, | 24 | இங்கு நேற்று | நேற்று இங்கு |
| 46 | 21 | ருசிப் பார்த்தார்கள் | ருசி பார்த்தார்கள் |
| ,, | 7 | அத்தையம்மாளோடு | அத்தையம்மாளது |
| 47 | 19 | பிறகு | பிறகே |
| 48 | 6 | வருவதாக இருந்தாலும் | வருவதாக இருந்ததாலும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 48 | 14 | 22-11-46 | 26-11-46 |
| ,, | 15 | தங்கள் கடிதம் கிடைத்தது | தங்கள் கடிதம் (22-11-46) கிடைத்தது. |
| ,, | 21 | தூத்துக்குடிக்குப் போனேன் | தூத்துக்குடிக்குப் போனேன்— |
| 49 | 1 | பல சிற்றுண்டி விருந்துகளும் நடத்தினர்கள் | பல சிற்றுண்டி விருந்துகளும் பேருண்டி விருந்துகளும் நடத்தினர்கள் |
| ,, | 11 | பாம்பேக்குப் போகலாம் | பாம்பேய்க்குப் போகலாம் |
| 53 | 18 | அவர்களுடைய பேந்தல்களைக் | அவர்களுடைய பொக்கங்களைக் |
| 54 | 30 | எப்படி இருக்கிறது காரியம். | எப்படி இருக்கிறது காரியம்! |
| 55 | 6 | நின்னவதாம் | நென்னல்தான் |
| ,, | 10 | பரவசத்துக்கு | லாகவத்துக்கு |
| ,, | 15 | இன்பங்கள் | இன்கண்கள் |
| ,, | 18 | எமக்கும் | நமக்கும் |
| 57 | 3 | Hurtley Palmers | Huntley Palmers |
| 58 | 5 | கிளம்பிவிட்டார்கள் | கிளப்பிவிட்டார்கள் |
| 59 | 9 | வளைத்தும் பண்படுத்தி | வளைத்துப் பண்படுத்தி |
| 60 | 3 | அவர்களுக்கு தாங்கள் எழுதிய | அவர்களுக்கு—தாங்கள் எடுத்து எழுதிய |
| 63 | 5 | தத்வ்வரூபமாக | தத்ஸ்வரூபமாக |
| ,, | 6 | அதுதான். | அதுதானே. |
| 64 | 7 | இந்தமாகவே | இந்த விதமாகவே |
| 68 | 11 | ஆவுடையப்பபிள்ளை அவர் | ஆவுடையப்பபிள்ளை அவர்கள் |
| ,, | 21 | அப்படி நட்புக் கொண்டேன் | அப்படி ஒட்டிக் கொண்டேன். |
| 70 | 23 | எல்லாவற்றிற்கும் அம்மாள் | எல்லாவற்றிற்கும் மேலாக அத்தை அம்மாள் |
| 72 | 2 | அகராதியைப் | அகராதியில் |
| ,, | 17 | கொடுக்க வேண்டும். அந்த உண்மை | கொடுக்க வேண்டும் அநத உண்மை. |
| 72 | 3 | ஆடவர் வர்க்கத்தில் | ஆடவர் வர்க்கத்தில். |
| 75 | 11 | அடித்து பங்குனி | அடித்த பங்குனி வெயில் |
| 76 | 2 | இதற்கும் பயிற்சி | இதற்குப் பயிற்சி |
| 79 | 11 | எப்படி இருக்கிறது. | எப்படி இருக்கிறது! |
| 79 | 14 | கலை விழா அங்கே: | கலை விழா. அங்கே |
| ,, | 26 | படங்களால் மாறி மாறி | படங்களால் – மாறி மாறி |
| 80 | 9 | நா. கொண்டு | நான்று கொண்டு |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 85 | | தாய்மார்கள் கலெக்டர் ஜெயம் ராஜன் | தாய்மார்கள், கலெக்டர், ஜெயம் ராஜன், |
| 86 | 26 | கடிதம் யாதொன்றும் | கஷ்டம் யாதொன்றும் |
| ,, | 27 | கடிதந்தான் எத்தனை பக்கமாக ஓடினாலும் | கடிதத்தால், எத்தனை பக்கமாக ஓடினாலும், |
| 87 | 9 | சேர்ந்தான். | சேர்ந்தேன். |
| 88 | 1 | (Mrs. Paklavi) | (Mrs. Pattabi) |
| 88 | 4 | பிரமாதம் | பிரமாதப் |
| 93 | 16 | உறவாடல் கிடைத்ததே | உறவாடக் கிடைத்ததே |
| ,, | 21 | கம்பராமாயணம் பாடலை | கம்பராமாயணப் பாடலை |
| ,, | 24 | கொறித்துக் கொண்டிருக்கலாம் | கொழித்துக் கொண்டிருக்கலாம் |
| 94 | 2 | என்ன சொல்வது தெரியவில்லை. | என்ன சொல்வது என்று தெரியவில்லை. |
| ,, | 3 | செய்த அமுதத்தால் | செய்து அமுதளித்தால் |
| 96 | 19 | குறிப்பு: 6-2-49 | 6-2-49 குறிப்பு: |
| 102 | 12 | கன்னியாகுமரி அம்மானைச் | கன்னியாகுமரி அம்பாளைச் |
| 104 | 6 | ஜெயராஜன் | ஜெயா ராஜன் |
| 113 | 8 | நயமுடைய | நம்முடைய |
| 116 | 6 | சௌகரியத்தை | அலௌகிகத்தை |
| 119 | | குழந்தைகளுக்கும் | குழந்தைக்கும் |
| 120 | 1 | 'சாகாராவும்' | 'சகாராவும்' |
| 123 | 4 | சருக்கும் | சருக்கம் |
| 131 | 16 | whopping cough | whooping cough |
| 131 | 17 | முத்தினா | முத்திரை |
| 134 | 12 | பட்டாபிக்கு 16உ அனுப்பிய | 16உ அனுப்பிய |
| 135 | 26 | அபாரமாய்க் கவருகிறார்கள். | அபாரமாய்க் கிளறுகிறார்கள். |